Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් ஒக். 27-நவ. 02, 2002

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 483



## பொதுத் தேர்தலா? மாற்று அரசாங்கமா?



## இடைக்கால நிருவாகம் கைவிடப்படுமா?





## நடிகைக்கு கப்பம் செலுத்திய தயாரிப்பாளர்

## ஆன்மீகம்

### மன அமைதி எங்கே...?



சேற்றில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த பன்றியை ஆபிரஹாம் லிங்கன் காப்பாற்றினார். அவர் நண்பன் கேட்டான். "அமெரிக்க ஜனாதிபதியாகிய நீங்கள் சேற்றிலே இறங்கிய அந்தப் பன்றியைக் காப்பாற்றியதற்குக் காரணம் என்ன?" லிங்கன் சொன்னார். "அதைக் காப்பாற்றவில்லை என்றால் எண்ணங்கள் என்னைத் துரத்தித் துன்புறுத்தும். சேறும் சகதியுமான பன்றி கண் முன்னே நிற்கும். அதை யாராவது காப்பாற்றியிருப்பார்களா? இல்லை அது ஆபத்தினால் சேற்றில் புதைந்து இறந்திருக்குமா? என்னாகியிருக்கும்? என்று என் கனவிலும் பன்றி என்னைத் துரத்தியிருக்கும். பெரிய இரகசியம் இதில் ஒளிந்திருக்கிறது. மற்றவர்களின் துன்பத்தைத் துடைத்தால், மனம் இன்புற்று அமைதி பெறும். மற்றவர்களை அழித்து தான் மட்டும் வாழ நினைப்பவன் என்றுமே தூங்கமாட்டான், ஒரே தூக்கம் வரும் வரை".

தி.குணவர்த்தன, களுவாஞ்சிகுடி.

### இறைவனுக்கே அஞ்சுங்கள்

இயேசு ஓர் நாள் போதித்துக் கொண்டிருக்கையில், கூடியிருந்த மக்களைப் பார்த்துப் பின்வருமாறு கூறினார். "உடலைக் கொன்ற பின், அதற்கு மேல் ஒன்றும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம்; யாருக்கு அஞ்ச வேண்டுமென உங்களுக்குக் காண்பிப்பேன், கொன்ற பின் நரகத்தில் வீழ்ந்த வல்லவருக்கே அஞ்சுங்கள்" இந் நிகழ்வானது பரிசுத்த வேதாகமத்தில் லூக் 12:4-5 வசனங்களில் கூறப்பட்டுள்ளது.

எமது வாழ்வில் பல சந்தர்ப்பங்களில் நாம் நன்மையான காரியங்களைச் செய்ய, நீதிக்காகப் பரிந்து பேச, உண்மையை எடுத்துக் கூற, முன்வந்து உதவி புரியத் தயங்குகின்றோம், விலகுகின்றோம். இவ்வாறு செய்வதால் எமது சரீர, உலக செல்வங்களுக்குப் பாதிப்பேற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகின்றோம். ஆனால் எமது மீட்பரான இயேசு கிறிஸ்துவோ மேற்காட்டிய பொன் மொழிகளை எவரும் வாய் வார்த்தைகளாலான அறிவுரையாக மட்டும் கூறி நிறுத்தி விடாது, தமது வாழ்விலும் அதனைச் செயற்படுத்திக் காட்டியுள்ளார். கொடிய யூதர்கள் கையில் தம்மை முழுதும் ஒப்படைத்து, வேதனைகளைப் பொறுமையுடன் அனுபவித்து, எமது பாவங்களுக்காகப் பலியாகி, எமக்கு மீட்பைப் பெற்றுத் தந்து மாட்சிமை பெற்றார்.

நாமும் நமது ஆன்மாவைக் காத்து, தூய்மையாகப் பராமரித்து, அதன் உரிமையாளரான இறைவன் பாதத்தில் சமர்ப்பித்து, நித்திய பேரின்ப வாழ்வைப் பரிசாகப் பெற்றுக்கொள்வோம்.

வ.மரியசுசிலா, சிலாபம்.

### வறுமையும் செல்வமும்

"வறுமை சில மனிதர்களை இறை விரோதச் செயல்களில் சேர்த்து விடுகிறது. அதேபோல் செல்வமும் சிலரின் கண்களை மறைத்து, இறைவனையே மறக்கச் செய்துவிடுகின்றது." என்று முகம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் ஹஸரத் அபூ ஹுறைறா (றஹ்)

இவ்வுலகில் ஆண்டவன் சிலரை ஏழ்மையைக் கொடுத்துச் சோதிக்கின்றான். இறை நம்பிக்கையைச் (ஈமான்) சோதிப்பதற்காகவே அல்லாஹ் அவ்வாறு செய்கின்றான். இன்னும் சிலரை செல்வத்தை வாரி வழங்கி அவர்களின் இறை பக்தியைச் சோதிக்கின்றான். அவர்கள் செல்வத்தைக் கண்டு மயங்கி, இறைவனையே மறந்து, இறை விரோதச் செயல்களிலும் தமது செல்வத்தைச் செலவு செய்கின்றனர். இதனால் அவர்கள் இறைவனின் கோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகின்றனர். ஏழ்மையைக் கண்டு அஞ்சவோ, செல்வத்தைக் கண்டு மயங்கவோ கூடாது.

செல்வந்தர்களுக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே ஏழைகள் சுவனத்திற்குச் சென்றுவிடுவார்கள்.

எம்.எம்.பாத்திமா ஜஹானி மாகிர், மூதூர்-06.

## கவிதைப் போட்டி இல.480

### பரிசுக்குரிய கவிதை

#### வழிதேடும் மனிதம்

வெஞ்சமரும் பஞ்சமதும்
வஞ்சித்த தேசத்தில்
கஞ்சிக்கு வழிதேடும்
மிஞ்சிய உயிரொன்று

எம்.எச்.யுனைதீன்,
ஏறாவூர்-06.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



#### ஏக்கம்

இந்த எலும்புக் கூடு
இன்னும் சிலநாள்
உயிருடன் கிடக்கும்
அந்த உணவுப் பை
கிடைத்து விட்டால்.

மருதமுனை,
ஜஹாஸ்கான்.

#### இரக்கமற்றவன்

கார் இருளில்
கதிரவனை தேடுவதை
போல்-நீ
இரக்கமற்றவனின்
பையை பார்ப்பதா?
இப்படி.

ஆ.ஞானகுரு, பதுளை.

#### கொடிது... கொடிது...!

கொடிது... கொடிது...
வாழ்க்கையில்
வறுமை கொடிது...!
அதனிலும் பார்க்க-கொடிது;
இளமையில்
யுத்தம்...!

தாராபுரம், நிலாம்.

#### ஏக்கம்!

வறுமையின் விளையாட்டால்
வதைக்கப்பட்ட இச்சிறுவன்,
வறண்டு விட்ட தன்-
வாழ்வையும் மீறி
வழிப்போக்கரை ஏக்கத்துடன்
நோக்குவதன்
அர்த்தங்கள் எத்தனையோ?

எஸ்.ஸ்ரீ, காரைதீவு-08.

#### இவன்

கூர்ப்பினை விளக்க எனை
கூர்ந்து நோக்கும் ஆய்வாளனே
"இதன் பரிணாம வளர்ச்சியே
மனிதவர்க்கம்"
என்கிறாயா, நன்றாகப் பார்.
நான் இது அல்ல இவன்.
அலங்கோல அங்கோலாவின்
பா(வா)லில்லா ஜீவன்.

பா.வைஷ்ணவி, புத்தளம்.

#### ஏழ்மைக்கோர் எடுத்துக்காட்டு!

கூனல் முதுகு
குழிவிழுந்த கண்கள்
உலர்ந்த உதடு
ஒட்டிய வயிறு
நலிந்த தேகம்
நடக்க முடியாத கால்கள்
ஆமாம் இதுதான்
வறுமையின் வடிவமோ
பஞ்சத்தின் பிரதிபலிப்போ!

க.கமால்தீன், ஏறாவூர்.

#### நம்பிக்கை

வறுமை சேர்ந்து
வயிறு காய்ந்தது.
சுற்றம் வெறுத்து
தனிமை வந்தது
நலிவுற்று சோர்வுற்று
நடைப்பிணம் ஆயினும்
நம்பிக்கை சிறிதுண்டு...
ஈரமுள்ள யாரேனும்...!

சி.மதியழகன், திக்கம்.

#### மிதமிஞ்சிய உணவை?

வயிற்றுக்கடங்காமலுண்டு
வாந்தியெடுப்பவரே
உடம்பில் சுவறாத அந்த
ஒரு சிறங்கை அரிசியையேனும்
கொடுப்பீரோ
பசியுடன் ஏங்கும்
ஏழைச் சிறுவனுக்கு?

சதீஸ்குமார் சகிலா, அரியாலை.

## கவிதைப் போட்டி இல.483



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.11.2002

கவிதைப் போட்டி இல.483
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

#### வேறு கோணத்தில்

அப்பாவின் அந்தியேட்டிக்காக
அவசரமாய் விரையும்
அப்பாவி மனிதா-நிலைமை
அறியாச் சிறுவனை
அங்கேயே மன்னித்தவிடு
அரக்கனென்று அவனுள்ளம்
அழைத்ததற்காக வருந்தி.

சிறீதரன் சசிதா, அராலி.

#### பசியாற தெருவென்ன?

எச்சிலென்ன கஞ்சலென்ன
சோறாய் உண்ணத் தகுந்தாலே
போதும்
வெயிலென்ன மழையென்ன
காலாற நடக்கும் குரங்கு போல்
ஊர்ந்தென்ன உருண்டென்ன
பசியாற வேண்டும் எனக்கிப்ப!

கே.நித்தியகலா, யாழ்.பல்கலைக்கழகம்.

#### புண்ணியம் கிடைக்கும்

எழுந்து நடக்க வியலா
ஏழைச் சிறுவன் ஐயா
பையில் உள்ள உணவை
கையில் கிடைக்கச் செய்வீர்
பிறவிக் கடலை நீந்தப்
புண்ணியம் கிடைக்கும் ஐயா.

ஹமீம்.எம்.றாசிக், பாண்டிருப்பு.

#### வேடம்

"பசி வயிற்றால்
புரண்டாடும்
ஏழைமகனுக்கு
பயிற்றாமல் அவன்
நாட்டு அரசளித்த
கலைவேடம் இது"....

ந.யசோ, தவளன்தன்ன

## உங்கள் பக்கம்

### கிழக்கின் ஹர்த்தால் கலாசாரம்

கிழக்கு மாகாண நகரங்கள் நாளாந்தம் ஹர்த்தாலும், வன்முறைகளும் நடைபெறும் கொந்தளிப்பான இடங்களாக மாறியுள்ளன.

மக்களின் இயல்பு வாழ்க்கை மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது. தத்தமது ஆதிக்கத்தை உயர்த்திக் காட்டுவதற்காக ஹர்த்தால்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. கடைகள் மூடப்பட்டு, போக்குவரத்து தடைப்பட்டு நகரங்கள் ஸ்தம்பிதம் அடைந்ததும் ஹர்த்தாலை ஏற்பாடுசெய்தவர்கள் தமது சகாக்களிடம் நகரின் "நிருவாகத்தை" ஒப்படைத்துவிட்டு முகாம்களுக்கு, அரசியல் காரியாலயங்களுக்குச் சென்று அறிக்கை விடுகிறார்கள்.

ஒவ்வொரு பிரச்சினையின் போதும் அதை ஏற்பாடு செய்தவர்கள், தூண்டிவிட்டவர்கள் 'தீயசக்திகளிடமிருந்து கவனமாக இருக்குமாறு' மக்களுக்கு வேதம் ஓதுகிறார்கள்.

சாத்தான் வேதம் ஓதுகிறது எனக் கூறுவதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதனைக் கிழக்கில் நேரடியாகக் காணலாம். மறுதரப்பு மீதான ஆத்திரத்தை மக்கள் மத்தியில் வளர்த்துவிட்டு, பதற்றம் உச்சக் கட்டத்திற்கு வந்த பின்னர் அதே மக்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள் மூலம் வேதம் ஓதப்படுகின்றது.

கிழக்கில் நடத்தப்படும் ஆட் கடத்தல்களுக்கு "இனந்தெரியாத ஆயுததாரிகள் காரணம்". ஹர்த்தால்களை ஏற்பாடு செய்வதற்குப் "பொது மக்கள் காரணம்" அந்த ஹர்த்தாலின் போது வன்முறை வெடிப்பதற்குத் "தீய சக்திகள் காரணம்." இதுதான் வழமையான ∴போமியுலா!

உண்மையில் இந்தக் குழறுபடிகளின் பின்னால் இருப்பவர்கள் யார்? என்பதை மக்கள் அறியாமலில்லை. ஆனால் துப்பாக்கிகள் மீதான பயம்: உயிர் வாழ வேண்டும் என்ற ஆசை காரணமாக வாய் திறக்கப் பயப்படுகிறார்கள்.

இந்த ஹர்த்தால்களால் மிகவும் மோசமான நெருக்கடியைச் சந்திப்பவர்கள் கீழ் மட்டப் பொது மக்கள், கூலித் தொழிலாளிகள். ஒரு நாளைக்கு வெளியில் சென்று உழைக்காவிட்டால் வீட்டில் அடுப்பெரிக்க முடியாது என்ற நிலையில் ஆயிரக் கணக்கான மக்கள் கிழக்கில் இருக்கிறார்கள்.

நாட்கணக்கில் தொடரும் இத்தகைய ஹர்த்தால்கள் யார் மீது பழி தீர்க்க மேற்கொள்ளப் படுகின்றன?

எம்.எஸ்.எம்.அன்வர்,
அக்கரைப்பற்று.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## வாசக[ர்] சாலை

**தித்திக்கும் தினமுரசே!...**

தினம், தினம் தித்திக்கும் தினமுரசே! உன் முரசில் மாய்ந்து கிடக்கும் மானிடர்களில் நானும் ஒருவன், நீ வெளியிடும் அத்துணை பிரசுரமும் பிரித்துப் படிக்கப் பிரியமாய் உள்ளது. அதிலும் மலையகத்தின் மர்மங்களை விருட்சமாய் விரிக்கின்ற முரசே! உன் முரசு எட்டுத் திக்கும் ஒலிக்க எனது வாழ்த்துக்கள்.

சு.துஷாந்தன்-ஹாலி-எல, பதுளை.

முரசே,
பல்லாண்டு பல்லாயிரம்
ஆண்டு வாழ்க
தசாப்தம் ஒன்று கழிந்தது
தடைகள் பலவும் வந்தது-
இருப்பினும்
தடங்கள் பதித்துச் சென்றது-தன்
தனித்துவம் தனைக் காத்தது
தரணியில் ஆல் போல் தழைத்தது
தன்னிகரில்லாத் தலைவன்
கரத்தில்-
மலர்ந்தது? கொஞ்சு
தமிழெனும் இனிமை தந்தது
தரம் கண்டு பிரசுரித்தது
தற்கால நிகழ்வுகளைத்
துல்லியமாகத் தந்தே
தனக்கெனத் தனியிடம் பிடித்தது-
என்றும்
நிலைபெற்று வாழிய பல்லாண்டு.

சஹறுல் எம் சலாஹுடீன், உக்குவெல.

**மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,**

அற்புதமான படைப்புகளை அழகு தமிழில் அள்ளி வழங்கும் எமது அபிமான முரசே, 481 வது முரசில் லேடீஸ் ஸ்பெஷல் தந்த ஆக்கம் சிந்தனைக்கு விருந்து படைத்தது. மேலும், அன்பு வைக்காதே அரசே, பாப்பா தந்த சிறுகதை வித்தியாசமான்தாக அமைந்திருந்தது. தரமான ஆக்கங்களை வழங்கும் முரசின் பணி மென் மேலும் சிறந்தோங்க எமது இனிய வாழ்த்துக்கள்.

மங்களா வாமதேவன், தங்க வாமதேவன்-
மட்டக்களப்பு.

**நெஞ்சின் நினைவுக்குள் நிரந்தரமாய்,**

வந்தமைந்த என் இனிய முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் உண்மையிலேயே, வரவேற்கத் தக்கவை, பிரமாதம். நீ இன்று போல் என்றும் தரமாக நீண்டு நிலைத்துப் பிரகாசிக்க எனது நல்லாசிகள்.

எம்.ஐ.எம்.றசூல், டோகா-கட்டார்.

எகிப்தில் 3000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மம்மி கர்ப்பமடைந்திருப்பதாக முரசு ஆதாரத்துடன் வெளியிட்ட தகவல் வியக்க வைக்கும் விதத்தில் சுவையாக எழுதப்பட்டிருந்தது. இங்குள்ள சில பத்திரிகைகளிலும் இந்தத் தகவல் வெளிவந்த போதும் முரசு மிகவும் தெளிவாக இச் செய்தியைத் தந்திருந்தது.

ஆர்.எம்.அஸ்லாம், ஜித்தா.

தினமுரசில் தற்போது வாரம் தோறும் ஏதாவது ஒரு புதிய அம்சம் இடம்பெற்று வருவது பாராட்டுக்குரியது. வழமையான பத்திரிகைச் சம்பிரதாயத்திலிருந்து வேறுபட்டு அனைத்துத் தரப்பினரதும் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டும் முரசு சுவையான பொழுது போக்கு அம்சங்களை மேலும் அதிகரிக்க வேண்டும். குறுக்கெழுத்துப் போட்டி ஒன்று இல்லாதிருப்பது முரசில் ஏதோ ஒரு வெற்றிடம் போல் உணர முடிகிறது.

உமாதேவி, நல்லூர்.



முரசில்
விளையாட்டுச்
செய்திகளுக்கு
வழங்கப்படும்
முக்கியத்துவம்
போதியதாக
இல்லை.
எதிர்வரும்
நாட்களில்
விளையாட்டுத்
தகவல்களை
மேலும்
அதிகமாக வழங்க
வேண்டும்
என்று
எதிர்பார்க்கிறோம்.

எஸ். பிரியதர்ஷன்,
வவுனியா,

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாகச் சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்திக் குழுவினர் பொ.ஐ.மு.வுடன் பேச்சுவார்த்தை!

**பா**ராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரையும் மீண்டும் தனது அணியில் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இன்னமும் சாதகமான முடிவை எட்டாத நிலையில், வியாழக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை இந்த இரண்டு குழுவினரும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதாவுல்லா தரப்பினர் பெரும்பாலும் தனியான குழுவாகச் செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களிலிருந்து அறிய வருகிறது.

இதற்கிடையில் முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்திக் குழுவைத் தங்களுடன் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் பொ.ஐ.முன்னணி ஈடுபட்டுள்ளது.

இது தொடர்பாக அதாவுல்லா தலைமையிலான குழுவினருடன் உத்தியோகபூர்வமற்ற முறையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டதாக பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

எவ்வாறெனினும் தாங்கள் ஐ.தே.க. அரசை விட்டு வெளியேறுவது குறித்தோ பொ.ஐ.மு.வுக்கு ஆதரவு தெரிவிப்பது குறித்தோ இன்னும் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என அதாவுல்லா கூறி வருகிறார்.

# சமாதான முயற்சியில் பன்முகத்தன்மையின் அவசியத்தை
## யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் ஹெல்கிசனிடம் எடுத்துரைப்பு!

செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் உள்ளிட்ட நோர்வே அதிகாரிகளை மாநகர சபை உறுப்பினர்கள் வரவேற்றனர்.

ஹெல்கிசனை வரவேற்று உரையாற்றிய யாழ் நகர மேயர் கந்தையா யாழ். நூலகத்தை மீளமைக்க வெளிநாடுகள் உதவ வேண்டுமெனக் கோரிக்கை விடுத்ததுடன் இந்த நூலகத்தில் மீண்டும் தமது தலைவர் அமிர்தலிங்கத்தின் பெயரைப் பொறிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

முன்னர், இந் நூலகத்தில் அமிர்தலிங்கத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் இப்போது அது இல்லையெனவும் தெரிவித்த அவர், அதனை மீண்டும் பொறித்தே தீருவது என உறுதிபடத் தெரிவித்தார்.

நோர்வே அதிகாரிகள் மத்தியில் மேலும் கருத்துத் தெரிவித்த மேயர் உள்ளிட்ட யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் இனப்பிரச்சனை தீர்வு முயற்சியின்போது ஜனநாயகத்தையும் பன்முகத் தன்மையையும் பேண வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறினர்.

மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லாத ஒரு நிலை தற்போதைய சமாதானப் பேச்சுக்களில் காணப்படுவதாகவும் இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டது.

யுத்த நிறுத்தம் சமாதான முயற்சிகள் என்பவற்றை வரவேற்றுக் கருத்து வெளியிட்ட மாநகர சபை உறுப்பினர்கள் தற்போதைய சமாதான சூழ்நிலையின் பிரதிபலன்களைப் பொதுமக்கள் அனுபவிக்க முடியாமல் இருப்பதையும் சுட்டிக் காட்டினர்.

யாழ்- கண்டி வீதி போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டது வரவேற்புக்குரிய விடயமாக இருந்த போதிலும் அந்த வீதி வழியாக எடுத்துச் செல்லப்படும் பொருட்களுக்குப் புலிகள் அதிக அளவு வரி அறவிடுவதனால், குடாநாட்டில் பொருட்களின் விலை முன்னர் கப்பலில் கொண்டு வந்தபோது இருந்ததைவிடப் பெரியளவில் குறையவில்லையெனவும் மாநகரசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

வட-கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகளுக்கான தீர்வுகள் குறித்துப் பேசுவது அவசியமான விடயம் என்ற போதிலும் தாய்லாந்து பேச்சுக்களின் போது தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அமைதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய, நிரந்தர அரசியல் தீர்வொன்றை எய்தக்கூடிய அடிப்படை பிரச்சனைகள் குறித்தும் ஆராயப்பட வேண்டுமென கேட்கப்பட்டது.

பதிலளித்து உரையாற்றிய நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஜன நாயகத்தையும் பன்முகத் தன்மையையும் நிலைநாட்டுவதற்குரிய முயற்சிகளைச் செய்வதாகக் கூறினார்.

யாழ். நூலகத்தை மீளவும் அமைப்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் அவர் வாக்குறுதி அளித்தார். ■

# விமானம் வீழ்ந்தது!

இஸ்ரேலியத் தயாரிப்பான கிபிர் குண்டு வீச்சு விமானம் ஒன்று செவ்வாய்க்கிழமை காலை வடமேல் மாகாணத்தின் குளியாப்பிட்டிப் பகுதியில் வீழ்ந்து நொருங்கியது.

கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சில நிமிடங்களில் இந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாகக் குளியாப்பிட்டியில் வீழ்ந்துள்ளது.

திருத்த வேலைகள் நடைபெற்றுப் பரீட்சார்த்த ஓட்டத்தின் போதே இந்த விமானம் வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமானி சிறிய காயங்களுடன் உயிர் தப்பினார். ■

# அமைச்சர்கள் மீது பின்வரிசை
## எம்.பி.க்கள் ஊழல் குற்றச்சாட்டு

**சி**ல அமைச்சர்கள் கடந்த ஒரு வருட காலத்திற்குள் பாரியளவிலான ஊழல்கள், நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், அமைச்சுக்களுக்கான பொருட் கொள்வனவுக் கேள்விப் பத்திரம் கோரும் போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் ஐ.தே.மு.வின் பின்வரிசை எம்.பி.கள் பலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

இந்த அமைச்சர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு வெகுவாகக் குந்தகம் விளைவிப்பதாகவும், மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் நற்பெயரைக் கெடுக்கக் காரணமாக இருப்பதாகவும் மல்பெறிக் குறூப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பிரதமரிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இதற்கான ஆதாரங்கள் பலவற்றையும் திரட்டி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கத் தயாராகி வருவதாக மல்பெறிக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படும் பட்சத்தில் இத்தகைய அமைச்சர்களின் நடவடிக்கைகள், ஐ.தே.க.வுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என மல்பெறிக் குழு பிரதமரிடம் சுட்டிக் காட்டியுள்ளது. ■

# மாற்றுக் கட்சிகளைப் பாதுகாக்க
## யாழ். மேயரின் திட்டம்!

**நா**ட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள மாநகர சபை உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து யாழ் மாநகர சபையின் செயற்பாடுகளைப் பார்வையிட வேண்டுமென யாழ்.மேயர் கந்தையா அழைப்பு விடுத்திருக்கிறார்.

மாற்றுக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஏ-9 வீதி வழியாக யாழ்ப்பாணம் வரும்போது புலிகளால் கடத்தப்படும் வாய்ப்பிருப்பதால் அவர்களுக்கு வழித்துணை வழங்குமாறு யு.என்.எச்.சி.ஆரிடம் கந்தையா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு
## கோலாகல ஆரம்பம்!

**ச**ர்வதேச இஸ்லாமிய தமிழ் ஆராய்ச்சி மாநாடு கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்று வருகின்றது.

முதல்நாள் நிகழ்வில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்ர்.

இறுதி நாள் நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இந்த மாநாட்டுக்குப் பல நாடுகளிலிருந்து பெருமளவிலான இஸ்லாமிய தமிழ் அறிஞர்களும், பிற மத அறிஞர்களும் சமூகமளித்துள்ளனர்.

ஆய்வரங்குகள், கௌரவிப்புகள் என 3 நாட்களும் பெரும் எண்ணிக்கையிலான எழுத்தாளர்களது பங்களிப்புடன் மாநாடு நடைபெறும் என்று ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர்.

# ஜே.வி.பி. எதிர்ப்பு ஆர்பாட்டம்!

**இ**ரண்டாவது கட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகக் கடந்த திங்களன்று கொழும்பு வந்த நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நோர்வே நிதி உதவியுடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு அம்பாந்தோட்டைக்கு நேரில் சென்ற போது ஜே.வி.பியினர் ஹெல்கிசனின் விஜயத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அவர் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பல இடங்களில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் நாட்டைப் புலிகளுக்குத் தாரை வார்க்க நோர்வே உதவுவதாகக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் நோர்வே குறித்துக் காணப்படும் தப்பெண்ணங்களைக் களையும் நோக்கில், நோர்வே இலங்கையின் தென் பகுதியில், சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி உதவி வழங்குவதில் அண்மைக் காலமாக ஆர்வம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது. ■

# தேர்தல் அறிவிப்போடு வீழ்ச்சி கண்ட
## பங்குச் சந்தை!

**19** வது அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் முன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு, சர்வஜன வாக்கெடுப்பும் நடத்தப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து அரசாங்கம் திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தலாம் என்ற செய்திகள் வெளியானதோடு கொழும்புப் பங்குச் சந்தை மோசமான வீழ்ச்சியை எதிர்நோக்கியது.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் காலத்தில் வீழ்ச்சி நிலையிலிருந்த பங்குச் சந்தை ஐ.தே.க. அரசு ஆட்சிக்கு வந்ததோடு ஓரளவு முன்னேற்றம் அடைந்தது.

அரசுக்கும், புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் பங்குச் சந்தை கணிசமான முன்னேற்றத்தைக் கண்டிருந்ததுடன் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் இலங்கையின் அதிகூடிய பங்கு பரிவர்த்தனைகள் இடம்பெற்றன.

ஆனால், தற்போது அரசாங்கம் மீண்டும் தேர்தல் குறித்த அறிவிப்புக்களை வெளியிட்டு வருவதை அடுத்துப் பங்குச் சந்தை நிலைவரம் வீழ்ச்சி அடைந்து வருகின்றது. ■

# திடீர்த் தேர்தலை விரும்பாத தமிழ்க் கூட்டணி எம்.பி.க்கள்!

**தி**டீர்ப் பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்படுவதைத் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலரும் விரும்பவில்லை என அக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுத் தேர்தல் ஒன்று நடைபெற்றால் புலிகள் தங்களை மீண்டும் போட்டியிட அனுமதிப்பார்களா என்ற பயம் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பலருக்கு இருப்பதாக முத்த தமிழ்க் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

குறிப்பாக, கடந்த காலங்களில் புலிகளின் சொற்படி நடக்காத,அவர்களது கட்டளைகளை மீறித் தன்னிச்சையாக, செயற்பட முனைந்த சில எம்.பி.க்களை மீண்டும் ஒரு பொதுத் தேர்தலின் போது போட்டியிட விடாமல் புலிகள் தடுக்கக்கூடுமெனப் பலர் அஞ்சுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் காரணமாகத் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பில் எம்.பி.க்களாக இருக்கும் பலர் சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்படும் எனக் கூறித் தேர்தலைத் தவிர்க்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இம்முறை பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தில் போட்டியிடுவது குறித்து, கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிரபல சட்டத்தரணியான எம்.பி. ஒருவர் கருத்துத் தெரிவித்தார். கடந்த தேர்தலின் பின்னர் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டதால் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதிக்கத்திற்குட்பட்டுப் பல தெரிவுகள், நியமனங்கள் இடம்பெற்றதைச் சுட்டிக் காட்டிய அவர் இம்முறை அவ்வாறு நிகழாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். ■

# 'புலிகளின் பலம்' என்ற யதார்த்தத்தின்
## அடிப்படையிலேயே தீர்வு அமைய வேண்டும்!

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொழுது அந்தத் தீர்வு தற்போதைய யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டியது அவசியம் எனப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு முக்கியஸ்தர் புலித்தேவன் கூறியிருக்கிறார்.

புலிகளிடம் இராணுவம், கடற்படை, பொலிஸ், நீதி மற்றும் நிர்வாக அலகு என்பன தனியாகக் காணப்படுவதைச் சுட்டிக் காட்டிய அவர் இனப்பிரச்சனைக்கான தீர்வின் போது இந்த யதார்த்தங்களைப் புரிந்து கொள்ள வேண்டுமென தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மானுடத்தின் தமிழ்க் கூடல் இலக்கிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய புலித்தேவன் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்து நிம்மதியாக வாழ வேண்டும் என்பதில் புலிகளின் தலைவர் பிரபாகரன் மிகுந்த கரிசனை கொண்டிருப்பதாகவும் கூறினார்.

திருகோணமலை, காஞ்சிரங்குடா போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் போல் எதிர்காலத்திலும் தொடருமாயின் தமிழ் மக்கள் சமாதான முயற்சியின் மீதான நம்பிக்கையை இழந்துவிடுவார்கள் என்றும் புலித்தேவன் தெரிவித்தார். ■

# பொகவந்தலாவையில் வெள்ளிவிழா

**பொ**கவந்தலாவை செபமாலை மாதா ஆலய வெள்ளி விழா 18ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறும். 26ம் திகதி புனித செபி ஆசிர்வதித்த வெஸ்பர் ஆராதனையும் நடைபெறும். 27ம் திகதி காலை 10 மணிக்கு கண்டி மறை மாவட்ட ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். ■

# பாலாவை வரவேற்றவர் ஜோடன் வெஸ்பேர்க்!

**ல**ண்டனில் இருந்து வந்த அன்டன் பாலசிங்கத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் வரவேற்றதாக கடந்தவார முரசில் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. பாலசிங்கத்தை வரவேற்றவர் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் என்பதே சரியானதாகும். தவறுக்கு வருந்துகிறோம். ■

# முரசம்

## இடைக்கால நிர்வாகம் கைவிடப்படுமா?

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

19 வது அரசியல் சட்டத் திருத்த முயற்சி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து சாத்தியமாகாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டதனால் பாரிய அரசியல் நெருக்கடி நாட்டில் தோன்றியுள்ளது.

பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டும் என்பதை ஆளுந்தரப்பு வலியுறுத்தி வருகிறது.

இது, இதுவரை மேற்கொண்ட சமாதான முயற்சிகளையும் கேள்விக்கு உள்ளாக்குவதாக ஆகிவிட்டது.

யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்று ஆரம்பித்துப் பேச்சுவார்த்தையின் முதற் கட்டம் வரை சென்றுள்ள இச் சமாதான முயற்சியில், இத் திடீர்த் திருப்பம் பாரிய ஐயப்பாட்டினை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்து ஒக்டோபர் 31 ம் திகதி இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

இதற்கான ஏற்பாடுகளுக்காக, புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கமும் வன்னி சென்றுள்ளார்.

நோர்வே பிரதியமைச்சர் விதார் ஹெல்கிசன் உள்ளிட்ட பேச்சுவார்த்தை ஏற்பாட்டாளர்களும் வன்னி சென்று புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்திக்கவுள்ளார்கள்.

எனினும் அரசாங்கத்தின் கைகளில் அதிகாரங்கள் சேரப்போவதில்லை என்பது நிச்சயமாகிவிட்ட நிலையில், இடைக்கால நிர்வாகம் புலிகளுக்கு வழங்கப்படுவதும் சாத்தியமில்லை என்ற கருத்து வெளிவந்துள்ளது.

புலிகளின் பிரதான கோரிக்கையான இடைக்கால நிர்வாகம் கேள்விக்கிடமாகி விட்டதால் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகள் எத் திசையில் நகரப் போகிறது என்பதும் கேள்விக்குரியதாயுள்ளது.

கடந்த பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்ட, இரு தரப்பும் இணைந்த செயலணிக் குழு ஒன்றை அமைப்பது பற்றிய விடயங்களும் தீர்வு காண வேண்டியதாக உள்ளது.

ஆனால் அதுவே இவ் அரசாங்கத்தால் புலிகளுக்கு வழங்கக் கூடிய அதி கூடிய சலுகை என்ற நிலையுடன் முடிந்துவிடக் கூடும்.

பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டத்தை எப்படி எய்துவது? என்ற கேள்வி இங்கு விளைந்துள்ளது.

இதற்கு அரசாங்கமும் ஜனாதிபதியும் ஒத்து, இணைந்த செயற்பாடு ஒன்றிற்கு வருவது ஒன்றே தற்போதுள்ள மாற்றுவழி.

ஆனால் இன்றைய முரண்பட்ட அரசியல் நிலையில் இது சாத்தியமா?

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன், ஆசிரியர்.***

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# பொதுத் தேர்தலா? மாற்று அரசாங்கமா?

நரன்

"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்று கூறுவார்களே, அது போல 19 வது திருத்தம் என்று தொடங்கி ஜனாதிபதியின் அதிகாரத்தை மீண்டும் அழுத்தம் திருத்தமாக உறுதிப்படுத்திவிட்டு ஓய்ந்திருக்கிறார் அமைச்சர் பீரிஸ்.

கூண்டுக்கிளி போல, தனது அதிகாரங்களைச் செயற்படுத்த முடியாது, செயற்படுத்தவும் முனையாது, அடைபட்டிருந்த ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டுகிறேன் என்று புறப்பட்டு, கூண்டைத் திறந்து கிளியைப் பறக்கவிட்டதுதான் மிச்சமாகியுள்ளது.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துப், புதிய தேர்தலுக்கு வழிகோலிவிடுவார் என்று கூறி, தேர்தலை விரும்பாத பாராளுமன்ற உறுப்பினர்களை 19 வது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாகத் திரட்ட முனைந்தவர்கள் தற்போது தாமே பாராளுமன்றத்தைக் கலைக்க உத்தேசிக்கிறார்கள்.

ஆக ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவார் என்பதை விட ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பறித்தெடுப்பதே அரசாங்கத்தின் குறியாக இருந்திருக்கிறது என்பது இதில் தெளிவாகின்றது.

உச்ச நீதிமன்றத்தின் 19 வது திருத்தச் சட்டமூலத்தின் மீதான தீர்ப்பானது, ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதானால் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்ல வேண்டும் என்றும் அதேவேளை இதில் கூறப்பட்ட மனசாட்சிப்படி வாக்களிக்கும் திருத்தம் முற்றுமுழுதாகச் சட்டவிரோதமானது என்றும் கூறுவதாய் உள்ளது.

முரசு தனது "எக்ஸ்ரே ரிப்போட்"டில் இந்த 19ஆம் திருத்தச் சட்டமூலம் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டியதாகவே தீர்ப்பளிக்கப்படலாமென ஆராய்ந்து கூறியிருந்தபடியே நிகழ்ந்துள்ளதென்பதை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தம்.

இப்போது கேள்வி, மீண்டும் ஒரு பொதுத் தேர்தலா அல்லது மாற்றரசாங்கம் ஒன்று அமைக்கப்படப் போகிறதா, இல்லையேல் இதே அரசாங்கத்தைக் கொண்டிழுத்துச் செல்ல வழிவகையேதும் உண்டா என்பதுதான்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது மிகுந்த உற்சாகத்துடனும் மக்களின் வரவேற்புடனும் செயற்பட ஆரம்பித்ததை அடுத்து, உடனடியாகவே யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், சமாதான நடவடிக்கைகள் ஆகியவற்றில் இறங்கி நாட்டில் ஒரு மாற்றத்தையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

இதற்கு இணங்க ஜனாதிபதியும், அரசாங்கத்தின் செயற்பாடுகளை வழிமறிக்காது தனது அதிகாரங்களைப் பெருமளவு விட்டுக் கொடுத்திருந்தார்- இறுதியில் பாதுகாப்பு அமைச்சையும் கூட வழங்கியிருந்தார்.

ஆயினும் அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதியின் கைவசம் இருக்கும் 'பாராளுமன்றத்தை ஒரு வருடத்தின் பின் கலைக்கும்' அதிகாரத்தை ஒரு அச்சுறுத்தலாகவே கருதி வந்தது.

அதேவேளை பேச்சுவார்த்தைகளில் புலிகளின் உடனடிக் கோரிக்கையான இடைக்கால நிர்வாக சபை மற்றும் சில பிரதானமான ஏற்பாடுகளை வழங்குவதற்கான அதிகாரத்தையும் இப் பாராளுமன்றம் கொண்டிருக்கவில்லை- அது ஜனாதிபதியின் கரங்களிலேயே உள்ளது.

எனினும் இவ் விடயத்தைப் பெரிதும் வெளிக்காட்டாமல் வெறுமனே ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்கின்ற முயற்சியாக மட்டும் இந்த 19 ஆவது திருத்த சட்டமூலத்தை வெளிக்காட்டி அவ் அதிகாரங்களையும் ஓசைப்படாமல் தனதாக்கிக் கொள்ளும் தனது அரசியல் நகர்வை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

எனினும் அது அடிபட்டுப்போனதுடன் இந் நோக்கமும் அடிபட்டுப்போனது.

இதனால் தற்போது அடுத்த கட்டப் பேச்சுவார்த்தையில் புலிகள் இடைக்கால நிர்வாகத்தை விடாப்பிடியாகக் கோரினால் அரசாங்கத்தால் பதில் சொல்ல முடியாத நிலை தோன்றியுள்ளது.

அரசாங்கம் புலிகளுக்கு பேச்சு வார்த்தையின் ஆரம்பம் முதல் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படும் என்ற நம்பிக்கையை ஊட்டியே இச் சமாதான முயற்சியை முன்னெடுத்து வந்தது.

கடந்த செப்டெம்பர் 16 ஆம் திகதி தாய்லாந்தில் நிகழ்ந்த பேச்சுவார்த்தையின் பின் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் வழங்கிய பேட்டியில் கூட தாம் இடைக்கால நிர்வாகத்தைப் பெற்றே தீருவோம் என திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது அரசாங்கத்தின் இந்த அறிகுறியை நம்பித்தான்.

"அரசாங்கம் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டும், வெட்டவேண்டும், அத்தகைய உறுதியான அரசாங்கம் ஒன்றுடன்தான் நாம் விடயங்களைக் கையாளமுடியும்" எனவும் அவர் அத் தனியார் தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியிருந்தார்.

ஆனால் இந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அரசாங்கத்தால் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டுவது சாத்தியப்படாதது மட்டுமன்றி, புலிகள் நம்பியிருந்த இடைக்கால நிர்வாகமும் கைகூட முடியாத நிலைக்குச் சென்றுவிட்டது, அரசியல் நிலைமை.

இந் நிலையில் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கம் புலிகளின் கோரிக்கைகளை ஈடுசெய்ய முடியாது திண்டாடும் நிலைக்குத் தள்ளப்படலாம்.

எனவே அத்தகைய நிலைக்குள்ளாகி கையாலாகாதவர்களாக வெளிப்படுவதை விட தேர்தலுக்குச் செல்வது உகந்ததாக அரசாங்கத் தரப்பிற்குப் புலப்படுகிறது.

மேலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட முதற் சரிவு இது-எனினும் இது ஒரு பாரதூரமான சரிவு.

சரிவுப் போக்கில் கால் வைத்துவிட்ட நிலையில், தொடர்ந்து இறங்குமுகமாகச் செல்லும் போக்கை அனுமதிப்பதை விட இந் நிலையிலேயே தேர்தலுக்குப் போய் விடுவது, தன்னைத் தற்போதைய ஆதரவுடன் தக்கவைத்துக் கொள்ள உதவுமென அரசு சிந்திக்கிறது.

பேச்சுவார்த்தையில் தேக்கம் ஏற்பட்ட நிலையிலோ, அல்லது முறிவு ஏற்பட்ட நிலையிலோ தேர்தலுக்குச் செல்ல நேர்ந்தால் அரசாங்கத்தின் மீது சிறுபான்மையின மக்கள் மத்தியில் மட்டுமன்றி பெரும்பான்மை இனத்தினர் மத்தியிலும் அதிருப்திகள் தோன்றிவிடுவதுடன் புலிகளின் அரசாங்கத்திற்கான இன்றைய ஆதரவு நிலையும் மாறிவிடும்.

எனவே கையிலுள்ள சரக்குடனேயே வியாபாரத்தில் இறங்குவது உசிதம் என்ற கணிப்பிலேதான் இந்த 19 வது திருத்த முயற்சியின் தோல்வியின் பின் பொதுத் தேர்தலுக்குச் செல்லப் போவதாக ஆளுங்கட்சி கூறி வருகிறது.

ஆனால் இதிலும் அதற்குச் சங்கடங்களும் தடங்கல்களும் உள்ளன.

பொதுத் தேர்தலை விரும்பாத பின்வரிசை உறுப்பினர்கள் பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ளனர்.-அவர்களுக்கு அடுத்த தேர்தலில் தாம் வெற்றி பெறுவது குறித்துச் சந்தேகம் உண்டு.

கடந்த பொதுத் தேர்தலில் பகீரதப் பிரயத்தனப்பட்டு ஈட்டிய வெற்றிக்குச் செலவிட்ட பெருந்தொகைப் பணத்தை மீள ஈட்ட முன்னரே அடுத்த ஒரு தேர்தலுக்குச் செல்லக் கூடிய நிலை இவர்களுக்கு இல்லை.

மேலும் அரசாங்கத்துடன் கூட்டு வகிக்கின்ற சிறுபான்மைக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கும் மீண்டுமொரு தேர்தலுக்கு முகங்கொடுப்பதில் இஷ்டமில்லை.

அவ்வாறான ஒரு தேர்தல் வருமாயினும் அதில் இதே ஐக்கிய தேசியக் கட்சியோடுதான் சேர்ந்து இயங்குவார்களா என்பதும் நிச்சயமில்லை.

முஸ்லிம் காங்கிரஸுக்குள் பாரிய பிளவுக்கான நெருக்கடிகள் வெடித்துள்ளன, இ.தொ.கா.வுக்கு மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தின் மீது பாரிய அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

தமிழர் கூட்டமைப்பு எம்.பி.க்களும், அடுத்த தேர்தலில் புலிகள் தம்மை மீண்டும் நிறுத்துவார்களா என்ற அச்சங் காரணமாக உள் மனதில் புதிய தேர்தலை விரும்பாத நிலையிலேயே உள்ளார்கள்.

இவற்றைவிட முக்கியமான மற்றொரு நிலைமை என்னவென்றால் ஆளுங்கட்சியால், அல்லது பாராளுமன்றத்தால் ஆட்சியை நடத்த முடியாது எனக் கூறி ஜனாதிபதியிடம் பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு கோர முடியுமேயன்றி, தானே பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு.

அவரால் இக் கோரிக்கையை நிராகரித்து வேறொரு கட்சியிடம் ஆட்சியமைக்கக் கோர முடியும்.

உடனடியாக அவ்வாறான ஆட்சியமைக்க முடியாதிருப்பினும் பாராளுமன்றத்தை இரண்டு மாதங்கள் வரை இடைநிறுத்தி அதற்கிடையில் இவ்வாறான மாற்றரசாங்கம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்புள்ளது.

இதன் போது ஆட்சியமைக்கத் தேவைப்படும் மேலதிக உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தும் மாற்றி எடுக்க வேண்டி நேரலாம்.

ஐ.தே.க. அவர்களைக் கட்சியிலிருந்து விலக்க முடியுமாயினும் அதற்கான சட்ட நடவடிக்கைகளுக்குக் குறைந்த பட்சம் மூன்று மாதங்களாவது செல்லும்.

எனவே குறைந்தது ஆறு மாத ஆட்சிக் காலத்தை ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் நிர்வகிக்க முடியும்.

இதில் ஜனாதிபதிக்கு உள்ள வாய்ப்பு யாதெனில் பிரதமரும் அமைச்சரவையும் குறிப்பாக நிதியமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்பனவும் அவரின் கீழ் வந்துவிடும்.

அது தேர்தலில் அவருக்கு அனுகூலமான புறநிலையாக அமையும்.

எனவே தேர்தலுக்குச் செல்வதும் சிக்கல், செல்லாமலும் கொண்டிழுப்பதும் சிரமம் என்ற இரு தலைக் கொள்ளி நிலையிலேயே இன்றைய ஐ.தே.க. அரசாங்கம் சிக்கியுள்ளது.

இதற்கு அடித்தளமிட்டது இந்த 19 வது திருத்த முயற்சியேதான். ■

**முஸ்லிம் காங்கிரஸுக்குள் பாரிய பிளவுக்கான நெருக்கடிகள் வெடித்துள்ளன, இ.தொ.கா.வுக்கு மேல் கொத்மலைத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தின் மீது பாரிய அதிருப்தி ஏற்பட்டுள்ளது.**

**தமிழர் கூட்டமைப்பு எம்.பி.க்களும், அடுத்த தேர்தலில் புலிகள் தம்மை மீண்டும் நிறுத்துவார்களா என்ற அச்சங் காரணமாக உள் மனதில் புதிய தேர்தலை விரும்பாத நிலையிலேயே உள்ளார்கள்.**

# "வடக்கு கிழக்கு முஸ்லிம்களினதும் தாயகம்!" நம்பலாமா?

முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சனை அரசாங்கத்தை ஆட்டங் காணச் செய்யுமா? எனப் பலரையும் சந்தேகத்திற்கு உள்ளாக்கியிருக்கிறது. ஆரம்பம் முதலே முஸ்லிம் காங்கிரஸுக்குள் உளப் பூர்வமான ஒற்றுமையும் அன்னியோன்னியமும் காணப்படாவிட்டாலும் கூட அரசியல் ரீதியிலான முக்கிய முடிவுகளை எடுக்கும் போது ஒரளவுக்காவது கருத்தொருமிப்புடன் செயற்படும் நிலை காணப்பட்டது.



அமைச்சர் றவூப் ஹக்கீம் தாய்லாந்துப் பேச்சுக்களின் பின்னர் முஸ்லிம்களுக்கான தனி அலகுக் கோரிக்கையை வலியுறுத்தப் போவதில்லை என அறிவித்ததையடுத்தே தற்போதைய மோதல் நிலை வெளிச்சத்திற்கு வந்தது. கடந்த இரு வார காலங்களில் முஸ்லிம் காங்கிரஸின் இரு பக்க உறுப்பினர்களின் எண்ணிக்கை அளவுகள் மற்றும் அவர்கள் ஒன்றிணைந்து விட்டதாக ஊடகச் செய்திகள் பலவும் வெளிவந்து கொண்டிருந்தாலும் கூட உண்மையில் றவூப் ஹக்கீம் மற்றும் அதாவுல்லா குழுவினரால் முழு மனதுடன் ஒருங்கிணைந்து செயற்பட முடியாத ஏராளமான காரணிகள் இடையில் தடுக்கின்றன. வெளிப்பார்வையில் இது தலைமைத்துவப் பிரச்சனை போலவோ அல்லது கிழக்கு மாகாண, மத்திய மாகாணச் சர்ச்சை போலவோ காணப்பட்டாலும் கூட அதையும் தாண்டி ஆழமானதொரு தடுப்பு இந்த இரு பிரிவினர் மத்தியிலும் இருக்கிறது என்பதே உண்மை.

றவூப் ஹக்கீமைப் பொறுத்த வரையில் அவர் மிதமான போக்குடைய பொறுப்புள்ள ஒரு தேசியத் தலைவராகத் தன்னை அரசாங்கத்திடம் வெளிப்படுத்திக் கொள்வதில் ஆர்வமானவர். ராஜதந்திர சமூகத்தோடும் தென்னிலங்கை அரசாங்கங்களோடும் நெருக்கமான உறவுகளைப் பேணி, அதன் மூலம் ஒரு சுமூகமான வழியில் சென்று, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சனைகளை அணுக வேண்டும் என்ற அபிப்பிராயத்தை உடையவர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், வரி அறவீடுகளின் போது, அமெரிக்கத் தூதரகத்தைக் கொண்டும் நோர்வே கண்காணிப்பாளர்களூடாகவும் புலிகளைக் கட்டுப்படுத்த ஹக்கீம் முயற்சி செய்தார். எப்பொழுதும் றவூப் ஹக்கீம் புலிகளின் உயர்மட்டத் தலைமைகளுடன் தொடர்பு கொள்ளும் போதுதான் முஸ்லிம்களின் தலைவர் எனக் கூறி நேராகப் புலிகளோடு கொடுக்கல் வாங்கல் செய்வதை விடவும் நோர்வே ஏற்பாட்டாளர்கள் மூலம் அத்தகைய சந்திப்புக்களை, கலந்துரையாடல்களை நடத்துவது அவரது வழக்கம். இது கூட ஹக்கீமின் ஒருவகை அரசியல் ராஜதந்திர நகர்வுதான்.

றவூப் ஹக்கீமைப் பொறுத்த வரையில் ஏதேனும் ஒரு காரணத்தைக் கூறி அரசாங்கத்துடன் பகைமையை வளர்த்துக் கொண்டால் அடுத்து என்ன செய்வது என்ற சிந்தனையும் இருக்கிறது. தற்போதைய நிலையில் முஸ்லிம்களுக்கான தனிஅலகு பற்றியோ அல்லது வேறு ஏதேனும் ஒரு நிர்வாக முறை பற்றியோ கதைப்பது சமாதானப் பேச்சுக்களைக் குழப்பிவிடும் என்ற பயம் றவூப் ஹக்கீம் மத்தியில் காணப்படுகிறது. இதன் காரணமாக அவர் இந்தப் பேச்சுக்களை தற்போதைக்கு வலியுறுத்தாமல் விட்டு, பிறகு பார்க்கலாம் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளார்.

ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தை விடுத்து முஸ்லிம்களுக்கான உரிமையை வேறு எப்போது கேட்பது என்ற ஒரு நியாயமான கேள்வி அதாவுல்லா தரப்பினரால் எழுப்பப்படுகிறது.


சுமார் 20 வருட கால யுத்தத்தின் பின்னர் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் தாய்லாந்துப் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இந்தப் பேச்சுக்களின் பின்னர் முஸ்லிம்களுக்குத் தனியான உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க மற்றொரு பேச்சுவார்த்தைக்கு அரசாங்கமோ புலிகளோ ஒரு போதும் சம்மதிக்கப்போவதில்லை. அப்படியாயின் முஸ்லிம் சமூகம் இன்னும் 2 தசாப்த காலம் புலிகளுடனும் அரசாங்கத்துடனும் போர் புரிந்த பின்னர் நடத்தப்படும் ஒரு சமாதானப் பேச்சுவார்த்தைகளில்தான் முஸ்லிம்களின் உரிமையைப் பற்றிக் கதைக்க நேரிடும். ஆதலால் இம்முறை இனப்பிரச்சனைக்கான தீர்வு என்று வரும்போது முஸ்லிம்களின் அரசியல் அதிகாரங்கள் குறித்துத் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்துவதில் தவறில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் வேறு வாய்ப்பு கிடைக்காது என அதாவுல்லா கூறுகிறார். இந்த நியாயமான அச்சத்திற்கு ஹக்கீம் என்ன பதில் தருகிறார் என்பதைப் பொறுத்தே றவூப் ஹக்கீம் சொல்லும் கருத்துக்கள் முஸ்லிம் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெற முடியும்.

அஷ்ரப்பை விடவும் றவூப் ஹக்கீம் முஸ்லிம்களுக்காக அதிகம் கேட்கிறார் என்ற ஒரு அபிப்பிராயம் சிங்களத் தரப்பு மத்தியில் வெகுவாகக் காணப்படுகின்றது. இது எந்த அளவு உண்மை என்பதற்கு அப்பால் அஷ்ரப் வாழ்ந்த நாட்களை விடவும் முஸ்லிம்களின், குறிப்பாகக் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் உரிமைகளைச் சந்தேகமின்றி உறுதி செய்து கொள்ள வேண்டிய கட்டாயம் இன்று காணப்படுகின்றது.

கிழக்கின் நிர்வாக அதிகாரம் புலிகளின் கைக்குச் செல்லுமாயின் தமது நிலைமை எந்தளவு தூரம் மோசமாகும் என்பதை அப் பகுதி முஸ்லிம்கள் உணர்வதற்குக் கடந்த காலச் சம்பவங்கள் மிக மிகப் போதுமானவை. தற்போதைய பேச்சுவார்த்தைகளில் புலிகளுக்கு வழங்கப்படும் இடைக்கால நிர்வாகம் மட்டுமன்றி நிரந்தரத் தீர்வொன்றின் போது வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமையப்போகும் நிர்வாக முறைமை குறித்து முஸ்லிம்கள் மத்தியில் கணிசமான அச்சம் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் முஸ்லிம்களைப் புலிகள் நடத்திய விதத்தை அவதானிக்கும் போது அந்த அச்சம் தவறானது எனக் கொள்ள முடியாது.



"வடக்கு -கிழக்கு, முஸ்லிம்களினதும் தாயகம்" என்ற கருத்து முஸ்லிம்களின் அரசியல் அதிகாரத்தைப் பறிப்பதற்கான ஒரு ஆயுதமாகவே புலிகள் தரப்பால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

வடக்கு- கிழக்கு முஸ்லிம்களினதும் தாயகமாயின் அன்று வடக்கிலிருந்து முஸ்லிம்கள் ஏன் வெளியேற்றப்பட்டார்கள் என்ற கேள்வி முஸ்லிம் தரப்பால் எழுப்பப்படுகின்றது.

வடக்கு -கிழக்கு, முஸ்லிம்களினதும் தாயகம் என்று இன்றைக்குப் புலிகள் கூறுவதை நம்பி முறையான அதிகாரப் பகிர்வுகள் எதிலும் பங்கு கொள்ளாமல் பொறுப்புணர்வு என்ற பெயரில் வெறுமனே அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்துவிட்டு நாளை புலிகளின் கைகளுக்கு அதிகாரம் சென்றவுடன் வடக்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அதே கதி கிழக்கு முஸ்லிம்களுக்கும் நிகழுமாயின் யாரிடம் போய் அழுவது?

இந்த பயத்திற்கான பதிலைப் புலிகளை விட முஸ்லிம் சமூகத்திற்கு அச் சமூகத்தின் தலைவர்களால் வழங்கப்படுவதே மிகவும் பொருத்தமானது. ஏனெனில் புலிகள் மீதான உளப் பூர்வமான நம்பிக்கை முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் இல்லை.

இன்று முஸ்லிம் காங்கிரஸுக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுகளை அவதானிக்குமிடத்து இத்தகைய பயத்தைக் கொண்ட மக்களை நேரடியாகப் பிரதிநிதித்துவம் செய்யும் அதாவுல்லா போன்றவர்கள் தமது மக்களின் அச்சத்தை வெளிப்படுத்துவதாகத் தெரிகிறது. ஆனால், அக்கரைப்பற்றில் இடம்பெற்ற கடத்தல் சம்பவம் போன்று சில நிகழ்வுகளில் முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தியாளர்களின் பெயரும் அடிபடுவதை அவதானிக்கும் போது உண்மையில் இவர்கள் தமது சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற நல்லலெண்ணத்தில்தான் இத்தகைய கருத்து முரண்பாடுகளைக் கொண்டுள்ளார்களா? அல்லது அதற்கப்பால் வேறேதும் குறுகிய அரசியல், பொருளாதார நோக்கங்கள் உள்ளனவா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

எவ்வாறெனினும் றவூப் ஹக்கீம் தற்போதைக்கு முஸ்லிம்களுக்கான தனி அலகைக் கேட்கப்போவதில்லை எனக் கூறுவாராயின் அவர் அதை எப்போது கேட்பார் என்பதையும் சொல்ல வேண்டும்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் உரிமைகளை நிலைநாட்டுவதே தமது குறிக்கோள் என அதாவுல்லா தரப்பினர் கூறுகிறார்கள். அவர்களது உண்மை நோக்கம் அதுவாக இருப்பின் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பதன் மூலம் அந்த இலக்கை அடைய முடியுமா என்றும் அது எவ்வாறு சாத்தியமாகும் என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். அவ்வாறில்லையாயின் சிலர் சொல்வதைப் போன்று வெளிநாடு ஒன்றிடமிருந்து பணம் வாங்கிக் கொண்டு கிழக்கில் தமிழ்- முஸ்லிம் வன்முறைகளைத் தூண்டி விட அதாவுல்லா தரப்பினர் முயற்சிக்கிறார்கள் என்ற கூற்று உண்மையாகிவிடும். ●

## இருப்பிடங்களை இழக்கும் தொழிலாளர்களுக்கு என்ன நிவாரணம்?

அரசாங்கம் எதிர்பார்த்தது போன்று மேல் கொத்மலைத் திட்டத்திற்கு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் காட்டிவரும் எதிர்ப்பை அவர் இலகுவில் கைவிடுவதாக இல்லை. தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவே ஆறுமுகம் இன்று வரையில் கூறி வருகிறார். ஆனால் இந்த மின்சார உற்பத்தித் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமென அதிக முயற்சி எடுப்பவர்களுள் முக்கியமானவரான நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், மறைந்த காமினி திசாநாயக்காவின் புதல்வருமாகிய நவீன் திசாநாயக்கா, எத்தனை எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டாலும் மேல் கொத்மலைத் திட்டத்தைச் செயற்படுத்தியே தீருவது எனக் கூறியிருக்கிறார்.

நாட்டின் தற்போதைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு 300 மெகா வோட்ஸ் மின்சாரம் தனியாரிடமிருந்து பெறப்படுகிறது. இந்த மின்சாரத்திற்காகப் பெருமளவு பணத்தை அரசாங்கம் செலவிடுவதாகவும், பாவிக்கப்படாத மின்கூறுகளுக்குக் கூடப் பணம் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும், இந்த நட்டத்தைத் தவிர்ப்பதற்கு மேல் கொத்மலைத் திட்டம் அமுல் செய்யப்படுவது இன்றியமையாதது எனவும் அரசாங்கத் தரப்பில் நியாயம் கூறப்படுகிறது. உண்மையில் கடந்த காலங்களை விட அண்மைக் காலமாக நாட்டின் மின்சாரத் தேவை வெகுவாக அதிகரித்துள்ளது. அதனால் மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்க முடியாது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் புத்தளத்திற்குச் சமீபமாக உள்ள நுரைச்சோலை என்னும் இடத்தில் அனல் மின் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைக்கப் பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இத் திட்டத்திற்கு அரசியல்வாதிகளிடமிருந்து குறிப்பிடத்தக்க எதிர்ப்புகள் காண்பிக்கப்படாவிட்டாலும் அப் பகுதிப் பொதுமக்கள் தெரிவித்த கடும் ஆட்சேபனை காரணமாகத் திட்டம் முழுமையாகக் கைவிடப்பட்டது. இதனை எதிர்காலத்தில் செயற்படுத்துவதில்லையெனப் பிரதேச மக்களுக்கு நீதிமன்றத்தின் ஊடாக அரசாங்கத்தின் சார்பில் உத்தரவாதம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் நுரைச்சோலை, மலையகம் போன்று மின்சார வசதி இல்லாத மிகவும் பின்தங்கிய சமூக அமைப்பைக் கொண்ட ஒரு பகுதி அல்ல.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் என நோக்கும் போது மிகக் குறைந்த அளவிலானோரே மின்சார வசதியுடன் வாழ்கிறார்கள். ஆனால், நாட்டின் 90 சதவீதமான மின்சாரத் தேவை மலையகத்திலிருந்தே பூர்த்தி செய்யப்படுகிறது.

அரசாங்கம் மேல் கொத்மலைத் திட்டத்தைச் செயற்படுத்தப் போவதாகக் கூறி இத் திட்டத்தினால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும், புதிய குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படும் என்றும் பொதுப்படையாகக் கூறுகிறதே அன்றி எவ்வாறான நட்டஈடுகள், நிவாரணங்கள் வழங்கப்படும் என்பது குறித்து எதனையும் தெளிவாக இதுவரை கூறவில்லை. மலையக மக்கள் மத்தியில் இது தொடர்பாகக் கடுமையான சந்தேகம் நிலவுகிறது. ஏனெனில் கடந்த கால மின்சாரத் திட்டங்களால் தமது வாழ்விடங்களை இழந்த ஆயிரக்கணக்கான மக்கள் இன்றும் முறையான வீட்டு வசதியின்றி வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு ஏற்பட்ட கதி தங்களுக்கும் நிகழுமா என்ற பயம் மேல் கொத்மலைத் திட்டத்திற்குள் உள்ளடங்கும் பகுதிகளில் வாழும் பலருக்கு இருக்கிறது.

விக்டோரியா, ரந்தெனிகலை, கொத்மலைத் திட்டங்களின் போது பெரும்பாலான மக்கள் ஏமாற்று வார்த்தைகளை நம்பி தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறினார்கள். கடைசி வரையில் அவ்வாறு வெளியேற மறுத்த சிலர் அணைகளிலிருந்து நீர் திறந்து விடப்படும் என அச்சுறுத்தப்பட்டு அங்கிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

மேல் கொத்மலைத் திட்டத்தின் போதும் அதே பாணியில் ஏமாற்றி, அச்றுத்தி மக்களை வெளியேற்ற முயற்சிகள் நடக்கலாம். ஏற்கனவே வீட்டுப் பிரச்சனை , தொழிற் பிரச்சனை, சம்பளப் பிரச்சனை என ஏகப்பட்ட பிரச்சனைகளுக்குள் சிக்கித் தவிக்கும் மலையக மக்களுக்கு மற்றொரு புதிய பிரச்சனையாக உருவெடுத்திருக்கும் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்தை தடுத்து நிறுத்த அம் மக்களின் பிரதிநிதிகள் எவ்வாறு மலையகத்தை வழி நடத்தப் போகிறார்கள். ●

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்



**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

---

## விதுஜா ஏசியன் சொப்

# VIDUJA ASIAN SHOP

WAAG HAUS PASSGE-8
3011 BERN (1 STOCK)
SWISS.
T.P.:- 031-3113510, 031-9928267, 079-2158405

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் சிறுவர், சிறுமிகள், பெரியவர்களுக்கான வண்ண வண்ண ஆடைகள், தொலைபேசி அட்டைகள், பழைய புதிய வீடியோ பிரதிகள் வாடகை சகல விதமான புகைப் படங்கள் எடுக்கவும் இன்றே நாடுங்கள்.

**விதுஜா ஏசியன் சொப்**

---

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

**வீட்டுப் பணிப்பெண்கள், ஆண்களுக்கான எல்லாவிதமான தொழில்கள்**

**சவுதி அரேபியா, குவைட், டுபாய், கட்டார், ஜோர்டான், லெபனான்.**

| | |
|---|---|
| இருவழிப் பயணச் சீட்டு, உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் | சேவைக் காலமான 2 வருடத்திற்குள் பிரச்சனைகள் ஏற்படின் உடனடியாகத் தீர்வு பெற்றுத் தரப்படும். |

பணிப்பெண்களுக்கு இலவசம்

# ZAHANA INTERNATIONAL
***Manpower Supply***

10 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச் சீட்டு, புகைப் படங்கள், வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றுடன் நேரில் வரவும்.

Tel : 074-610301, 074-618502
Fax : 074-724324
Mobile: 072-426669.
E-mail : zahana@dialogsl.net
LLNO: 1845

**75/2, 2nd Floor, Armour Street, Colombo 12, Sri Lanka.**

---

## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD, NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

---

## • பிரத்தியேக வகுப்புக்கள் •

கற்பித்தலில் 10 வருட அனுபவம் கொண்ட பொறியியல் பட்டதாரியினால் G.C.E.O/L மாணவர்களுக்குக் கணித பாடமும், G.C.E. A/L, LONDON A/L மாணவர்களுக்குப் பௌதீக பாடமும் வீடுகளுக்கு வந்து தனியாகவோ, சிறு குழுக்களாகவோ கற்பிக்கப்படும். அதி திறமைச் சித்தி பெறவிரும்புவோர் அதி சிறப்பாக வழி நடாத்தப்படுவர்.

தொடர்பு கொள்க:- R.கவி {B.Sc (Eng)} Hotline:- 072-431032

---

## வதிவிட விசா பெற்று வெளிநாடு செல்கிறீர்களா?

### உங்கள் பாரத்தை நாங்கள் சுமக்கத்தயார் !

உலகின் எப்பாகத்திற்கும் தங்களது வீட்டுப் பொருட்களை குறைந்த செலவில் துரிதமாய் அனுப்புவோம்.

- அம்மி முதல் ஆட்டுக்கல் வரை
- வெள்ளிப்பாத்திரம் முதல் குத்துவிளக்கு வரை
- உணவுப் பொருள் முதல் உடுதுணி வரை
- தளபாடங்கள் முதல் தரைவிரிப்பு வரை

சகல பொருட்களையும் சிறப்பான முறையில் பொதி செய்து சுங்கத்திணைக்கள நடைமுறைக்கு அமைய காப்புறுதி செய்து பொதிகளாகவோ, கொள்கலன்களாகவோ அனுப்பிவைக்கப்படும்.

பிரயாணத்திற்கு 10 நாட்களுக்கு முன் தொடர்பு கொள்க

**DIRECTLINE INTERNATIONAL (PVT) LTD.**
164-1/2, Maha Vidyala Mawatha, Colombo-13.
Tel: 074-610877 - 8 Fax: 94-1-543204
E-mail: directline@wow.lk

(சுங்கத்திணைக்கள அனுமதி பெற்ற முகவர்)

---

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**

142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754

---

# SAMARASINGHE OPTICIANS

*For Best Quality Spectacles & Contact Lenses*

**Samarasinghe Opticians**
85, Olcott Mawatha, Colombo-11.
TP: 421973, 338732 E-mail: sight@eureka.lk

Branches: Kandy, Kegalle, Nuwaraeliya, Gampola & Hatton.

---

## சிங்கப்பூரில் தங்குமிடவசதி

சிங்கப்பூரில் திருமணப் பதிவு செய்து, திருமணம் செய்ய வருவோருக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும்,இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவரவர் வசதிக்கு ஏற்ப செய்து தரப்படும். இலவச விமான நிலைய வாகன வசதி, சலுகைக் கட்டணத்தில் வாடகைக் கார்.

விபரத்திற்கு:-

**LINGAM WEDDING SERVICE**
10, Anson Road, # 15-14 International Plaza, Singapore 079903
எந்நேரத்திலும் தொடர்பு கொள்வதற்கு வசதியாக கைத் தொலைபேசி எண்:
அப்பு: 0065-975 14 941

---

## வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கு

- நவீன கணனி முறையுடன் 3D Graphicsலான Mixing 300/= முதல், மும்மொழிகளிலும் Title & DJ Audio Dubbing,
- நீண்டகாலப் பாவனைக்காக VCD களில் மாற்றிக்கொள்ள 3VCD களுக்கும் 450/= மட்டுமே, VPP, நேரடி விநியோக வசதி
- 3D Editing வசதிகளுடன் கூடிய கணனி விற்பனை, பராமரிப்பு உங்கள் ஸ்தாபனங்களிலே பயிற்சிநெறி, உடனடி சேவைகள்.

தொடர்புகளுக்கு :- TEL: 051-22678 FRANKET. HATTON

---



## இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி

மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஒளடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



### உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

### ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

### ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

### ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

### ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்


மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

### ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

### ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.



### ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

### ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

### ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

### ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

### ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷ் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

### ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

### ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி.**

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 466271, 466571, 342463, 466620, 431137, 466820. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-6.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 00945-235097
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# அண்டை மண்டலத்திலிருந்து...

கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்துள்ளதானது பல கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்துத்துவத்தில் அதிக நம்பிக்கையுள்ள பாரதீய ஜனதா கட்சியின் மத்திய அரசே கொண்டுவரத் தயங்கும் ஒரு சட்டத்தைத் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது.

எவர் ஒருவரையும், அல்லது குறிப்பிட்ட மக்கள் பகுதியினரையும் ஆசை காட்டியோ, அச்சுறுத்தியோ அல்லது நிர்ப்பந்தப்படுத்தியோ மதமாற்றம் செய்பவர்களை அல்லது செய்ய முயற்சிப்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கிறது இச் சட்டம். தமிழக அரசின் "இந்தியாவில் குறிப்பாக படிப்பறிவில்லாத ஏழை மக்கள் மத்தியில் கிறிஸ்தவ அமைப்புகள் பல ஆண்டுகளாக மருத்துவச்சேவை, கல்விச் சேவை என்பதன் பெயரால் படிப்படியான மதமாற்றத்தைச் செய்து வருகின்றனர். இந்த மக்களின் அறியாமை, வறுமை, நோய் போன்ற அம்சங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு மதமாற்றத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கிறிஸ்தவ அமைப்புகள் கல்வி மற்றும் மருத்துவத் துறையில் ஆற்றிவரும் பங்களிப்புகள் குறைத்து மதிப்பிடத் தக்கதல்ல. எனினும் அந்தச் சேவைகளின் பின் ஒளிந்துள்ள உள் நோக்கம்தான் மிகவும் கவலையளிக்கிறது. இதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இதை தடைசெய்ய முன்பே சட்டம் கொண்டு வந்திருக்க வேண்டும். கால தாமதமாகவேனும் இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்துள்ள தமிழக அரசைப் பாராட்டுகிறோம்" என்று இந்து மத ஆதரவு அமைப்புகள் பிரச்சாரம் செய்து வருகின்றன.

# கட்டாய மதமாற்றத் தடைச் சட்டமும் கனிந்துவரும் அரசியல் மாற்றங்களும்!

இச் சட்டத்தை இந்து முன்னணி, விஸ்வ உறிந்து பரிஷித், ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. உள்ளிட்ட பல அமைப்புகள் வரவேற்றுள்ளன. அதே சமயம் இச் சட்டத்திற்குச் சிறுபான்மை இயக்கங்களிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இச் சட்டத்தை எதிர்ப்பதில் தீவிரம் காட்டிவரும் சிறுபான்மையினர் தங்கள் எதிர்ப்புக்கு ஆதரவாக அரசியல் கட்சிகளைத் திரட்டுவதிலும் கணிசமான வெற்றியை ஈட்டி வருகிறார்கள். தி.மு.க., காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் பல தலித் அமைப்புகள் இச் சட்டத்தை எதிர்க்கின்றனர்.

கட்டாய மத மாற்றத்தில் ஈடுபடுவோரைத் தடுக்க, தற்போதுள்ள சட்டங்களிலேயே பல வழிமுறைகள் உள்ளன. அதன்படி கட்டாய மத மாற்றத்தில் ஈடுபடுவோரைத் தண்டிக்கும் பட்சத்தில் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. ஆனால், தற்போது கொண்டு வந்துள்ள புதிய சட்டம் மிகவும் ஆபத்தானது. இதில் தெளிவு இல்லை. பொதுவாக "ஆசைகாட்டி மதம் மாற்றுவது, அச்சுறுத்தி மதம் மாற்றுவது தண்டனைக்குரியது" என்று கூறப்பட்டுள்ளது. இதன்படி சிறுபான்மையினர் அமைப்புகள் "மனிதநேயத்தோடு ஏழை எளிய மக்களுக்குச் செய்யும் பல்வேறு விதமான சேவைகளை, குறிப்பாக மருத்துவ சேவை மற்றும் கல்வி சேவைகளைக் கூட கொச்சைப் படுத்தி விட முடியும். சமூக சேவகர்களைக் கைது செய்துவிட முடியும். எனவே இது ஆபத்தானது மட்டுமல்ல, ஏழை எளிய மக்கள் பெற்றுவரக் கூடிய நன்மைகளைத் தடைசெய்துவிடும்" என்று பலமான வாதங்களை வைக்கிறார்கள்.

இதற்கு பலமான எதிர்வாதங்களை இந்த அமைப்புக்களும் வைத்துள்ளன.

பிரபல ஆடிட்டர் எஸ்.குருமூர்த்தி, "இது போன்ற ஒரு சட்டத்தைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழக முதல்வராயிருந்த எம்.ஜி.ஆர். கொண்டு வர முயன்றார். இதைக்காஞ்சி பரமாச்சாரியாரும் வரவேற்று எம்.ஜி.ஆரை ஆசீர்வதித்தார். ஆனால், சில அரசியல் காரணங்களால் இச் சட்டத்தைக் கொண்டுவர இயலாமல் எம்.ஜி.ஆர். பின்வாங்கி விட்டார். சிறுபான்மையினரின் வாக்கு வங்கியைக் காப்பாற்றிகொள்ளத்தான் பல அரசியல் கட்சிகள் இச் சட்டத்தை எதிர்க்கின்றனர். இவர்கள் பேசுவது போலி மதச்சார்பின்மையேயன்றி அதில் உண்மையில்லை" என்று கூறுகின்றார்.

"ஜெயலலிதா கொண்டு வந்துள்ள 'கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம்' என்பது மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க. தலைவர்களின் நன்மதிப்பைப் பெறுவதற்காகத்தான். இதன் மூலம் பா.ஜ.க. உறவை நாடுகிறது. அ.தி.மு.க. ஜெயலலிதாவிற்குள் இதுவரை ஒளிந்திருந்த இந்துத்துவ எண்ணம் இப்போது வெளிவந்துவிட்டது. ஒரு வகையில் ஜெயலலிதா குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியின் பிரதிபிம்பமாக இருக்கிறார்..." என்றும் சில அரசியல் பார்வையாளர்கள் வர்ணிக்கிறார்கள்.

"தமிழகத்தில் கடும் வறட்சி, தொழிற்சாலைகள் மூடல், அரசு ஊழியர்கள் இதுவரை அனுபவித்து வந்த சலுகைகள் பறிப்பு, பொலிஸ் அராஜகம், அரசின் மக்கள் விரோதச் செயற்பாடுகள், அரசு கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்களுடன் இணைத்தது போன்றவற்றின் தொடர் நடவடிக்கையாக இந்தச் சட்டத்தை ஜெயலலிதா கொண்டு வந்துள்ளார். இதன் மூலம் மக்கள் கவனத்தைத் திசை திருப்புவதும், பெரும்பான்மை சமூகத்தவர்களின் ஆதரவைப் பெறுவதும் ஜெயலலிதாவின் நோக்கமாக இருக்கக் கூடும்" என்றும் சில அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

எது எப்படியானபோதிலும் இச் சட்டத்தை எதிர்ப்பதன் மூலம் தி.மு.க.வானது பா.ஜ.க. கூட்டணியிலிருந்து தனிமைப்பட நேரிடலாம். அந்தச் சமயத்தில் தமிழகத்தில் அ.தி.மு.க. உறவு கொள்ளக்கூடிய ஒரே தேசியக் கட்சி பா.ஜ.க. வைத் தவிர வேறில்லை என்ற நிலைமை தோன்றக் கூடும்.

தமிழக அரசின் இந்தக் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் இந்தியாவில் பா.ஜ.க. ஆளும் மற்ற மாநிலங்களும் பின்பற்றக் கூடும். மத்திய அரசும் பின்பற்றக் கூடும். ஆனால் மத்தியில் கூட்டணியில் உள்ள எல்லாக் கட்சிகளுமே 'கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை' ஆதரிக்குமா? என்பது சந்தேகமே. அந்த நேரத்தில் அ.தி.மு.க., சிவசேனை போன்ற அமைப்புகள் மத்திய அரசை ஆதரிக்க முன் வரலாம். மத சார்பற்ற மற்றக் கட்சிகள் இதை எப்படி எதிர்கொள்ளப் போகின்றன என்பது தெரியவில்லை. ஆனால், பா.ஜ.க. கூட்டணியிலுள்ள தெலுங்கு தேசம் போன்ற கட்சிகள் இதனைக் கடுமையாக எதிர்க்கக் கூடும். ஆகவே இது போன்ற சட்டத்தை மத்திய அரசு கொண்டுவர முனையாது.

## கானகன்

கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் பற்றிக் கூறவேண்டுமெனில் அதை நடைமுறைப்படுத்தும் போது சில தவறுகள் நடக்க வாய்ப்பு உள்ளது என்பது மறுக்க முடியாததே. அரசு அதிகாரிகளும், பொலிஸும் சிறுபான்மை அமைப்புக்களை மிரட்டவும், பணம் பறிக்கவும் இச் சட்டத்தை கையாள வாய்ப்புண்டு. எனினும் சமீப ஆண்டுகளாகத் தமிழகத்தில் அதிகரித்து வரும் மதமாற்றம், அதன் காரணமாக ஏற்பட்டு வரும் பதற்றம் போன்ற வகைளுக்கு ஒரு எச்சரிக்கை தேவைப் படுகிறது. அந்த எச்சரிக்கையாக இந்தச் சட்டம்அமையுமானால் அந்த அளவுக்குப் போதுமானது. ஆனால், சிறுபான்மையினரின் சுதந்திரமான நடவடிக்கைகளில் குறுக்கிட்டாலோ, உயர்ந்த நோக்கங்களுக்குக் களங்கம் கற்பித்தாலோ இந்தச் சட்டத்தை மக்கள் தூக்கி எறியத் தயங்கமாட்டார்கள்.

# நூறு மலர்கள் மலராட்டும்

பன்முகத் தன்மை, ஜனநாயகம், மனித உரிமை ஆகிய சொற்கள் அர்த்தமுள்ளவையாக மாற்றப்படுவது தற்போதைய இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றுத் தேவையாகும்.

தேசிய மட்டத்தில் மாத்திரமல்ல -பிராந்திய மட்டங்களிலும் -சர்வதேச அளவிலும் இவை பெரிதும் வேண்டப்படுகின்றன.

'ஒரு கண்ணில் வெண்ணெயும் மறு கண்ணில் சுண்ணாம்பும்' என்ற பாரபட்சமான போக்கே துரதிஸ்டவசமாக சர்வதேச, தேசிய, உள்ளூர், பிராந்திய மட்டங்களில் காணப்படுகின்றன.

இதனைக் களைவதற்கான போராட்டம் மனிதகுல வரலாறு முழுவதும் காணப்படுகிறது. இந்தச் சொற்கள் கடந்த ஆயிரம் ஆண்டுகளின் மத்திய காலத்தில் உதயமாகியிருப்பினும் மனித குலம் தோன்றிய காலத்திலிருந்து இவற்றுக்கான போராட்டங்கள் நடந்துள்ளன.

அடிமை உடைமைச் சமுதாயத்தில் அடிமைகளின் சுதந்திரத்திற்கான போராட்டத்தை நாம் அறிவோம். ரோமானிய சாம்ராச்சியத்தில் ஸ்பாட்டகஸ் அடிமைகளைத் திரட்டி அவர்களின் விடுதலைக்காகப் போராடினான்.

நிலமானிய சமுதாயத்தில் மன்னராட்சியை ஒழித்துக்கட்டும் பிரான்சியப் புரட்சியை நாம் வரலாற்றில் அறிந்திருப்போம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன அங்கு மக்களின் கோரிக்கைகளாக இருந்தன.

ஒடுக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவ சமுதாய அமைப்புக்கெதிராகப் போராடி வருவதையும், கார்ல்மார்க்சின் கம்யூனிச தத்துவம் ஒடுக்கப்பட்ட மக்களின், தொழிலாள வர்க்கத்தின் ஆயுதமாக இன்று வரை நிலவுவதையும் யாரும் நிராகரிக்க முடியாது.

உலக வரைபடத்தில் ஒரு கணிசமான பகுதி நாடுகள் சோசலிச ஆட்சி அதிகாரத்தை நிறுவியதையும், உலகின் பெரும்பாலான மூன்றாம் மண்டல நாடுகள் அதற்கு ஆதரவாக நின்றதையும், பெரும்பாலான தேசிய விடுதலை இயக்கங்கள் இந்தக் கொள்கைகளை வரிந்து கொண்டதையும் நாம் அவதானிக்கலாம்.

இனங்களின்- தேசங்களின் சுயநிர்ணய உரிமை, ஆண்-பெண் சமத்துவம், சிறுவர்களின் உரிமை என்று கோரிக்கைகள் சர்வ வியாபகமாகிவிட்டன.

இந்தியாவில் தலித்தியம் ஒரு முக்கிய கோட்பாடாக வளர்ச்சியுற்றுள்ளது. சாதி ஒடுக்குமுறைக்குள்ளான மக்களின் விடியலை இது வலியுறுத்தி நிற்கிறது.

எல்லா அரங்குகளிலும் மனிதர்களின் சமத்துவம், வேறுபாடுகள் ஒழிக்கப்படுதல், தனித்துவம் போன்ற அபிலாசைகள் வெளிப் படுத்தப்படுகின்றன.

இலங்கையில் நீடித்து நிலவிய எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான பௌத்த சிங்கள மக்களின் மேலாண்மை என்ற அரசியல், சமூக, பொருளாதாரக் கட்டுமானம் இலங்கைச் சமூகங்களினிடையே பாரதூரமான பிளவை ஏற்படுத்தியுள்ளது.

பாரிய மனித அழிவுகளை ஏற்படுத்தி, பயங்கர வன்முறைகளாகவும் - நீடித்த ஈவிரக்கமற்ற போராகவும் இது மாறியது.

இனங்களின் -மத சமூகங்களின் ஜனநாயகம் மறுக்கப்பட்டமையால், சமமாக மதிக்கப்படாமையால், இலங்கைச் சமூகங்களின் பன்முகத் தன்மை ஏற்றுக்கொள்ளப்படாததால்-பௌத்த சிங்கள மக்களின் நாடு என்ற அகங்காரக் கருத்தியலும், நடைமுறையும் இந்த நாட்டில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓட வைத்தன.

வரலாற்றில் சில சம்பவங்கள் தற்செயலாக ஏற்பட்டவையல்ல.

'முன்னை இட்ட தீ முப்புரத்திலே, பின்னை இட்ட தீ இலங்கை மண்ணிலே' என்பார்கள். ஆனால் யாழ் நூல் நிலையம் எரிந்து சில ஆண்டுகளுக்குப் பின் இலங்கையே எரியத் தொடங்கியது.

வரலாற்றில் ஒரு பாரதூரமான தவறு இழைக்கப்பட்டால் அது இன்னொரு சந்தர்ப்பத்தில் மிகப் பயங்கரமான வடிவை எடுக்கும். வரலாறு தவறுகளைச் சரிசெய்துகொள்ள முயலும்.

இலங்கையில் இத்தகைய அனுபவங்கள் தான் சமகாலத்தில் வலுவான சமாதான எண்ணங்களுக்கு வித்திட்டன.

சர்வதேச அளவிலும்- மத்திய கிழக்கில் பாலஸ்தீனர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும், உலக நாடுகளின் மீது மேலாண்மை செலுத்தும் நோக்கங்களுக்காக மத அடிப்படைவாதங்கள் சில காலங்களில் ஊக்குவிக்கப்பட்டதாலும் இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அழிவுகளைப் பெரும் விலையாகச் செலுத்த வேண்டி வந்தது.

2001 செப்டெம்பர் 11 இல் நிகழ்ந்த சம்பவங்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும்.

சின்ன டேவீட்டுக்களின் உணர்வுகளை மதிக்காத ஆணவம் பிடித்த கோலியாத்துக்கள் சில வேளை கவணில் வைத்து விளையாடும் சிறு கற்களிலேயே தடுமாறிப்போய்விடுவார்கள்.

'வாழு, வாழ விடு' என்பது உயரிய தத்துவமாகும். வடக்கு -கிழக்கில் எல்லாமே தாங்கள்தான் -'அனுவும் நானே. அண்ட சராசரமும் நானே ' என்று சிலர் நடந்து கொள்கிறார்கள். அவர்கள் வேறுபட்ட அபிப்பிராயங்கள் -மனிதர்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சமூக-அரசியல் செயற்பாட்டுச் சுதந்திரம், வெவ்வேறு சமூக-அரசியல் சக்திகளின் இருப்பு, வெவ்வேறு சமூகங்களின் இருப்பு என்பவற்றை நிராகரிக்கிறார்கள்.

அதாவது வில்லியம் தெல் எனும் நாடகத்தில் "வீதியில் தொங்கவிடப்பட்டிருக்கும் மன்னனின் தொப்பிக்கு எல்லோரும் சலாம் போட வேண்டும்." சலாம் போடாத வில்லியம் தெல் தனது "அருமை மகனின் தலையில் அப்பிளை வைத்து அடித்து விழுத்த வேண்டும்" என்று கேட்கப்பட்டான்.

## தாகூர்

ஆனால் இங்கு அப்பிள் அல்ல. இங்கு தலையே போய்விடும்.


மானிடத்தின் - சமூகத்தின் விடுதலையின் பெயரில் இந்தக் காரியங்கள் வடக்குக் கிழக்கில் நடைபெறுகின்றன.

பல்வேறு சமூகங்களின் இருப்பு பல்வேறு சமூக அரசியல் சக்திகளின் இருப்பு உறுதிப் படுத்தப்படுவதுடனும், சமூக, பொருளாதார, அபிவிருத்தி நடவடிக்கைகளில் சகலரினதும் நிராகரிக்க முடியாத பங்குபற்றலுடனுமே உண்மையான தேச விடுதலை சாத்தியமாகும்.

சமகாலத்தில் நடைபெற்ற பிரபலமான சமாதான முயற்சிகளில் தென்னாபிரிக்கா குறிப்பிடத் தகுந்த வெற்றியைப் பெற்றதற்குக் காரணம் அங்கு பல்வேறு சமூகங்களின், அரசியல் ஸ்தாபனங்களின், தனி மனிதர்களின் கருத்துக்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்டன.

பாரதி பாடிய 'தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்ற பாரபட்சங்களுக்கெதிரான குரலும், போட்டோரிக்கா நாட்டின் சுதந்திரத்திற்காக "ஒரு போட்டோரிக்கா பிரசையாயினும் உறுதியாக நிற்கும் வரை அதனை ஆதரிப்போம்" என்ற பிடலின் குரலும் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டியவை. ●

# அதிரடி அய்யாத்துரை



***"தொட்ட காரியம்*** எல்லாம் தோல்வி" எண்ட பெயரை வலுகெட்டித்தனமா சம்பாதிச்சுப் போட்டு நிக்கிறார் எங்கட புறபிசர் பீரிஸ். முந்தின அரசாங்கத்தில இருக்கேக்கயும் ஐ.தே.க.வை இணங்க வைக்கிறதாச் சொல்லி அரசியல் யாப்பு ஆலோசனைகளை தன்ர மடியில எடுத்து வைச்சிருந்து மலினப்படுத்திக் கெடுத்தவர். இப்ப, 19 ம் திருத்தம் எண்டு தொடங்கி மண்கவ்வியிருக்கிறார். "இதை அசைக்க முடியாது" எண்டு பெரிசாப் பேட்டி கொடுத்தார். இப்ப சுப்பிறீம் கோர்ட் நீதிபதிகள் அத்தனை பேரும் ஒட்டு மொத்தமா ஊதித்தள்ளிப் போட்டினம். "தேர்தலுக்குத்தான் போகவேணும்" எண்டு முழுசாடுறார். "ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைச்சுப் போடுவா" எண்டு சொல்லத் தொடங்கி இப்ப தாங்களே கலைக்கிற நிலைக்கு வந்திருக்கினம். தேவையா இது?

***புலிகள் 7*** இராணுவத்தினரைப் பிடிச்சு இரண்டு புலி உறுப்பினர்களை விடுவிச்ச சம்பவம் தெரிஞ்சவிசயம். அந்தப் புலிகளுக்கு சரீரப் பிணை, ரொக்கப் பிணை வழங்க ஏற்பாடு செய்தது எங்கட வினாயக எம்.பி.யார்தானாம். தன்ர சொந்தக்காறரை முன் நிறுத்தித்தான் ஏற்பாடு செய்தவராம். விடுபட்ட புலிகள் என்ன மாசா மாசம் வந்து பொலிசில சைன் வைக்கவே போகினம்? அவை டாட்டா காட்டிட்டு அந்தத் திசையிலேயே போயிட்டினம். தன்ர சொந்தக்காறற்ரை கழுத்தையெல்லோ இப்ப நீதி மன்றம் பிடிக் கப் போகுதெண்டு முழுசாட்டமாக் கிடக்குது நம்மாளுக்கு. லோயராயிருந்தும் லொக்காகிப் போயிட்டாரே!

***யாழ்ப்பாணத்து*** இலக்கிய விழாவுக்கு ஆளுக்கு ஒவ்வொரு வேலை கொடுத்திருந்ததாம். எங்கட அமைச்சர் மகேஸ்வரனாருக்கு "நளபாகம்" (சமையல் கலை). "பாவம் அவரை விழாவிலையும் சேர்த்துக் கொள்ளுங்கோவன்" எண்டு சிலபேர் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுப் பார்த்திருக்கினம். "அவர் அதையே பார்க்கட்டும், இங்காலப் பக்கம் தலைகாட்டக் கூடாது" எண்டு சொல்லி அனுப்பிச்சினமாம் அவை. ம்... "இதனை இதனால் இவன் முடிப்பானென்றாய்ந்து, அவனை அவன்கண் விடல்" என்று வள்ளுவர் சொன்னபடி பொருத்தமான பொறுப்பைத்தான் குடுத்திருக்கினம் ஆளுக்கு.

***அரபு நாடுகளில்*** வேலைக்கு போகிற பெண்கள் என்ன பாடு படுகினம் எண்டு கன கண்ணீர்க் கதைகள் வந்து சேருது. எங்கட தூதரகம், எல்லாம் நல்லபடியாத்தான் நடக்குது எண்டு வழமையான பாட்டைப் பாடுது. அரசாங்கம், பொருளாதாரம் வந்தால் போதும் எண்டிராமல் இதுகளிலையும் கொஞ்சம் கரிசனை காட்டினால் என்னவாம்?

***அம்பாறை*** முஸ்லிம் வாலிபர் கடத்தல், நாடகம் எண்டினம் சிலர். நாடகம் எண்டு காட்டவும் ஒரு நாடகம் நடக்கிறதாவும் கதை. தங்களுக்கு மேல பழி போட்டு அரசியல் பழிவாங்கலுக்கு வழிதேடுறதா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சிலரும் முறைப்படுகினம். வாழ்க்கையே ஒரு நாடகம் நாமெலாம் அதில் பாத்திரம் எண்டதுதான் இப்பத்தைய நிலவரம் போல?

***"தமிழீழமென்பது*** பிரிவினையும் அல்ல தனிநாடும் அல்ல" என்று ஒரு இலக்கியக் கண்டுபிடிப்பை இலக்கிய மாநாட்டில் சொல்லியுள்ளார் இலக்கியத்துடனோ போராட்டத்துடனோ சம்பந்தமற்ற சி.வி.கே. சிவஞானம். அது, அதுவா இதுவா-எது என்று பொருள் தெரியாது, ஆளாளுக்கு கொடுக்கும் வியாக்கியானங்கள் எல்லாம் புலிகள் தலைவர் அதை எதுவென்று விளக்கும் வரையில்தான்.

***இப்ப எலக்சன்*** தேவையோ இல்லையோ எண்டது வேற கதை. ஆனால் "இப்பதான் இந்த அரசியல் கட்சிகளுக்கு கோடி கோடியாக் கொட்டிப் போட்டு, ஐஞ்சு சதம் சம்பாதிக்க முந்தி திரும்பவும் கொட்டவேண்டி வந்திடப் போகுதே" எண்டு திண்டாடுறது மட்டும் நம்ம முதலாளி வர்க்கம் தான். ■

## மனித மூளைக்கும் கம்பியூட்டருக்கும் இடையிலான போர்



மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட கொம்பியூட்டர் என்றோ ஒரு நாள் மனிதனை விஞ்சிவிடுமா என்ற விவாதம் பல வருட காலமாக மக்கள் மத்தியில் இருந்து வருகிறது.

இது தொடர்பான மற்றொரு பரீட்சார்த்த முயற்சி இந்த நாட்களில் நடைபெற்று வருகிறது.

உலகின் முதல்தர செஸ் வீரர் விளாடிமிர் கிரம்னிக், அதி சக்தி வாய்ந்த சிந்தானா ஓட்டமுள்ள கொம்பியூட்டர் றோபோ ஒன்றுடன் செஸ் போட்டி ஒன்றில் ஆடி வருகிறார். இந்தப் போட்டியில் வெற்றி பெற்றால் கிரம்னிக்குக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும்.

8 சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியின் 6 சுற்றுக்கள் தற்போது நிறைவடைந்துள்ளன. இவற்றுள் முதல் 2 சுற்றுக்களிலும் கிரம்னிக் வெற்றி பெற்றார்.

ஆனால், அடுத்த இரண்டு சுற்றுக்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. நான்காவது, ஐந்தாவது சுற்றுக்களில் டீப் ஃபிரிட்ஸ் (Deep Fritz)என்ற றோபோ வெற்றியீட்டியது.

முதலிரண்டு சுற்றுக்களிலும் கிரம்னிக் வெற்றி பெற்றதற்கு அவரது நுணுக்கம் என்பதை விடவும் கிரம்னிக்கின் ஆற்றல் நுணுக்கத்தை றோபோ கிரகிக்கச் சற்று அவகாசம் தேவைப்பட்டதே காரணம் என விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அடுத்த 2 சுற்றுக்களும் மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகச்சம்பியனான கிரம்னிக் தான் தன் வாழ்நாளில் சந்தித்த மிகவும் சிரமமான போட்டியாளர் என இந்த றோபோவை வர்ணித்துள்ளார்.

இந்தப் போட்டித் தொடரில் றோபோ வெற்றி பெறுமாயின் மனித மூளைக்கு விடுக்கப்படும் மிகப் பெரிய சவாலாக அதனைக் கருத முடியுமெனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

## தந்தை மகளுக்கு எதிராக 100 மில்லியன் டொலர் கேட்டு வழக்கு



உலகப் புகழ் பெற்ற பாடகி விட்னிக்கு எதிராக அவரது தந்தை ஹுஸ்டன் 100 மில்லியன் டொலர் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

ஹுஸ்டன் என்டர்டைய்ன்மென்ட் என்ற நிறுவனத்தை விட்னியின் தந்தை கொண்டு நடத்துகிறார். அந்த நிறுவனம் விட்னியின் இசைத்துறை முன்னேற்றத்திற்காக வழங்கிய பங்களிப்புக்களுக்கு விட்னி எந்தவித கொடுப்பனவுகளையும் செய்யவில்லையெனக் கூறி ஹுஸ்டனால் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

விட்னி போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டுப் பொலிஸாரிடம் சிக்கியபோது அவரை மீட்பதற்காகச் செலவழித்த தொகையைக் கூட தனக்கு வழங்கவில்லையென ஹுஸ்டன் கூறியிருக்கிறார்.

இது இவ்விதம் இருக்க, கடுமையான போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள விட்னியின் குரல் வளம் மோசமாகச் சிதைந்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது அவர் பாடும்பொழுது குரலில் தழுதழுப்புக் காணப்படுவதாக இரசிகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## மேலும் இருவரைக் குறிவைத்த வாஷிங்டன் ஸ்னைப்பர் மேன்

கடந்த 2ஆம் திகதி முதல் வாஷிங்டன் நகரத்தை உலுக்கி வரும் மர்ம துப்பாக்கிதாரியைப் பொலிஸாரினால் இன்னமும் அடையாளம் காணவோ, கைது செய்யவோ முடியாமல் போயுள்ளது. வாஷிங்டன் ஸ்னைப்பர் என இந்த நபரைப் பொலிஸார் அழைக்கின்றனர். இந்த வாரத்திற்குள் இவரது ஸ்னைப்பர் துப்பாக்கிக்கு மேலும் இரண்டு பேர் பலியாகியுள்ளதுடன் 2 பேர் காயமடைந்திருக்கிறார்கள்.

இப்போது இந்தத் துப்பாக்கிதாரியின் பிரச்சனை அமெரிக்க அரசாங்கத்தின் உயர்மட்டம் வரை கடும் விவாதத்துக்குரியதாக மாறியிருக்கிறது. அந் நாட்டு உளவுப் பிரிவுகள் விசேட விமானங்களைப் பயன்படுத்தி இந்த நபரைத் தேடி வருகின்றன.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு ஒருவர் கொலையுண்டால் அன்றைய தினம் வாஷிங்டன் நகரின் அன்றாடப் பணிகள் ஸ்தம்பித்து வெறிச்சோடிக் காணப்படுகிறது.

இது அந்த நகரின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வெகுவாகப் பாதித்திருக்கிறது. இந்தத் தாக்குதல்கள் ஒரு மனநோயாளியின் செயலாக இருக்க முடியாது எனவும், இது திட்டமிட்ட நடவடிக்கை எனவும் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறியிருக்கிறார்.

வாஷிங்டன் நகரின் 25 கிலோ மீற்றர் தூரத்திற்குள் குறி பார்த்து ஒவ்வொருவராய்ச் சுட்டுக் கொன்று திரியும் ஒரு துப்பாக்கிதாரியைப் பிடிக்க முடியாத அமெரிக்க பாதுகாப்புத் தரப்பினர் ஒசாமா பின்லேடனை ஆப்கானிஸ்தானில் போய் எப்படிப் பிடிக்கப் போகிறார்கள் என அந்த நாட்டு மக்கள் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

## சல்மான்கான் நிரந்தரமாகச் சிறையில்தானா?

மும்பாய் நகரில் வீதியோரமாக உறங்கிக் கொண்டிருந்த ஒருவரைத் தனது காரால் மோதிக் கொன்றார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தற்போது பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருக்கும் பிரபல ஹிந்தித் திரைப்பட நடிகர் சல்மான்கான் மீது மும்பாய் நகரப் பொலிஸார் மேலும் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

கடந்த மாதம் சல்மான்கானின் காரினால் மோதிப் பொது மகன் ஒருவர் கொல்லப்பட்டார். இதற்கு முன்னரும் இவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்று மும்பாய் வாசி ஒருவர் படுகாயமடைந்தார். அப்போது இந்த விசயத்தைப் பொலிஸார் முடிமறைத்துவிட்டனர். ஆனால், இம்முறை பொதுமக்களிடமிருந்து கிளம்பிய கடும் எதிர்ப்புக் காரணமாக சல்மான்கானைக் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால், இப்போது விசாரணை வேறு திசையில் செல்லத் தொடங்கியிருக்கிறது.

சல்மான்கானுக்கும் பிரபல மும்பாய் பாதாள உலகக் கோஷ்டிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகச் சந்தேகிக்கும் பொலிஸார் அதற்கான ஆதாரங்களையும் திரட்டி வருகின்றனர்.

சர்வதேச ரீதியில் அறியப்பட்ட பயங்கரவாதிகள் சிலருடன் சல்மான்கான் உரையாடியதாக நம்பப்படும் தொலைபேசி உரையாடல் காசெட்டுக்களை மும்பாய்ப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர். இது சல்மான்கானுக்கு மீளமுடியாத நெருக்கடியைக் கொடுக்குமென அவரது இரசிகர்கள் கவலை கொண்டுள்ளனர்.

முன்னதாக சல்மான்கான் கார் விபத்தில் ஒருவரைக் கொலை செய்தது தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர் 950 ரூபாப் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால், இம்முறை அது சாத்தியமாகாமல் போயிற்று.

பொதுமக்களின் எதிர்ப்புக் குரல் காரணமாக நீதிமன்றம் உசாராக இருந்தது. சல்மான்கானுக்குப் பிணை மறுக்கப்பட்டபோது நீதிமன்றத்தில் கூடியிருந்த அவரது இரசிகர்கள் கதறி அழுதனர்.

37 வயதான சல்மான்கான் முறையான சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்கவில்லை என்றும், விபத்து நடைபெற்ற வேளையில் மதுபோதையில் இருந்தார் என்றும் கூறப்படுகிறது. எவ்வாறெனினும் இறந்தவரின் குடும்பத்தினருக்குப் பாரிய நட்டஈட்டுத் தொகையைக் கொடுப்பதன் முலமேனும் இந்த வழக்கிலிருந்து சல்மான்கான் வெளியில் வந்தாலும் தீவிரவாதிகளுடன் தொடர்பு எனக் கூறி அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்களிலிருந்து அவரால் இலகுவில் மீள முடியாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.






# உடைந்த உல்லாசம்



→ இந்தோனேசியாவிற்குத் தெற்காக உள்ள பாலித்தீவுகள் தென்கிழக்காசியாவில் மிகவும் பிரபலமான உல்லாச புரியாகக் கருதப் படும் இடம். எப்பொழுதும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பிக் காணப் படும் இந்தத் தீவு, பாலியல் தொழில்சார் சுற்றுலாவின் கேந்திர இடம். அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமானோர் கூடியிருந்த சமயம் கடந்த 12 ம் திகதி சனிக்கிழமையன்று மாலை இந்தத் தீவின் சனநடமாட்டம் உள்ள கூட்டா கடற்கரைப் பகுதியில் அதி சக்தி வாய்ந்த கார் குண்டு ஒன்று வெடித்ததில் 180 க்கும் மேற்பட்டவர்கள் உடல் சிதறிப் பலியாகினர். கொல்லப்பட்டவர்களில் அனேகமானோர் வெளிநாட்டுச் சுறுலாப் பயணிகள். இந்தத் தாக்குதலின் பின்னர் பல நாடுகள் தமது பிரஜைகளை இந்தோநேசியாவில் இருந்து வெளியேறுமாறு கேட்டுள்ளன. இத் தாக்குதலுக்கு ஒசாமா பின்லேடனின் அல் கைதா அமைப்பு காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.


குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் சிதைந்து போன கார் ஒன்றிற்கு அருகில் மலர் வளையம் வைக்கப்பட்டிருப்பதையும் குண்டுவெடிப்புக்கு முன் பாலித்தீவுகளில் உல்லாசப் பிரயாணிகள் உல்லாசமாக நடமாடுவதையுமே படங்களில் காண்கிறீர்கள்.



# மிதவாதம்

↑ இந்த ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு யாருக்குக் கிடைக்கும் என்பது பலராலும் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்பட்ட ஒரு விடயம். செப்டம்பர் 11 ம் திகதி தாக்குதலின் பின்னர் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு அமெரிக்கா தனக்குப் பிடிக்காதவர்கள் சகலரையும் தாக்கி அழிக்கும் பிரயத்தனத்தில் இறங்கியிருக்கிறது. அமெரிக்காவின் இந்த முயற்சியைப் பாராட்டி ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷுக்கும் அவரது இணைபிரியா நண்பரான பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கும் இவ்வாண்டுக்கான சமாதானத்திற்குரிய நோபல் பரிசு கிடைக்குமெனச் சிலர் எதிர்வு கூறினர். ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயின் பெயரும் நோபல் பரிசுக்குச் சிபார்சு செய்யப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால் நோபல் பரிசுக் குழு தலைகீழாகத் தீர்மானம் எடுத்திருக்கிறது. அது இவ்வாண்டுக்கான சமாதான நோபல் பரிசை அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டருக்கு வழங்கியுள்ளது. காட்டர் 1977 ம் ஜனவரி 20 ம் திகதி முதல் 1981 ம் ஆண்டு ஜனவரி 20 ம் திகதி வரை அமெரிக்க ஜனாதிபதியாகக் கடமையாற்றியவர். அமெரிக்க ஜனாதிபதிகளுள் மிகவும் மிதமான போக்குடையவர் எனப் பலராலும் அறியப்பட்ட ஜிம்மி காட்டர் தற்போது ஈராக் மீது தாக்குதல் தொடுக்க புஷ் நிர்வாகம் எடுத்துவரும் முயற்சிகளைப் பகிரங்கமாக விமர்சிப்பவர். அமெரிக்காவின் தற்போதைய வெளிநாட்டுக் கொள்கை மீது தெரிவித்த கடுமையான விமர்சனமே ஜிம்மி காட்டருக்கு நோபல் பரிசு வழங்கக் காரணம் என்று விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். உலக நாடுகள் மத்தியில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதற்காக நீண்டகாலம் பணியாற்றியமைக்கே காட்டருக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டதென நோபல் தேர்வுக் குழு அறிவித்திருந்தது. ●





# ரோயல் ட்ரம்ஸ்

← சார்ள்ஸுக்கு ட்ரம்ஸ் இசைக்கத் தெரியுமா? என்பது பிரச்சனையல்ல. ஆனால் அவர் அப்படியொரு காரியம் செய்வதைப் பார்க்க அவரது ஆதரவாளர்கள் பலருக்கு ஆசை. அதனால்தான் வாய்ப்புக் கிடைத்த நேரத்தில் அவரது கையில் இசைக் கருவியைத் திணித்து அடிக்கச் சொல்லிவிட்டார்கள்.

சமீபத்தில் வேல்ஸ் சென்ற இந்த வேல்ஸ் குமாரர் அல்லது சார்ள்ஸ் குமாரர் வில்லியம் மதாயஸ் இசை நிலையத்திற்கும் சென்றார். அப்போது அங்கிருந்த இளம் இசைப் பிரியர்களின் வேண்டுகோளை சார்ள்ஸ்ஸால் தட்டிக்கழிக்க முடியவில்லை. தனது ரோயல் நிலையைச் சற்றுத் தளர்த்தி வைத்துவிட்டு இசைக் கருவியுடன் சில நிமிடங்கள் போராடினார் சார்ள்ஸ். அவரது வாத்தியம் இரசிக்கக் கூடியதாக இருந்ததோ இல்லையோ அவரது இந்தப் புதிய பொழுதுபோக்கைப் பலரும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

# நடிகைக்குக் கப்பம் செலுத்திய தயாரிப்பாளர்

தொங்கு தோட்டம் நடிகையுடன் உல்லாசமாக இருக்க அவரது வீட்டுக்குப் போன தயாரிப்பாளர் ஒருவருக்கு மறக்க முடியாத அனுபவம் ஒன்று கிட்டியது.

நடிகையிடம் பெற்ற அனுமதியின் பேரில் அவரது வீட்டுக்குப் போனார் தயாரிப்பாளர். மாலைநேரம். நல்ல போதையில் இருந்தார். நடிகையைக் கண்டதும் தயாரிப்பாளரின் போதை மேலும் தலைக்கேறியது. ஹோலில் வைத்தே நடிகை மீது அட்டகாசம் புரிய ஆரம்பித்தவரைச் சமானித்துத் தன் அறைக்குக் கூட்டிச் சென்றார் நடிகை.

தயாரிப்பாளருக்குப் பொறுமையில்லை. நடிகை தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும்வரை கூடக் காத்திருக்க விரும்பாத அவசரத்தில் துடித்த தயாரிப்பாளரைத் தன் முழுத் திறமையும் பயன்படுத்தி மொத்தச் செழிப்பையும் அன்பளித்துச் 'சாந்தி'யடையச் செய்தார் நடிகை.

எல்லாம் முடிந்து வெளியில் வரும்போது வீட்டின் முன் வாசல் கதவு மூடப்பட்டிருந்தது. பாதி உடையுடன் பாதி மயங்கிய கண்களோடு ஹோலுக்கு வந்த நடிகையும் அவரது பாட்டியும் சில இலட்சங்கள் தராமல் இடத்தைவிட்டு நகர முடியாது என்று தயாரிப்பாளருக்கு உத்தரவிட்டனர். அவருக்கு வியர்த்துவிட்டது.

"பொலிஸில் சொல்லி நாற வைத்து விடுவேன்." என்றதும் பயந்து போனார் தயாரிப்பாளர். கடைசியில் நடிகை கேட்ட தொகையைக் கொடுத்துவிட்டுத்தான் இடத்தைவிட்டு நகர முடிந்தது. "ஒரு சொதப்பல் நடிகைக்கு இத்தனை பெரிய தொகையா?" என்று நக்கலடிக்கிறார்கள் தயாரிப்பாளரின் நண்பர்கள்.




## மினி சினி

★ குவைத் நாட்டிலிருந்து காதலனுடன் வந்து தமிழகத்தில் அடைக்கலம் புகுந்தாரே தலால் ஆஸ்மி, அந்தப் பின்னணியை மையமாக வைத்து எடுக்கப்பட்டதுதான் 'த்ரீ ரோசஸ்' படமாம்.

★ டைரக்டர் பாலாவின் அடுத்த படத்தில் சூர்யாவும் விக்ரமும் இணைய இருந்தார்கள். ஆனால் இதில் இருந்து விக்ரம் விலகிவிட்டார். அதையடுத்து முரளியை அந்த ரோலில் நடிக்க வைக்க பாலா முயற்சிப்பதாகக் கேள்வி. ஆனால் கர்நாடகத்து ஆசாமியான முரளியை நடிக்க வைக்கக் கூடாது என்று பலரும் போர்க்கொடி தூக்கியுள்ளார்களாம்.

★ டைரக்டர் பாலாவுக்கும் திருமண ஆசை வந்துவிட்டது போலும். நடிகை அர்ச்சனாவை இரகசியமாகத் திருமணம் செய்து கொண்டாராம். அத்துடன் சாலிக்கிராமத்தில் புதிய வீடும் அமர்த்தி அங்கு அவரோடு குடியும் குடித்தனமுமாக வசித்து வருகிறாராம்.

★ 'பாபா'வை அடுத்து இன்னொரு படம் நடிப்பது என்ற முடிவில் ரஜனிகாந்த் உறுதியாக இருக்கிறார். தியேட்டர் அதிபர்கள், விநியோகஸ்தர்கள் விடுத்த அன்பு வேண்டுகோளை ஏற்று அவர் இந்த முடிவுக்கு வந்து இருக்கிறார். அடுத்த படத்தின் டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

★ மீனாவுக்குத் தமிழ்ப் படங்கள் அவ்வளவாக இல்லை. அண்மையில் வெளியான 'இவன்' படமும் கைவிட்டதால் தெலுங்குப் படங்களில் ஆர்வம் காட்டி வருகிறார்.

★ தமிழில் மார்க்கெட் இல்லாததினால் தன் முழுக் கவனத்தையும் மலையாளத்தில் திருப்பியிருக்கிறார் காயத்ரி ஜெயராம். ஓய்வு கிடைக்கும்போது கேரளா சென்று சான்ஸ் வேட்டையும் நடத்துகிறார்.

★ இயக்குநருக்கும், ஹீரோவுக்கும் ஏற்பட்ட ஈகோ பிரச்சனையால் 'வின்னர்' படம் முக்கால்வாசி வளர்ந்த நிலையில் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. இதனால் நொந்து போய் இருக்கிறாராம் தயாரிப்பாளர்.

## விஜயகாந்தால் பாதி...

'ராஜ்ஜியம்' படத்தின் நடி... முழுச் சம்பளம் வழங்கப்பட... நேரத்தில் ரிலீஸ் செய்யப்பட...

இரு படங்களையும் தயாரி... 'ராஜ்ஜியம்' படத்திற்காக விஜ... பாக்கியை வைத்துள்ளார் ...

அதைக் கொடுத்து ... வைத்து 'ஐ லவ் யூடா' பட...

அப்போது விஜயகாந்த் ... மல் அடுத்த படம் எடுப்ப... னுக்குப் பணத்தை செட்டி... ரிலீஸ் செய்வேன்" என்று ... மனோஜ்குமாரின் வாய் வார்... அப்படியே எழுதியும் வாங்கி... அடியால் நொந்து நூலாகி... படத்தை எடுக்கும் அவசரத்... தார்.

'ஐ லவ் யூடா' படத்தை ... வைத்துத்தான் தயாரித்தார் ... எடுத்து முடிப்பதற்குள் ... இந்தப் படத்தின் மீது விளிம்... வடிந்துவிட்டது.

ஆனால், அதை... சிகள் எடுத்தா... கூடப் போ... திடீரென்க... நிறுத்த வே... குமார்.

உதவி... பாக்கி... னால்... விஜய...



ரிச்சர்ட் - ஸ்ரீதேவி
படம்: காதல் வைரஸ்

## அ...ஆ... கற்றுக்கொள்ளும் 'ஜங்ஷன்' நாயகி

'ஜங்ஷன்' பட நாயகி ஆம்னா மும்பை வாசி. சினிமா வாசனையே இல்லாமல் பி.காம். படித்துவிட்டு வேலைக்குப் போக எண்ணிக் கொண்டிருந்தவருக்குத் திடீரென்று அடித்தது சினிமா சான்ஸ். தமிழில் ஒரு வார்த்தை கூடப் பேசத் தெரியாமல் இருந்தவர். படம் முடிவதற்குள் நிறைய வார்த்தைகள் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறார். ஆனால், ஒன்று, புரொடியூசர், டைரக்டரை எல்லாம் மரியாதை தெரியாமல் 'வாடா போடா' என்று கூப்பிட்டு வருகிறாராம்.

## சொல்ல மறந்த கதை

மனத்துக்குள் பாதுகாத்துக் கொண்டிருக்கும் காதலை 'அழகி'யாக்கி வித்தியாசமான தமிழ்ச் சினிமாவைப் படைத்தவர் ஒளிப்பதிவாளர் தங்கர் பச்சான். தற்போது அவரது தயாரிப்பில் உருவாகி வரும் இரண்டாவது படம் 'சொல்ல மறந்த கதை'. கதாநாயகர்களின் முகத்தையே மூலதனமாக்கியுள்ளாராம் பச்சான்.

"அழகியைப் போலவே இதுவும் 20 ஆண்டுகளாகப் பாதுகாத்த கதை. அழகி எப்படிப் பழைய கதையாகாமல் என்றைக்கும் புத்தம் புதுக் கதையாக இருக்கிறதோ அதேபோல் இதுவும் ஒரு சராசரி இளைஞனின் கதைதான். இப் படம் மொத்தத்தில் மனித உறவுகளின் உணர்ச்சிக் குவியல்" என்கிறார் பச்சான்.

இப் படத்தில் சேரன், ரதி, புஷ்பவனம் குப்புசாமி, பிரமிட் நடராஜன், மணிவண்ணன், ஜனகராஜ், சத்யப்பிரியா, யுவராணி, சதீஷ், மாஸ்டர் செல்வம், பேபி சரஸ்வதி உட்படப் பலர் நடிக்கின்றனர்.



## தமிழுக்குத் தாவும் மோகன்லால்

"தமிழிலாவது, நான் நடிப்பதாவது" என்று ஏகத்தாளமாகப் பேசிக் கொண்டிருந்த மலையாள சூப்பர் ஸ்டார் மோகன் லால் இப்போது தமிழ்ப் படங்களில் நடிக்க யாராவது அணுகினால், பார்மாலிட்டிக்காகக் கதையைக் கேட்டுவிட்டு உடனே தலையாட்டி விடுகிறாராம்.

மோகன் லாலுக்கு எந்தாயி? என்று விசாரித்துப் பார்த்த போது சில தகவல்கள் காதில் விழுந்தன.

ஷகீலாவின் பலான படங்களால தொடர்ந்து தங்களது படங்கள் ஊத்தி வந்ததால் மம்முட்டியும் மோகன்லாலும் ஒன்று சேர்ந்தனர். இருவரும் சேர்ந்து மலையாளத் திரையுலகை ஒன்று திரட்டி ஷகீலாவை விரட்டியடித்தனர்.

இதன் மூலம் தங்கள் படங்கள் இனி நன்றாக ஓடும் என்று கனவு கண்டனர். ஆனால், நினைத்தது நடக்கவில்லை.

மோகன் லாலுக்கும், மம்முட்டிக்கும் இவர் தமிழில் பல படங்களில் நடித்திருந்தாலும் தமிழ் மக்கள் மனதில் இன்னும் ஓடவில்லை) மார்க்கெட் கடுமையாக டவுன் ஆகிவிட்டது.

திலீப் என்ற நடிகருக்கும் ('ராஜ்ஜியம்' படத்தில் விஜயகாந்த்தின் தம்பியாக வருவாரே, அவரேதான்) புது நடிகர்களுக்கும்தான் இப்போது மார்க்கெட் நன்றாக உள்ளது. திலீப் கிட்டத்தட்ட சூப்பர் ஸ்டார் லெவலுக்கு உயர்ந்து விட்டார். மோகன்லால், மம்முட்டி படங்களை விட இவரது படம்தான் அதிக விலைக்கு விற்கின்றன. நன்றாகவும் ஓடுகின்றன.

சமீபத்தில் மம்முட்டி நடித்த 'பேன்டம்' என்ற படம் அட்டர் பிளாப். அதே போல, மோகன் லால் நடித்த 'பிரஜா' என்ற படமும் ஊத்திக் கொண்டது.

இது போதாதென்று, ஷர்மிலி, மயா, ரேஷ்மா ஆகியோரின் 'ஏ' ரக படங்களும் கடும் போட்டியாக இருப்பதால், மோகன்லாலும், மம்முட்டியும் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்களாம்.

இதனால்தான் 'வெவரமாக' மம்முட்டி பல தமிழ்ப் படங்களை ஒத்துக் கொண்டு நடித்து வருகிறார்.

அவரது பாணியில் இப்போது மோகன் லாலும் தமிழ்ப் பக்கம் ஒதுங்கத் தொடங்கியுள்ளார். நாசர் இயக்கி வரும் 'பாப்கார்ன்' படத்தில் நடித்து வரும் இவர் தற்போது மேலும் 3 தமிழ்ப் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளாராம்.

"மலையாளம்தான் எனது தாய் மொழி. அதில்தான் நான் நடிப்பேன். தமிழில் மசாலாப் படங்கள்தான் நிறைய வருகிறது. அவை எனக்கு ஒத்து வராது. எனவே தமிழில் நடிப்பது கஷ்டம்" என்று இதே மோகன்லால் முன்பு ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

இப்போது கோலிவுட்டிடம் சரண்டர் ஆகி இருக்கிறார்.

## சினி விசிட்

## …திக்கப்பட்ட 'ஐ லவ் யூடா'

…கத்தறு விஜயகாந்துக்கு இன்னும் …தால் 'ஐ லவ் யூடா' படம் கடைசி …வில்லை.

…மனோஜ்குமார்தான். ஆனால் …திறந்து பாதிக்கும் மேல் சம்பளம் … மனோஜ்குமார்.

…முடிக்காமல் ராஜு-சுந்தரம்-சிம்ரனை … எடுத்தார் மனோஜ்குமார்.

…விட்டு 'என் பணத்தைத் தரா…' என்று தகராறு செய்ய, "உங்க …கொடுத்தான் 'ஐ லவ் யூடா'வை …மனோஜ்குமார் உறுதியளித்தார். …நம்பாத விஜயகாந்த், அதை …கொண்டார். 'ராஜ்ஜியம்' கொடுத்த …இருந்த மனோஜ்குமார் அடுத்த …விஜயகாந்துக்கு எழுதியும் தந்…

…ராஜு-சிம்ரனின் நிஜக் காதலை …மனோஜ்குமார். ஆனால், படத்தை …மும் முடிந்துவிட்டது. இதனால் …ர்களுக்கு இருந்த ஆர்வமு…

…றிப் படத்தை வெளியிட முயற் …தியேட்டர்களுக்குப் பெட்டிகளும் …சேர்ந்தன. ஆனால், விஜயகாந்த் …கே வர. பட ரிலீஸை உடனே …ய நிலைக்கு வந்தார் மனோஜ்…

…த்தபடி விஜயகாந்தின் சம்பளப் …மனோஜ்குமார் தரவில்லை. இத …படத்தை வெளியிட விடமாட்டேன்" என்று …த கூறிவிட்டதாகத் தெரிகிறது.

…படம் 10 நாட்கள் மட்டுமே …களில் ஓடி 11 வது நாள் தியேட்டரை…விட்டு ஓடியது குறிப்பிடத் தக… இதனால் இந்தப் படத்தில் நடித்த… ரூ. 75 இலட்சம் வரை விஜய… குறைத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

அப்படி இருந்தும் மீதித் தொகையை மனோஜ்குமார் தராததுதான் பிரச்சனையே.

## காதோடு சொல்லுகிறோம்

ஜில்லென்று சப்பிச் சாப்பிடும் அந்த இரண்டெழுத்துப் பெயர் கொண்ட நடிகையை இப்போது அதிலிருந்து தூக்கி விட்டனராம். நடிகை, "ஏ.சி. வேண்டும். இப்படித்தான் சாப்பாடும் வேண்டும்" என்று பயங்கர டார்ச்சர் கொடுத்திருக்கிறார். சாப்பாடு, கால்ஷீட் எனப் பல பிரச்சினைகள் இருந்ததால் பொறுத்துப் பொறுத்துப் போனவர்கள் கடைசியில் இந்த முடிவை எடுத்திருக்கின்றனர். படத்தில் அம்மணிக்காக இதுவரை ஆன செலவு பத்து லகரம். அம்மாடியோ!

தொப்பை நடிகை தான் அறிமுகமாகிய வாரிசு நடிகருடன், மூன்றாவது முறையாக இணைந்து நடிக்கிறார். ஆனால் அந்த அம்மணியும் அவரும் காதலித்து வருவதாகக் கோடம்பாக்கத்தில் ஒரு வதந்தி உண்டு. இதைப் பற்றி இருவரிடமும் கேட்டால் வெறும் நட்புதான் என்கிறார்கள்.

கும்பகோணம் அருகே நடந்த ஒரு கோவில் திருவிழாவுக்கு நடனம் ஆடச் சென்றார் மடிப்பு அம்சா. விழாவுக்கு முன்பே வந்துவிட்டதால் அந்த ஊர் முக்கிய புள்ளிகள் அவரைச் சுற்றி மொய்க்க, கூடச் சென்றவர் டிமாண்ட் வைத்து உல்லாசத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார். நடிகை வந்து சேர்ந்த போது இரவு பதினொரு மணி. ஃபுல் போதையில் இருந்த அம்மணி அவசர அவசரமாக மேக்கப் போட்டு உடுத்திக் கொண்டு மேடைக்கு வந்து தள்ளாடியபடி ஆடை அவிழ்த்து ரவிக்கையோடு ஆட ரசிகர்கள் உற்சாகத்தில் கைதட்டி மகிழ்ந்தனர். அதனால் இந்த வருடமும் அம்மணியைத்தான் கூப்பிட வேண்டும் என்று, விழாக் குழுவினரிடம் இளைஞர்கள் சொல்கின்றனர்.

சங்க நடிகை ஒரு படத்தில் டவல் கட்டிக் கொண்டு கிளாமராக நடித்த போது அசைவில் டவல் அவிழ்ந்து விழ, அவரை நிர்வாணமாகப் படம் பிடித்து விட்டது கேமிரா. அண்மையில் ஒரு வெப்சைட் நடிகைகளின் சூடான புகைப்படங்களைத் தேடிப் பிடித்திருக்கிறது. இதில் ஜோதிமயமான நடிகை உட்பட சிலரின் பட அல்பங்கள் கிடைக்க அதை வலையில் பதிவு செய்து விட்டார்களாம். அது ஒரு 'பே' பண்ணிப் பார்க்கக் கூடிய சைட். ஜமாய்ங்கப்பா!

## படத்தில் நடிக்க விஜய் போட்ட கண்டிஷன்

'உன்னை நினைத்து' படத்துக்காகக் கால்ஷீட்டைக் கொடுத்துவிட்டுக் கடைசி நேரத்தில் கழற்றிவிட்ட விஜய், இப்போது அதே லட்சுமி மூவி மேக்கர்ஸுக்காக 'பகவதி' படத்தில் நடிக்கிறார்.

பழைய பகை தீரவில்லைப் போலும். படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டுவிட்டாலும் தயாரிப்பாளர் முரளி தன் கண்களில் படக் கூடாது என்று கண்டிஷன் போட்டிருக்கிறாராம் விஜய். எப்படியோ படம் வந்தால் சரி என்று முரளியும் ஷூட்டிங் ஸ்பாட் பக்கம் எட்டியே பார்ப்பதில்லையாம்.

## "மனைவிக்கே பயப்படாதவன் நான்;" செந்தில் பெருமிதம்



சிம்பு-சார்மி
படம்: காதல் அழிவதில்லை

"நிஜ வாழ்க்கையில் நான் பயப்படுவதில்லை. ஏன்? மனைவிக்கே பயப்படாதவன் நான். வாழ்க்கையில் மனைவிக்குக் கணவன் பயந்தான் என்றால் கணவன் அடுப்படியில் இருக்க வேண்டியதாகிவிடும். பெண் வீட்டுக்கு வெளியே போய்விடுவாள். அதே சமயத்தில் மனைவியின் அன்புக்குக் கணவன் நிச்சயம் பயப்பட வேண்டும்.

அதுதான் வாழ்க்கை. ஆனால், பாம்பு, தேள், பூரானைக் கண்டால் பயம் எனக்கு. அந்தத் திசைக்குக் கூடப் போகமாட்டேன்." இப்படியாகத் தன் வீரத்தைப் பெருமிதத்துடன் கூறியிருக்கிறார் செந்தில்.



## காதல் வலையில் சிக்கிய மீரா ஜாஸ்மின்

'இச்சு தா... இச்சு தா... கன்னத்துல இச்சு தா...' என்று 'ரன்' படத்தில் மாதவனைக் கேட்டுக் கிக் ஏற்றிய கேரள வரவு மீரா ஜாஸ்மின், மலையாள இயக்குனர் ஒருவரின் அன்புப் பிடியில் சிக்கியிருப்பதாகப் பரபரப்பாகப் பேசப்படுகிறது! இது பற்றி அம்மணியிடம் தொடர்புகொள்ள முயன்றால், 'சிக்கவே மாட்டேன்' என்று முரண் பிடிக்கிறார். தமிழில் பாலா படத்தில மட்டும் நடிக்கும் அவருக்குச் சென்னையைச் சுத்தமாகப் பிடிக்கவில்லையாம். குறிப்பாக, சினிமாப் பத்திரிகையாளர்களை அறவே பிடிக்கவில்லையாம்! காரணம், "அந்த இயக்குனரை நீங்கள் காதலிக்கிறீர்களாமே?" என்று கேட்டுத் தொல்லை செய்வதுதானாம். ஆனால், மலையாள சினிமா நிருபர் ஒருவரின் கவலை என்ன தெரியுமா? காதல் வலையில் சிக்கியுள்ள திறமை வாய்ந்த நடிகை மீரா ஜாஸ்மின், அந்த வலையிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும் என்பது தான். மீள்வாரா மீரா?

## "மனீஷாவை விட எனக்கு அழகான உடற்கட்டு" நிர்வாணமாக நடித்த டூப் நடிகை பேட்டி

மனீஷா கொய்ராலாவுக்கும் டைரக்டர் சஷிலா நாயருக்கும் நடக்கும் சண்டை எல்லோருக்கும் தெரிந்ததே... மனீஷா, "டைரக்டர் என்னை ஏமாற்றி விட்டார்... யாரோ டூப்பை வைத்து நிர்வாணக் காட்சிகளை எடுத்து விட்டார்... நான் அம்மாதிரி நிர்வாணமாய் நடிக்கவேயில்லை. அந்தக் காட்சிகள் வெட்டப்பட வேண்டும்" என்று போர்க் குரல் எழுப்ப இப்போது மனீஷாவின் அந்த டூப்புக்கு ஒரு மாதிரியான, பயங்கர பப்ளிசிட்டி கிடைத்துவிட்டது! யார் அந்த நடிகை?

ஜெஸ்லிக்கா சேச்சி, 19 வயது நிரம்பிய அந்தப் பெண், அம்மாவுக்கு ரத்தப் புற்று நோய் என்று டாக்டர்கள் சொல்லவே, படிப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு மாடலிங், டி.வி., சினிமாவில் சான்ஸ் என ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் நடிக்க வந்தார். இவரது தம்பி ஏற்கெனவே சீரியல்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். மாடலாகவும் இருந்த இவரை மாடல் கோ ஆர்டினேட்டர் ஒருவர் மனீஷாவின் டூப்பாக நடிக்க அழைத்தார். 2 நாள் வேலைக்கு 12,000 ரூபாய் சம்பளம். "டூப் வைத்து சில காட்சிகளை எடுத்துக் கொள்கிறேன் என்றபோது 'சரி' என்ற மனீஷா, சென்சாருக்கு அனுப்புவதற்கு முன் முழுப் படத்தையும் பார்த்த மனீஷா, அப்போதெல்லாம் எந்தவித ஆட்சேபனையும் சொல்லாமல் திடீரென்று அதை வெட்டு, இதை வெட்டு என்றால் என்ன அர்த்தம்?" என்கிறார் டைரக்டர். "நிர்வாணம் என்பதற்கு என்ன அர்த்தம் என்று மனீஷா டிக்ஷனரியைப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும்" என்றிருக்கிறார் கோபமாக!

டைரக்டர் ரொம்பவும் நொடிந்த நிலையில் இருப்பதைப் பார்த்து விட்டு இந்தப் படத்தை ஃப்ரீயாகப் பண்ணிக் கொடுத்தாராம் மனீஷா. அந்த நன்றி கூட இல்லாமல் இப்படி என் பெயரைச் சந்திக்கு இழுத்து விட்டாரே என்பது மனீஷாவின் குமுறல்.

"இந்த டூப் விஷயம் வெளியே தெரிந்து யார் என்ன சொன்னாலும் எனக்குத் துளி கூடக் கவலையில்லை. ஏனெனில் என் பாய் ஃப்ரெண்டு இது பற்றிச் சட்டை செய்யவில்லை. 'நீ கவலைப்படாதே. நான் உன் பின்னால் இருக்கிறேன்' என்று சொல்லிவிட்டார். அதனால் எனக்கு ஒரு பயமும் இல்லை" என்கிறார் மனீஷா. மனீஷாவுக்கு வேண்டுமானால் முகம் என்னைவிட அழகாக இருக்கலாம். ஆனால் உடற்கட்டு என்றால் அவரை விட நான் எவ்வளவோ மடங்கு பெட்டர்" என்று இறுதியாக ஒரு வீச வீசுகிறார் ஜெஸ்லிக்கா!



அபினய்-ஆம்னா
படம்: ஜங்ஷன்

## பாடத் தெரிந்த 'விது' காலாட்படை நாயகி

விதுவுக்குப் பாடத் தெரியும். பாடல் என்றால் பாத்கும் சிங்காரம். அவர் முறைப்படி கர்நாடக சங்கீதம் பயின்றவர். நிறைய இசைக் கச்சேரிகளில் பாடியிருக்கும் விது 'காலாட்படை' படக் குழுக்கு வந்து சேர்வதற்கு முன்பே அந்தப் படத்தின் அனைத்துப் பாடல்களும் ஒலிப்பதிவு செய்யப்பட்டுவிட்டன. 'இல்லாவிட்டால் ஒரு பாடலை உனக்குத் தந்திருப்பேன்' என்றாராம் இயக்குநர் ஜெ.ரமேஷ்.

…டான் மான் …டர் சின்னாவின் மகள் ஜெனிபர், கதாநாயகியாகப் புகழ்பெற வேண்டும் என்ற ஆசையில் தான் திரையுலகில் குதித்தார். அவர் அறிமுகமாகும் 'காதல் சாதி' படம் திரைக்கு வருவதற்கு முன்பே கன்னாபின்னாவென்று சின்னச் சின்ன கேரக்டர்களில் தலையைக் காட்டி, தன்னைப் பற்றிக் கொஞ்ச…து இருந்த இமேஜைத் தவிடுபொடியாக்கிவிட்டார். …தாக்குறைக்கு ஒரே ஒரு பாடல் காட்சியிலும் தன் …ச்சியைக் காட்டிக் காசு சேர்த்து வருகிறார். இதற்கு … சொல்லும் காரணம் "கதாநாயகியா அறிமுகப்படுத்…ன்னு வாக்கு கொடுத்த அந்த டைரக்டர்... இவ்வளவு …யும் அந்தப் படத்தை ரிலீஸ் பண்ண முடியாம …கிறார். இந்த நிலைமையில அந்தப் படத்தை மட்டுமே …பார்த்துக் காத்துக்கிட்டிருந்தா... என் எதிர்காலம் என்…ன்னு யோசிச்சு பாருங்க" நியாயமான ஆதங்கம்தான்!

## …மார்க்கெட் இறங்கிய தேவயானி

…திருமணமான நடிகைகளுக்குத் தடாலென்று மார்க்கெட் …விடும் என்று சொல்வது தேவயானி விஷயத்திலும் நிரூ…பட்டுவிட்டது. கதாநாயகியாக 'கற்பூர நாயகி', 'தவமணி', …வீட்டு அம்மன்', 'காதலுடன்...' ஆகிய படங்களில் நடித்துக் …கொண்டிருக்கும் இவரை இளம் கதாநாயகர்கள் புறக்கணித்து…டனர். தற்போது கௌரவ வேடம் என்றாலும் முகம் சுளிக்கா…து ஒப்புக்கொண்டு நடிக்கும் தேவயானி, அகத்தியன் உதவியாளர் …பாண்டியன் இயக்கும் 'நீ இங்கு சுகமே...' படத்தில் சின்னக் …கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம். இதில் புதுமுகம் வினோத் ஜோடி…யாக நடிப்பவர் தீபிகா. 'ரோட்டோர பாட்டுச் சத்தம் கேட்குதா?' என்று … வானில்...' படத்தில் இடம்பெறும் ஒரு பாடல் காட்சியில், நாடோடி…சேகரின் வளர்ப்பு மகளாகத் தோன்றிய பெண்தான் இந்த தீபிகா.

## முகப்பில்

மும்தாஜ்

அபிராமி

# தேன் கிண்ணம்

## விரைந்து வா

தாயே! நீ இல்லாத நான்
அடித்தளம் இல்லாத
கட்டடமாய் மாறிப் போனேன்.

நீ எனைப் பிரிந்த
போது அது நிரந்தரமல்ல
என் இதயம் சிணுங்கியது.
எனை ஆறுதல்படுத்த!

நீ அருகில் இல்லாத
நான்
ஐதரில்லாத
தாவரம் போலானேன்
அன்பின் தாகத்தினால்.

என் அத்தனை சில்மிஷங்களும்
உன்னால்தான்
தாயே அருட்கொடையானது
இதை நான் மறவேனா?
என் உயிர் உள்ள வரையில்.

என் உடைந்த சிறகுகள்
உயிர்பெற
விரைவில் வருவாயோ
எனை நாடி...,

காத்திருக்கிறேன் உன்
கருவறைப் பெண்
விரைந்து வா
தாயே!

சு. ரஞ்ஜனி,
பதிங்கஸ்கொடுவ.

## பண மரம்

நடந்து நடந்து
கால் வலியையும்
மன இடைஞ்சல்களையும்
பொருட்படுத்தாது
வழமை போன்று- அந்த
சனக் கூட்டத்தினுள்
நுழைகின்றான்.

"ஐயா, அம்மா...
சாப்பிட்டு நாட்கள் மூன்றாகின்றது.
நெஞ்சு வலியும் கால்வலியும்
உயிரை வாங்குகின்றது.
உதவி புரியுங்கள்! தயவு காட்டுங்கள்"

அவனது வேண்டுகோள்
அக் கூட்டத்தில் கூடியிருந்தோரது
காதுகளைக் குடைந்து செல்கின்றது.

பொருட்படுத்தாதவர்கள் பலர்
பொறுமையோடு
உபகாரம் புரிவோர் ஓரிருவர்.

மீண்டும் கெஞ்சுகின்றான்.
வைத்தியச் செலவுக்கும்
வயிற்றுப் பசிக்கும் நிவாரணம் தேட.

"யோ...என்னய்யா- என்னமோ
கொடுத்து வைத்த மாதிரி வினவுகிறாய்
பணமென்ன மரத்திலா காய்க்கின்றது
நீ கேட்கும் போதெல்லாம்
பறித்துத் தருவதற்கு"

பொறுமையிழந்து பேசிய பெரியவரின்
வார்த்தைகளைப் பொறுமையுடன்
ஆமோதிக்கின்றான்.

நாள் தோறும் கேட்டுப் பழகிய
வார்த்தைகளல்லவா இவை.
தான் புரியும் தொழிலுக்கு
நாள் தோறும் கிடைத்திடும்
நற்சான்றிதழ்கள் அவை.

என்றாலும் அவனுக்கொரு
சந்தேகம்- ஆவல்,
தர்மம் கேட்கும் போதெல்லாம்
இவர்கள்- அந்தப் 'பணமரத்தைப்'
பற்றித்தானே கூறுகிறார்கள்.
இதில் ஏதோ இரகசியத்தை உணர்ந்தவனாய்
அவன் வசிப்பிடம் விரைகின்றான்.

இன்று தன் தட்டில் தேறிய
அனைத்து சில்லறைகளையும்
ஒரு குழி தோண்டிப் புதைத்து
வளைத்து மண் குமித்து
அதற்குள் நீரூற்றி தன் கண்ணீரையும்
காணிக்கையாய்ச் செலுத்தி அவ்விடத்தை
விட்டு விடைபெறுகின்றான்.

வாரங்கள் இரண்டு கழிந்தன.
ஏதோ ஒரு செடியின் தளிர் முளைவிட்டிருந்தது
அவனது சமாதியின் மேல்.

எம். முகம்மட் ஜலீஸ்,
சவூதி அரேபியா.

## நான் எனக்கு மட்டுமானவன்

உன் எல்லா நினைவுகளையும்
அழித்துவிட்டு
இதயத்தை
புதிதாய்ப் பொருத்த வேண்டும்.

கனவுகளையும்
அப்படித்தான் நீ வராமல்
பாதுகாக்கிறேன்.

எரியும் ஆசைகளின்
சாம்பலையும்
ஆற்றில் கரைத்து விட்டு
மொத்தமாய் உன்னை
தலைமுழுகிக் கொண்டேன்.

உன் சுவாசம் தொடும்
காற்றும்
என் எல்லைக்குள்
அனுமதிக்கப்படக் கூடாது.

இனியும்
நீ இல்லாத நானில்
நான் வாழ விரும்புகிறேன்.

உன்னைச் சுமந்த
என் வாழ்வில்
அர்த்தமில்லாமல் போனது
இப்போது...
அதற்கான அவசியமுமில்லை.

இந்த முடிவுடன்
தனியே நடக்கும் என்னை
நீ
சந்தித்தால் பேசிக் கொள்
பிரிந்தால் நினைத்துக் கொள்
நான் பேசாமலே செல்கிறேன்
உன்னை நினைப்பதில்லை
என்ற முடிவுடன்....

எம். நவாஸ் சௌபி,
இறக்காமம்.

## தீரா நதி

மூழ்கி மூழ்கி
முத்தெடுக்க முயற்சித்து
முடியாமல்...
முனகலுடன் நீர்க்காக்கை...
முறுவலுடன் நதி
நடைபோடும் தன்பாட்டில்...

நதிக்கரையில்
நரைத்து சொட்டை விழுந்த
ஆலமரக் கிளையில்
கொஞ்சும் கிளிகளின்
எச்சம் சுமந்து
நகரசபை ஊர்தியாய்
நகரும் நதி தன்பாட்டில்...

சட்டை துவைக்க
கழற்றிய வேகத்தில்
குறும்புக்கார நதி
கவர்ந்து வர...
கற்பு காக்க
புற்றுக்குள் நுழையும்
புதுச்சட்டை தேடி
சர்ப்பம்...

நேற்றைய இரவில்
வெந்து தணிந்த
அவளின்
சிதைச் சாம்பலை
தன்னுள் கரைத்துக் கொண்டு
நாற்றம் பொறுக்காது
தலை தெறிக்க
தப்பியோடும் நதி...

தனிமை தந்த
சுதந்திர தயவில்
ஆடை துறந்து
வெட்கம் களைந்து...
பூவாய் விழும்
அவளை...

சற்றென்று...
நீர்க்காக்கை விரட்டி...
எச்சம் தள்ளி...
சாம்பல் ஒதுக்கி...
தன்னுள் வாங்கிக் கொள்ளும்
நதி...
தீராத காதலுடன்....

அவளின்
உதைப்புகளையும்
தள்ளல்களையும்
தாங்கிக் கொள்ளும்
தாயைப் போல...

கரையேற
காலை நீட்டிய
கன்னியவளை...
நேற்றைய பொழுதில்
வெந்து சாம்பலாய் போன
அவனின் சடலம்
காமத்துடன் தீண்ட...
வெறுப்பிடன் நதி
கயவனே...உடல்
வெந்து தணிந்தாலும்
உன்
காமமது இன்னும்
வேகவில்லையே...
வெட்கப்படுகிறேன்...
உன்
சிதைச் சாம்பலை
சுமப்பதை விட
எச்சம் சுமப்பது
எவ்வளவோ மேல்...
என அழுது...
தலைகுப்புற
பள்ளத்தில் வீழ்ந்து
தற்கொலை செய்து
கொண்டது
நதி....

சண்முகம் சிவகுமார், பத்தனை.

## பேனா நண்பர்கள்



பெயர்:
கு. திருமால்
வயது: 22
முகவரி: இல. 8,
3ம் குறுக்குத் தெரு,
அமிர்தகழி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்:
தியாகராஜா சுதன்
வயது: 20
முகவரி: 280,
செட்டியார் தெரு,
கொழும்பு-11.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: ச. தர்சினி
வயது: 20
முகவரி: 6ம்
வட்டாரம்,
நெடுந்தீவு மத்தி.
பொழுது போக்கு:
வானொலி,
பத்திரிகை.

## உயிர் விழும் காட்சி!

உன் விழிப்பார்வை
என் இதயத்தில்
கந்துகளை வெட்டுகிறது!
சிலவேளை ஓரப்பார்வை
உயிர் வேர்களை உழுகிறது!
மொத்தத்தில் நான்தான்
சம்மதமில்லாமல் சாகிறேன்!
என்னை எனக்கே
பிடிப்பதில்லை சிலநேரங்களில்..
உன்னை நினைக்கையில்!
நான் நானாக இருந்தாலும்
உன்னை நினைத்தே
வாழ்கிறேன்! ஆனால்,
நீ நீயாக மட்டுமே
வாழ்ந்து கொண்டிருக்கிறாய்!
அன்றைய உன் புன்னகையை
ஆழமறியாமல் ரசித்தேன்
சந்தோசத்தில்!
இன்று அதே புன்னகை
என்னை நானே
நொந்து கொள்ளும்
அளவுக்கு நோவில்லாமல்
உயிர் வலிக்கிறது!
உண்மையான உணர்வுகள்
கூட ஊமையாகக்
கதறுகிறது!
நினைத்தால் எல்லாமே
பொய்யாகத் தோன்றுகிறது.
கடையில் பொருள் வாங்க
காசிருந்தால் போதும்
கட்டாயம் பழக்கம்
வேண்டுமென்றல்ல!

உண்மைக் காதல்
சொல்ல தஞ்சம்
ஒன்றுதான் தலைமை
தாங்க வேண்டுமென்றல்ல,
உயிரிலிருந்து வந்த
காதல் போதும்!

பிரம்மா! ஏன்
பெண்களுக்கு அழகை
கூட்டிக் கொண்டே போகிறாய்?
ஆண்களுக்கு
ரசிக்கும் தன்மையை அதிகரிக்கவே
செய்கிறாய்!
உனது பொழுது போக்குக்கு
வேறு விடயம்
கிடைக்கவில்லையா?

ஏ.எப்.எம். றியாட்,
முள்ளிப்பொத்தானை.

## நினைத்து, நினைத்து சிரிக்க

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போற ஒருத்தர் பிரச்சாரம் செய்ய ஒரு ஊருக்குப் போய் நட்சத்திர ஹோட்டல்ல ரூம் எடுத்தாரு. ஹோட்டல் மேனேஜர் அவரை ரூமுக்கு அழைச்சுட்டு போனாரு. ரூமைத் திறந்ததும் உள்ளே கட்டில் மேலே ஒரு அழகி நிர்வாணமா படுத்திருந்தாளாம். அவளைப் பார்த்த வேட்பாளர் டென்ஷனாகி,

"என்ன தைரியம் உங்களுக்கு? என் பெயரைக் கெடுக்கச் சதி செய்கிறீர்களா? உங்கள் மீது மானநஷ்ட வழக்கு தொடரப் போகிறேன்"னு காட்டுக் கத்தல் கத்த, உடனே மனேஜரும் கூட வந்தவங்களும் பயந்து ரூமை விட்டு ஓடிப் போனாங்களாம். கட்டில்ல படுத்திருந்தவ பயந்து நடுங்கிப் போய் எழுந்திருச்சு தன்னோட உடைகளை அணிய ஆரம்பிச்சா. உடனே வேட்பாளர் அவள் கிட்ட

"நான் மேனேஜரைத்தானே திட்டினேன். நீ ஏன் பயந்து விட்டாய்?. அப்படியே இரு"ன்னாராம்.

"ஞாயிற்றுக்கிழமை அப்பாவும் அம்மாவும் கச்சேரிக்குப் போறாங்களாம். அந்த நேரம் நீங்க என் வீட்டுக்கு வாங்க ஜாலியாக இருக்கலாம்"னு ஒரு காதலி காதலன்கிட்டே சொன்னா.

ஞாயிற்றுக்கிழமை. அவன் ஒரு மருந்துக்கடைக்குப் போனான். "நான் என் கேர்ள் பிரண்டோடு தனியாக ஜாலியாக இருக்கப் போகிறேன்..."ன்னு தயங்கித் தயங்கி மென்று விழுங்க, மருந்துக்கடைக்காரர் சிரிச்சுட்டே ஒரு கருத்தடை சாதன பாக்கெட்டை எடுத்துத் தந்தார். அவன் வாங்கிட்டு காதலியின் வீட்டுக்குப் போனான்.

"அப்பா வெளியே போயிருக்கிறார். இப்போது வந்து விடுவார். வந்தவுடன் அம்மாவுடன் புறப்பட்டு விடுவார்"னு காதலி சொல்ல இருவரும் காத்திருக்க, அப்பா வந்தாரு. அவரைப் பார்த்ததும் காதலன் காதலிகிட்ட "நாமும் கச்சேரிக்குப் போகலாம்"னான்.

குழம்பிப் போன காதலி "என்ன உங்களுக்கு கச்சேரி கேட்கப் பிடிக்குமா? இசையில் ஆர்வம் உள்ளவர்னு இவ்வளவு நாள் என்கிட்டே நீங்க சொல்லவே இல்லையே?"ன்னு கேட்க.

காதலன், "நீ மட்டும் உங்கப்பா மெடிக்கல் ஷாப் வைத்திருக்கிறார்னு சொல்லவே இல்லையே"ன்னானாம் எரிச்சலோட.

ஒரு சமயம் நியூயார்க் நகரின் ஒரு முக்கியமான சாலையில தினமும் விபத்துக்கள் நடந்தது. வேகக் கட்டுப்பாட்டு விதிகளை யாரும் மதிக்காம, போக்குவரத்து அதிகமாகி ஸ்தம்பித்துப் போச்சு. வாகனப் போக்குவரத்தை எப்படிக் கட்டுப்படுத்துவதுன்னு பொதுக்கூட்டம் நடத்தி மக்களிடம் கருத்துக் கேட்டது அரசாங்கம். பலரும் பல யோசனைகளைச் சொன்னாங்க.

"அருகே மருத்துவமனை இருக்கிறது. மெதுவாக செல்லவும்னு சாலையோரம் எழுதி வைக்கலாம்"னு ஒருத்தர் சொன்னாரு.

"அருகே பள்ளி இருக்கிறதுன்னு எழுதி வைக்கலாம்"னாரு இன்னொருத்தர்.

பிரபல நகைச்சுவை எழுத்தாளர் ஜேம்ஸ் டர்பர் எழுந்து "அருகே நிர்வாண காலனி (Nudist Colony) இருக்கிறதுனு எழுதி வையுங்கள் போக்குவரத்து சீராகி அனைவரும் மெதுவாகச் செல்வார்கள்"னாரு. அவர் சொன்னதுதான் ஓ.கே. ஆச்சாம்.

## கவிதை நெஞ்சங்களுக்கு!

இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக, குறிப்பிடத் தக்க கவனத்தைப் பெற்றுள்ள ஈழத்து இளைய தலைமுறைக் கவிஞர்கள் இருவரின் கவிதைகளைத் தருகிறோம்.
*இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாகத் தருகிறோம்.*

### மலர்களின் பெயரால்

இரண்டு அலக்கு முருங்கையிலை,
தேங்காய் ஒரு அடலை,
கொஞ்சம் குறுநெல்,
செங்கல் மூன்று,
ஒரு சட்டி- ஒரு பானை.
ஒரு சிரட்டை அல்லது சில துண்டுச் சிராய்கள்,
சிறு பொறித் தீ
இவை போதும்-
கொஞ்சம் குஞ்சுச் சோறு ஆக்க.

சளி பிடிக்கச் சளி பிடிக்கப்
புழுதித் தெருவெங்கும் உருட்டித்திரிய
தேய்ந்த பழைய டயர்,
ஒளித்துப் பிடித்து விளையாட
பழைய பாழ் வீடொன்று.
அவர்கள் பொலிஸ்-
கள்ளனுக்கு ஒரு கோஷ்டி நண்பர்.

பார்த்துச் சோறுண்ண
செம்மறி மேய்கிற பெரிய்ய வானம்,
பெரிய்ய சாந்தமாமா,
கனக்க வெள்ளிகள்.

கறுத்தக் கொழும்பான் மரக்கிளையில்
ஊஞ்சலொன்று,
பிடிக்கக் கொஞ்சம் தும்பிகள்,
புகையிலை தீத்தி
வேடிக்கை பார்க்கத் தொண்டில் மாட்டிய ஓணான்.

நினைத்துக் கண்காட்டி
இரகசியமாய்ச் சிரிக்க-
புணர்ந்தபடி நிற்கின்ற நாய்ச்சோடி.

எத்தி விளையாட
மழைநீர் தேங்கிய குறுக்கொழுங்கை.

சோடி மாடு செய்ய
பச்சை இளம் தென்னை மட்டை,
அம்மாடொரு சோடியையும்
மேய்ச்சலுக்காய்க் கட்ட
ஒரு வெளி நிறையப்புல்லும்.

நீரில் குழைத்த ஒரு உருண்டைக் களிமண்,
சமைத்த உருக்களை வாட்டவென
மிதமான வெயில் சற்று.

இவை போதும்-
இவை போதும்,
எனது குழந்தைகளுக்கு இவை போதும்
விட்டும் நீங்கிப் போங்கள் நீங்கள்,
கூடவே -உங்களது அதி
நவீன போர்த்தளவாடங்களையும
உங்களோட கொண்டு சென்று விடுங்கள்.

அவர்களின் உலகில்
உங்களின் சப்பாத்துக் காலடிகள் பதிய வேண்டா.
அவர்களின் இரவுகளையும்,
படுக்கையில் சிறுநீர் விடும் உறக்கத்தையும்,
கனவுகளையும்,
இன்னும்-
பால்யப் பராயத்தையும்
அவர்களுக்காகவும்,
சிரித்த முகத்தை
கடைசி ஆறுதலாக எங்களுக்காகவும்
விட்டு விடுங்கள்.

-ரஷ்மி



## சிறப்புக் கவிதை

### வாழ்வின் மீதான எளிய பாடல்கள்

தளம்பிய நம்பிக்கையின் அடிவாரத்தில்
ஊன்றப்பட்ட கால்கள் தளர்ந்தபின்னும்
காத்திருப்பதே விதியாயிற்று.

நான் உரைத்த அனைத்து விதியிலும்
இன்று இதுவும் கேள்வியாயிற்று
எனது சுவரில் இனி எந்த ஓவியத்தையும்
தேடித் தோற்காதே
வார்த்தைக்குள் அறையப்பட்ட இசையாயிற்று
என் சுவாசமும்
சிறு குழந்தையின் கையெழுத்துப் பிரதியாய்
கமா முற்றுப்புள்ளி அரைகுறையாய்
வரையப்பட்டிருக்கிறது எப்போதும்
திருத்தப்படலாம்.

உன் கண்களிலிருந்து விழும்
வாழ்வின் மீதான மிக எளிய பாடல்
குழம்பிக் கிடக்கும் இதயத் துடிப்பின்
சங்கீதத்தோடு இணையுமா? அது முரண்
சிதைவுகளிலிருந்து மீண்ட பின்னும்
துயரம் பற்றிய புலம்பல்களே எனக்காய் எஞ்சும்
ஒய்வே அற்ற எனது நெடும் பயணத்தில்
ஆறுதலே அற்ற குளத்தை நோக்கி
ஆன்மாவின் தாகங்கள் சுரக்கும்
என்னதான் செய்வேன்.

கலந்து பின்னிக் கிடந்த ஒருமையில்
வலிந்து பிரிக்கப்பட்ட புன்னகையாய்
நான் இறப்பதும்
நாதியற்று நீ வாழ்வதும்தான்
முடிவாயிற்றோ என்னவோ

சலனங்கள் நுழையும் கணங்களின்
பிளவுகளினூடே
வாழ்வின் விமோசனங்களுக்காய்
இன்னமும் காத்திருப்பதே விதியாயிற்றே....

--மஜீத்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பிளாஸ்டிக் கனவுகள்

**★ பிளாஸ்டிக் சர்ஜரி (ஒட்டுறுப்புச் சிகிச்சை, யார் யார் செய்து கொள்ள லாம்?**

"இது ஒரு சாதாரண சிகிச்சைதான். தேவை ஏற்படும் யாரும் இதைச் செய்து கொள்ளலாம்!" என்கிறார் அப்பலோ மருத்துவமனை பிளாஸ்டிக் சார்ஜரி நிபுணர் டாக்டர் கணபதி கிருஷ்ணன். அவரிடம் ஒரு விரிவான பேட்டி.

**★ பிளாஸ்டிக் சர்ஜரி என்றால் என்ன?**

"பிளாஸ்டிக் என்ற வார்த்தை அதில் இருப்பதால் பிளாஸ்டிக்கை வைத்து ஆபரேஷன் செய்வார்கள் என்றே பலரும் நினைக்கிறார்கள். ஆனால், அப்படி எதுவும் செய்வதில்லை. பிளாஸ்டிக்கிற்கும். இந்த சிகிச்சைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. பிளாஸ்டிகாஸ் (Plasticos) என்ற வார்த்தைக்கு சீராக்குவது (to mould) என்று அர்த்தம்.

முதன் முதலில் உலகப் போரின் போதுதான் இந்தச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. போரில் அடிபட்ட வீரர்களின் உடலில் ஏற்பட்ட வடுக்கள், பெரிய பெரிய தழும்புகள், கீறல்களைச் சரிசெய்ய இந்த சிகிச்சையைப் பயன்படுத்தினார்கள். பின்னர் காலப்போக்கில், எல்லோரும் பயன்படுத்திக் கொள்ளும் விதமாக அதனைச் செய்ய ஆரம்பித்தார்கள்."

**★ உண்மையில் பிளாஸ்டிக்கிற்கும் இதற்கும் சம்பந்தமில்லையா?**

"இல்லை 95 வீத செய்முறைகளும் பிளாஸ்டிக் சம்பந்தப்படாதவையே. இருப்பினும் Silicone என்று ஒரு பொருளை இந்த சிகிச்சையில் பயன் படுத்துவார்கள். 'சைலாஸ்டிக்' என்றும் இதனைச் சொல்வார்கள். இது பிளாஸ்டிக் போன்ற ஒரு பொருள். அவ்வளவுதான்.

பெண்களின் மார்பகங்களைப் பெரிதாக்கிக் காட்டுவதற்கென்ற இந்த Silastic ஐ 'இம்ப்ளாண்ட் செய்வார்கள். திடநிலையிலுள்ள சைலாஸ்டிக்கை மூக்கில் இருக்கும் மேடு, பள்ளங்களைச் சரிப்படுத்த (Contour Correction) பயன்படுத்துவார்கள். மூக்கு குடை மிளகாய் போன்று பெரிதாக இருந்தால், அதைச் சரிசெய்வதற்கும் இந்த சைலாஸ்டிக்கின் உதவி அவசியமாகிறது."

**★ பிளாஸ்டிக் சர்ஜரி என்றால் இன்னமும் பலருக்கு ஒருவித பயம் இருக்கிறதே... அது ஏன்?**

"முதலில் சொன்னதுதான். பிளாஸ்டிக் பொருட்கள் கொண்டு செய்வார்கள் என்ற பயம். அப்புறம்.... அதிகச் செலவு பிடிக்கும் என்ற எண்ணம். மற்ற ஆபரேஷன்களோடு ஒப்பிடும் போது இதில் செலவு மிகவும் குறைவுதான். மார்பகங்களைப் பெரிதாக்குதல் போன்ற சிகிச்சைகளின் போது. சிலிக்கோன் இம்ப்ளாண்ட் செய்ய வேண்டி வரும். அதை வெளிநாட்டிலிருந்து தருவிக்க வேண்டும். அதற்கு வேண்டுமானால் செலவு (20,000 ரூபாய்) பிடிக்கும். அதை இரண்டு, மூன்று நிலைகளில் செய்ய வேண்டும்.

தவிர, இது போன்ற சிகிச்சையைச் செய்து கொண்டால், வேறு ஏதேனும் மாறுபாடுகள் வந்துவிடுமோ என்ற பயமும் மற்றொரு காரணமாக இருக்கலாம். இந்த கான்செப்ட் பற்றிப் பலருக்குச் சரியாகத் தெரிவதில்லை. அதனால்தான் பயம். மற்றப்படி இது எளிதான சிகிச்சையே."

**★ எந்த வயதினர் இதனைச் செய்து கொள்ளலாம்?**

"எல்லா வயதினரும் இதைச் செய்து கொள்ளலாம். வயது வித்தியாசமெல்லாம் கிடையாது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருமே செய்து கொள்ளலாம். அவரவர் ஆரோக்கியம் இது விஷயத்தில் மிக முக்கியம். வேறு ஏதேனும் நோய்கள் இருந்தால் இந்த சிகிச்சையைச் செய்து கொள்ளக் கூடாது."

(தொடரும்...)


செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்
Au
பெயர்:............................
முகவரி:............................
............................
தொழில்:............................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-11-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**கம்பளை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

ஹினாயா அஸீஸ்,
இல. 46, வைத்தியசாலை வீதி, கம்பளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# இலங்கைப் பணிப்பெண்கள் பாதிக்கப்படவில்லை

# ஜித்தாவில் உள்ள தூதரகம் மறுப்பு!

தமது வேலை கொள்வோரிடமிருந்து ஏற்படும் பல்வேறு இன்னல்கள் காரணமாக சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைப் பெண்கள் பலர் ஜித்தா தூதரகத்தில் பணியாற்றும் அதிகாரிகளால் தவறான முறையில் நடத்தப்படுவதாக 478 வது தினமுரசு வாரமலரில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் கடிதம் பிரசுரமாகியிருந்தது.

ஆயிஷா பானு என்ற யுவதியினால் எழுதப்பட்டிருந்த அந்தக் கடிதம் பிரசுரமானதைத் தொடர்ந்து அவரது கருத்தை ஆமோதித்து, பாதிப்புக்குள்ளான மேலும் பலர் உதவி கோரி முரசுக்குக் கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

**மனித கௌரவத்திற்கான மன்றம் புகார்**

முரசில் வெளியான கடிதம் இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் இங்குள்ள சமூக சேவை அமைப்பு ஒன்று வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னான் டோவுக்கும், தொழிலமைச்சர் மஹிந்த சமரசிங்கவுக்கும் இது தொடர்பாகக் கடிதங்களை அனுப்பியுள்ளது.

தினமுரசில் ஆயிஷா பானு என்பவரினால் எழுதப்பட்ட கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு மனித கௌரவத்திற்கான மன்றம் என்ற அமைப்பு வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னான்டோவுக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி பெற்றுக் கொடுத்து அவர்களைச் சொந்த நாட்டிற்குத் திருப்பியழைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளது.

மனித கௌரவத்திற்கான மன்றத்தின் செயலாளர் செல்வி. மகேஸ்வரி வேலாயுதத்தினால் அனுப்பப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில், அண்மைக் காலமாக மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இலங்கைப் பணிப் பெண்களின் பிரேதங்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்படுவது அதிகரித்திருப்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தூதரகத்தில் தஞ்சம் புகும் பெண்களை வெளிநாட்டவர்களுக்கு விற்கும் அல்லது தவறான நடத்தைகளுக்குத் தூண்டும் அதிகாரிகளுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் செல்வி மகேஸ்வரி தனது கடிதத்தில் கோரியிருக்கிறார்.

இது இவ்விதமிருக்க, 'தினமுரசு வாரமல'ரில் ஜித்தாவில் இருந்து ஒரு கண்ணீர்க் கடிதம் என்ற தலைப்பில் வெளியான கடிதம் தொடர்பாக ஜித்தா தூதுவராலயத்தினால் மறுப்பறிக்கை ஒன்று எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அத் தூதுவராலயத்தின் தொழில் நலன்புரி அதிகாரி ஏ.எஸ்.எம். நளீம், தொழில் இணைப்பதிகாரி எம். ஆர்.எம். பாயிஸ் ஆகியோரது கையொப்பங்களுடன் முரசுக்கு அனுப்பப்பட்டிருக்கும் அந்த அறிக்கையில், தமது தூதுவர் அலுவலகத்தில் தஞ்சம் புகும் பெண்கள் எவ்வாறு சிறப்பாகக் கவனிக்கப்படுகிறார்கள் என்பது தொடர்பில் விரிவான விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை ஜித்தா தூதுவராலயத்தில் தஞ்சமடைந்த இலங்கைப் பணிப் பெண்களைப் பராமரிக்கவும் அவர்களைச் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பவும் செலவான தொகை உள்ளிட்ட பல்வேறு விளக்கங்கள் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது தூதுவராலயத்தில் பல தரப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக இலங்கைப் பணிப் பெண்கள் தஞ்சமடைகிறார்கள். அவையாவன:

பல மாதங்கள் வேலை செய்தும் ஊதியம் கிடைக்கப் பெறாமை

இத்தகைய பிரச்சனைகளை இத் தூதுவராலயம் நன்றாகப் பரிசீலனை செய்து தீர்த்து வைக்கின்றது. அவ்வாறு முடிவுறாத பிரச்சனைகளை இந் நாட்டில் அமுலில் உள்ள பொலிஸ் நிலையங்கள், தொழிலாளர் நீதிமன்றம், உயர் நீதிமன்றம் ஆகிய இடங்களுக்குச் சென்று பல மாதங்களாயினும் இப் பிரச்சனைகளைத் தீர்த்து, பணிப் பெண்களது உரிமைகளைப் பெற்றுக் கொடுக்கத் தவறுவதில்லை.

பணிப்பெண்களுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சரியான தொடர்புகள் இல்லாமை, வேலை கொள்வோரி டமிருந்து தப்பி வந்து, தஞ்சமடையும் இத்தகையவர்களின் பிரச்சனைகளை இத் தூதுவராலயம் அலசி ஆராய்ந்து அவர்களை வேலைக்கமர்த்திய முகவர்களைத் தொடர்பு கொண்டு அவர்களது பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்றது.

வீட்டு எஜமானினதும் அவரது குடும்பத்தாரினதும் மோசமான நடத்தைகள், தொல்லைகள் இப் பிரச்சனை காரணமாகத் தஞ்சமடைந்தவர்களை அவர்களது முகவர் நிலையம், பொலிஸ் அதிகாரிகள் போன்றோர்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைப்பதற்குத் தூதுவராலயத்துடன் தொடர்புடையவர்கள் நன்கறிவர்.

மேற்குறிப்பிட்ட பிரச்சனைகள் ஏதுமின்றி இன்னும் சில பணிப் பெண்கள் தங்களது எஜமானின் வீட்டை விட்டு வெளியேறிப் பல இடங்களில் அலைந்துவிட்டு நாட்டுக்குச் செல்வதற்காக இத் தூதுவராலயத்தில் தஞ்சமடைகிறார்கள். இத்தகையோருக்கும் கூட இத் தூதுவராலயம் இன,மத,மொழி வேறுபாடுகளின்றி உதவி புரிகின்றது. சரியான தகவல்கள் இல்லாதவர்களையும் பல சிரமங்களுக்கு மத்தியில் இத் தூதுவராலயம் நாட்டுக்கு அனுப்பி வைக்கின்றது.

உதாரணமாக, கடந்த செப்டம்பர் மாதம் இத் தூதுவராலயத்தில் தஞ்சமடைந்தவர்களுக்கு, இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் நிதியிலிருந்து உத்தியோகபூர்வமாகச் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு:

மருத்துவம் ரூபா.92, 329.28
உணவு ரூபா. 192,406.50
ஏனைய அன்றாட அடிப்படைத் தேவைகள் ரூபா.55, 083.60
மொத்தம் ரூபா .339, 819.48

ஆகவே, ஜித்தாவில் அமைந்துள்ள தூதுவராலய நியாயாதிக்கத்திற்குட்பட்ட சவூதி அரேபியாவின் மேற்குப் பிராந்தியத்தில் பணி புரிகின்ற ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட இலங்கையின் புலம் பெயர்ந்தவர்களுக்கு, இங்கு கடமை புரியும் அனைத்து அரச அதிகாரிகளும் இரவு பகலாகத் தமது கடமையைச் சரிவரச் செய்து வருவதை மேலதிகாரிகள் நன்கறிவர் எனத் தூதரகத்தினால் அனுப்பப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

Consulate General of the
Democratic Socialist Republic of Sri Lanka

15. 10. 2002.

ஆசிரியர்,
தினமுரசு வாரமலர்,
கொழும்பு.

கனம் ஐயா

உங்களது வாரமலரில் ... பிரசுரிக்கப்பட்ட ஜித்தாவிலிருந்து ... கடிதம் என்ற தலைப்பிலான கட்டுரை சம்பந்தமாக, ஜித்தாவிலுள்ள இலங்கை தூதுவராலயத்தில் தொழில் நலன்புரி பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகளாகிய நாங்கள் தெரிவித்துக்கொள்ளும் உண்மைகளை உங்களுடைய தினமுரசு பத்திரிகையில் பிரசரிக்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

மனித கௌரவத்திற்கான மன்றம்

FORUM FOR HUMAN DIGNITY


NGO in special Consultative Status with the Economic and Social Council of the United Nations

The Hon. Tyronne Fernando
Minister of Foreign Affairs
Ministry of Foreign Affairs,
Colombo.


14th October 2002

Honoured Sir,

According to a letter to the editor of Thinamurasu dated September 22 - 28, 2002, there ... young Ladies stranded at the Sri Lanka High Commission at Jeddah and are undergoing mental







சோர மிழைத்திடையர் பெண்களுடனே
- அவன்
சூழ்ச்சித் திறமை பல "காட்டுவ தெல்லாம்
வீர மறக்குலத்து மாதரிடத்தே
வேண்டிய தில்லையென்று சொல்லி விடடீ!

சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

## மூன்று மலை ஆடுகள்

**மு**ன்னொரு காலத்தில் மூன்று மலையாடுகள் இருந்தன. மூன்றும் அண்ணன், தம்பிகள். இந்த ஆடுகளுக்குத் தாங்கள் 'கொழுகொழு' என்று அழகாக இல்லாமல் மெலிவாக இருக்கிறோமே என்று ரொம்பக் கவலை.

ஒரு நாள், அண்ணன் ஆடு சொன்னது "தம்பிகளா... நாம் இங்கிருந்து அந்த மலைப்பக்கம் செல்வோம். அங்கே பச்சைப் பசும்புற்கள் நிறைய உள்ளது. நாம் அவற்றை உண்டு கொழு.. கொழு என்று அழகாக ஆகிவிடலாம்," என்றது.

"அழகான பிறகு நம் உறவினர்கள், நண்பர்கள் முகத்தில் விழிக்கலாம்," என்றன தம்பிகள்.

மறுநாள் குட்டியாடு குதித்துக் குதித்து மலைப் பக்கம் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் முதலில் சென்றது.

அப்படிச் செல்லும் வழியில் ஒரு சிறிய பாலம் இருந்தது. அந்தப் பாலத்திற்குக் கீழே பெரிய கிண்ணம் போன்ற கண்கள் உடைய சித்திரக்குள்ளன் ஒருவன் வசித்து வந்தான். இந்த விசயம் இந்த குட்டி மலை ஆட்டிற்குத் தெரியாது. மலை ஆடு ட்ராட்... ட்ராட்... என்று சத்தம் எழுப்பியபடி பாலத்தைக் கடந்தது.

சத்தம் கேட்ட சித்திரக்குள்ளன் கீழே இருந்து அண்ணாந்து பார்த்து "யாரடா அவன்; என்னுடைய பாலத்தில் ட்ராட்.. ட்ராட்.. என்று நடப்பது?" என்றான்.

"நான்தான் மலை ஆடு. மலைப்பக்கம் போய் நன்றாக கொழுத்து வரப் போகிறேன்," என்றது.

"அப்படியா விசயம். இப்போ உன்னை நான் தின்னப் போகிறேன்," என்றான் சித்திரக்குள்ளன்.

"நானோ குட்டி ஆடு! என்னை தின்பதால் உனக்கு என்ன கிடைக்கும். என் அண்ணன் இப்போ வருவார். அவர் சற்றுக் குண்டாக இருப்பார். அவரைத் தின்," என்றது.

"சரி," என்றான் சித்திரக்குள்ளன்.

சிறிது நேரத்தில் இரண்டாவது ஆடு வந்தது. ட்ராட்... டிரிக்...



டிரிக்.... ட்ராட்... சத்தம் கேட்டு மீண்டும் எட்டிப் பார்த்தான் சித்திரக்குள்ளன். "யாரடா நீ... என் பாலத்தில் உனக்கு என்ன வேலை?" என்றான்.

"நான் மலைப்பக்கம் போய்க் கொழு.. கொழு என ஆகப் போகிறேன்," என்றது மலை ஆடு.

"ஓஹோ... அவ்வளவு ஆசையா உனக்கு. உன்னைப் பிடித்து இப்பவே தின்னப் போகிறேன்," என்றான் குள்ளன்.

"என்னைத் தின்றால் உனக்கு என்ன ஆகப் போகுது! எங்க அண்ணன் நல்ல தடியா இருப்பார். செம உடம்பு அவருக்கு. அவரைப் பிடித்துத் தின்," என்று சொன்னது.

"சரி! நீ போகலாம்," என்றான் சித்திரக்குள்ளன்.

கடைசியாக முரட்டுக் கொம்பும், தொங்கும் முடிகளுமாக வந்தது பெரிய மலை ஆடு! இதன் பளு தாங்காமல் பாலம் அசைந்து ஆடி அதிக சத்தம் எழுப்பியது.

ஆத்திரமடைந்த சித்திரக்குள்ளன் "யாரடா அது! என்னுடைய பாலத்தை இந்த ஆட்டு ஆட்டுவது," என்றான்.

"நான்தான் மலை ஆடு. மலைப் பக்கம் போய் குண்டாகப் போகிறேன்," என்றது.

"இப்ப நான் உன்னைப் பிடித்து தின்னப்போகிறேன்," என்றான் குள்ளன்.


"ஓ தாராளமாக... தின்னு பார்க்கலாம். மேலே வாயேன்," என்றது ஆடு.

ஆத்திரமடைந்த சித்திரக்குள்ளன் பாலத்தின் மேலே சென்றான். தன் பெரிய கொம்புகளால் குள்ளனை முட்டிப் பந்தாடித் தூக்கி எறிந்தது. அத்துடன் இறந்து போனான் குள்ளன்.

மூன்று ஆடுகளும் நன்றாகத் தின்று கொழுத்தன. ஆனால் அவைகளால் பாலத்தை கடந்து இந்தப் பக்கம் வர முடியவில்லை. காரணம் இவற்றின் பாரத்தை அந்தப் பாலத்தால் தாங்க முடியாத அளவில் இருந்தன.

எனவே, அந்த மலைப் பிரதேசத்திலேயே வாழ்நாள் முழுவதும் வசித்தன. ஆனால், தங்கள் பிறந்த இடத்திற்கு வரவேண்டும் என்ற ஆசை மட்டும் அந்த ஆடுகள் மனதைவிட்டுப் போகவே இல்லை.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.11.2001.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 468**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 465

பரிசுக்குரியவர்:
**வி. ஆத்மஜன்,**
ஹைலன்ஸ் கல்லூரி, ஹட்டன்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **நூருல் சிம்லா காதர்,** மி/கனிஷ்ட வித்தியாலய விடுதி, திக்குவல்லை. | **எம்.கிஷாந்தன்,** நு.கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம். |
| **யோ.சசிதரன்,** சிலா.செ.பே.த.ம.வித்தியாலயம், சிலாபம். | **பாத்திமா நுஸ்ரத்,** 31, கனத்த வீதி, குடாபாடு, நீர்கொழும்பு. |
| **முஸ்னா ரஷிகா,** 199/சி, புதிய வீதி, கல்முனை-07. | **மதன்ராஜ்,** தெஹிவளை தமிழ் வித்தியாலயம், தெஹிவளை. |
| **நுஜுஹா ஹாலித்,** பா/முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், புத்தளம். | **பவித்ரா,** கொ. இந்துக் கல்லூரி. |
| **ஜி. சுபதர்சினி,** வனராஜா குரூப், டிக்கோயா. | **நிரஞ்ஜன்,** அம்சா தே. பாடசாலை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. குட்டைத் தண்ணீரில் எட்டுக் கப்பல் ஓடுது அது என்ன?
2. படம் எடுத்தான் பக்கத்தில் இருந்தவர்கள் ஓட்டம் அவன் யார்?
3. மனிதன் போடாத பந்தலில் மலர்ந்து கிடக்குது மல்லிகைப்பூக்கள் அது என்ன?
4. அண்ணன் தம்பி ஐவர், ஐவருக்கும் ஒரே வீடு அது என்ன?
5. உடல் இல்லாதவன் ஊரெல்லாம் போவான் அவன் யார்?
6. பூப்பூவாய் உதிர்வான் 'பொறி' பட்டால் உடம்பு புண்ணாகும் அவன் யார்?
7. என்னில் உன்னைக் காட்டுவேன் நான் யார்?
8. அந்தரத்தில் தொங்கும் அழகான வீடு அது என்ன?
9. பக்கத்தில் இருக்கும் பட்டணம் பார்க்கத்தான் முடியல்லே அது என்ன?
10. உருண்டிருக்கும் பாறை மேலே திரண்டு நிற்குது கோரைப்புல் அது என்ன?

**விடைகள்.**

1. தவளை 2. பாம்பு
3. வானம்-நட்சத்திரங்கள்
4. உள்ளங்கை-விரல்கள்
5. புகை 6. பட்டாசு
7. முகம் பார்க்கும் கண்ணாடி
8. தூக்கணாங் குருவிக்கூடு
9. முதுகு 10. தலைமுடி

## இனவிருத்தி



வீட்டு ஈ ஒரு பருவத்தில் வேகமாக முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்கிறது. ஈயின் ஒரு சந்ததி மட்டும் 4,00,000,000,000,000 முட்டைகளை இட்டு இனப்பெருக்கம் செய்து விடும்.

கசகசா செடியின் பூ ஒன்றில் மட்டும் 3 ஆயிரம் விதைகள் இருக்கும். இந்த விதைகள் அனைத்தும் முளைத்துப் பூத்தால் 5 வருடங்களுக்குள் இதன் விதைகள் மூலம் உலக நிலப்பரப்பு முழுவதும் கசகசா செடியைப் பயிரிட முடியும்.





காட்பிஷ் என்னும் மீன் தனது முட்டையிடும் பருவ காலத்தில் மட்டும் 1 கோடி முட்டைகளை இடும்.

## அறிவுக்கு ஐந்து!




**மேற்கு இந்தியத் தீவுகள்!**

★ **மேற்கு இந்தியத் தீவுகள் எங்குள்ளன?**
அமெரிக்காவிலுள்ள ப்ளோரிடா மாநிலத்திலிருந்து வெனிசுலா வரை மூவாயிரத்து 200 கி.மீ. தூரத்திற்கு சங்கிலித் தொடர்போல் உள்ள ஆயிரக் கணக்கான தீவுகளே மேற்கிந்தியத் தீவுகள் எனப்படும். இந்தத் தீவுகள் மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

★ **அந்த மூன்று முக்கிய பகுதிகள் என்னென்ன?**
தி பகாமஸ், தி கிரேட்டர் ஆன்டிலெஸ் மற்றும் தி லெஸ்சர் ஆன்டிலெஸ்.


★ **இவை அனைத்தும் ஒரே நாடா?**
இல்லை, இவை ஒவ்வொன்றும் சுதந்திர நாடுகளாகத் திகழ்கிறது.

★ **மேற்கிந்திய தீவுகளின் மக்கள் தொகை எவ்வளவு?**
3 கோடியே 50 லட்சம். இவற்றில் மிகப் பெரிய தீவு க்யூபா.

★ **ஏன் இந்தத் தீவுகளுக்கு மேற்கிந்தியத் தீவுகள் எனப் பெயர் வந்தது?**
கொலம்பஸ் முதன்முதலில் இத் தீவுகளில் ஒன்றில் கால் வைத்தார். அவர் இத் தீவுகளை இந்தியா என நினைத்துக் கொண்டு இந்தியத் தீவுகள் எனப் பெயர் வைத்தார். நாளடைவில் இவை மேற்கிந்தியத் தீவுகள் என அழைக்கப்பட்டது.


## இந்த வாரப் புதிர்

**இந்த உருவினை சம பக்கம் உள்ள நான்கு பாகங்களாகப் பிரிக்க வேண்டும் எங்கே முயலுங்கள் பார்க்கலாம்.**



## அறிவுத் தேடல்

**சென்றவாரப் புதிரின் விடை:**



**(Y=20, செவ்வகத்தின் நிலைக்குத்தான பக்கங்களின் கூட்டுத்தொகையில் இருந்து கிடையான பக்கங்களின் கூட்டுத்தொகையைக் கழிக்க வருகின்ற பெறுமதி (விடை) நடுவிலே இடப்பட்டுள்ளது.)**

"என் மதிப்புக்குரிய வாக்காளப் பெருமக்களே! தனவான்களே!! கனவான்களே!!! ரெத்தத்தின் ரெத்தங்களே!! வீரத்தியாகிகளே!! இதோ, உங்கள் முன் இந்த கந்தசாமி, உங்கள் பிரதிநிதியாக உங்களுக்கும் நாட்டுக்கும் நல்லது செய்வதற்காக உங்களது அனுமதியோடு... உங்கள் சார்பாக... உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவனாக நாடாளுமன்றம் மிதிப்பதற்கு உங்கள் பொன்னான வாக்குகளைக் கேட்டு... நின்று கொண்டிருக்கிறேன். என்னை, உங்கள் வாக்குகளை அள்ளிக்கொட்டி நாடாளுமன்றத்திற்கு அனுப்பினீர்களேயானால்... உங்கள் சகல தேவைகளையும் எனது உயிரைக் கொடுத்தேனும் நிச்சயமாக... சத்தியமாக... நிறைவேற்றுவேன் என்பதனை இவ்விடத்தில் ஆணையிட்டு, உறுதியிட்டு கூறிக் கொள்ள விரும்புகிறேன்..."

திடீரென வானையே கிழிக்கும் அளவிற்கு கைதட்டல் ஓசை பலமாக ஒலித்தது. அது ஓய்வதற்கே பல நிமிடங்கள் பிடித்தது. அந்தப் பெரும் வெளிப் பரப்பிலே பல ஆயிரக் கணக்கான மக்கள் குழுமியிருக்க, அங்கு அமைக்கப் பட்டிருந்த அலங்கார மேடையிலே நின்றுகொண்டு குறிப்பிட்ட கந்தசாமி என்பவர் உரையாற்றிக்கொண்டிருந்தார்.

ஆமாம்! அது தேர்தல் காலம். அதனால் அப்பகுதி மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் செல்வதற்காக அவர்களின் வாக்குகளைக் கேட்டு இடம்பெறும் ஒரு பெரும் கூட்டமாக அது இருந்தது. அப்பகுதி மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றவராகக் கந்தசாமி இருந்ததனால் அம்மக்களும் அவரை நாடாளுமன்றத்திற்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்கள். அதன் ஆரம்பமே இது.

தேர்தல் காலம் விரைவாக நெருங்கிக் கொண்டிருந்தது. கந்தசாமியும், அவர் பகுதி மக்களும் மிகவும் மும்முரமாகவும், அவசரமாகவும் தேர்தல் பிரச்சாரங்களிலும், வேலைகளிலும் ஈடுபட்டிருந்தனர். இதற்குக் காரணம், அதே பகுதியில் கந்தசாமிக்கு எதிரான பிரச்சாரக் கூட்டங்களும் இடம்பெறத் தொடங்கியிருந்ததுதான்.

எப்படியோ தேர்தலுக்கு ஒரே ஒரு வாரம் மீதமிருந்த அவ்வேளையில் திடீரென அப்பகுதியிலே பெரும் சச்சரவும், குழப்பமுமாக இருந்தது. என்னவென்றால், கந்தசாமி குழுவுக்கும், எதிரணியின் குழுவுக்கும் இடையில் கல்லெறியும், பொல்லடியும், கத்திக்குத்தும், வாள்வீச்சும் இடம்பெற்றது. இதனால் பலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இதன் காரணமாக ஆத்திரமுற்ற பாதிக்கப்பட்ட இருதரப்பின் உறவினர்களும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதே இந் நிலைமைக்குக் காரணம். இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக இந்தச் சம்பவம் நடந்தது. பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஊரடங்குச் சட்டத்தினை அமுல்படுத்தியே அக்குழப்பத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டி இருந்தது..

இந் நிலையில் கந்தசாமியின் ஆட்கள் அதிகம் பேர் இருந்தாலும் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களே. அவர்களுக்குள் "கந்தசாமியின் இரு கரங்கள்" என அப்பகுதி மக்கள் கூறும் அளவிற்கு அவர்மேல் மிகுந்த ஐக்கியமும், பக்தியும், கந்தசாமியை எப்படியாவது நாடளுமன்றத்திற்கு அனுப்பியே தீர்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டு, எதுவந்தாலும் பரவாயில்லை என்ற நிலையிருந்த நிர்மல் என்பவன் தனது வலது கையையும், ராஜன் என்பவன் தனது வலது காலையும் இழந்து ஊனப்பட்ட நிலைக்கு ஆளானார்கள். இது கந்தசாமியை மட்டுமல்ல, அங்குள்ள அனைவரையும் மிகுந்த துக்கத்தில் ஆழ்த்தியது. இருந்தாலும் மன உறுதியும், வேகமும் கொண்ட அவ்விருவரும் அந்த நிலையினையும் பொருட்படுத்தாமல் தாங்கள் தேர்தலின் இறுதிக்கட்ட நடவடிக்கையில் முழுச்சாகப் பங்குகொண்டார்கள்.

அன்று அந்தப் பகுதியே முழுமையான சன சஞ்சாரம் நிறைந்ததாகக் காணப்பட்டது. ஆம்! அது வாக்காளர்களின் உற்சாகம் நிறைந்த சஞ்சாரம். தமக்குப் பிடித்தவருக்கு வாக்களித்த திருப்தியில் பலரும், தாம் விரும்பியவருக்கு வாக்களிக்கப் போகும் மகிழ்ச்சியில் பலருமாக மக்கள் வருவதும் போவதுமாகக் காணப்பட்டது அப்பகுதி. அன்று முழுநாளும் இதேவிதமாகவே காணப்பட்டது. எப்படியோ அன்று தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. நள்ளிரவு தொடக்கம் தேர்தல் முடிவுகள் வரத் தொடங்கிவிட்டன. தங்களின் விருப்பத்தின் வெளிப்பாட்டினை அறிந்துகொள்வதற்காக வானொலிகளின் பக்கத்தில் அப்பகுதி மக்கள் அமர்ந்துகொண்டிருந்தார்கள். நிர்மலும், ராஜனும்கூட மிக ஆர்வத்தோடு தம் கவலையை மறந்து விதைத்ததன் லாபத்தினை அறியக் காத்திருந்தார்கள். முடிவும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் நினைத்ததுபோன்று... எதிர்பார்த்தது போன்று... கந்தசாமி அத் தேர்தலில் அப் பகுதியில் அமோக வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகும் தகுதியைப் பெற்றார். அப் பகுதி எங்குமே பட்டாசு வெடி ஓசைகளும், கோலாகல ஊர்வலமும் நடந்தன. இது தங்களின் அயராத உழைப்பிற்காகக் கிடைத்த

# பிரதிநிதி



**அமானுல்லாஹ் ஏ.மஜீத்-மருதமுனை-03.**

வெற்றியே என நிர்மல், ராஜன் இருவரும் மிக உற்சாகத்தோடு அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

அன்று மீண்டும் அந்தப் பிரதேசம் அலங்கரிக்கப்பட்டு, தமது புதிய நாடாளுமன்றப் பிரதிநிதியான கந்தசாமியை வரவேற்று வாழ்த்துவதற்காகக் காத்திருந்தது. குறித்த வேளையில் அவரும் வந்தார்; இறுதியாகத் தமது உரையை நிகழ்த்துகையில் "என் அன்பான உடன் பிறப்புக்களே!! என்னை ஏமாற்றிவிடாமல் எனக்கு முழு மனதோடு வாக்களித்து என்னை இந்த நிலைக்கு உயர்த்திய உங்கள் அனைவருக்கும் எனது தாழ்மையான நன்றிகள். எனக்காகப் பலர் பலவிதமான தியாகங்களைச் செய்தீர்கள். அவர்களில் குறிப்பாக நிர்மல், ராஜன் போன்றவர்கள் எனக்காகத் தங்கள் உடல் உறுப்புக்களையே இழந்துவிட்டார்கள். உண்மையில் அவர்களைப் பற்றி நான் மிகவும் பெருமிதமடைகிறேன். இனி அவர்களின் எதிர்காலத்திற்கு நானே முழுப் பொறுப்பு. அவர்கள் இனி எனது பிள்ளைகள். அவர்களது நலனுக்காகவும், உங்கள் அனைவரது நலனுக்காகவுமே நான் பாடுபடப்போகிறேன்... என்பதோடு அவர்கள் இருவருக்கும் "தியாகச் செம்மல்கள்" என்ற பட்டத்தையும் சூட்டுகிறேன்" என நிர்மல், ராஜன் இருவரையும் மேடைக்கு அழைத்து அவர்களுக்குப் பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கவே அங்கிருந்த கூட்டம் கைதட்டி ஆரவாரம் செய்து தமது பூரணமான மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தியது.

அனைத்தும் முடிந்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. அந்த நிலையில் ஒருநாள் மீண்டும் கந்தசாமியின் பகுதியிலே பெரும் பரபரப்பு. அதற்குக் காரணம் பத்திரிகையில் வெளியாகியிருந்த "கந்தசாமி எம்.பி. இராஜினாமா" என்ற தலைப்புக் கொண்ட செய்தியே. அதில் "கடந்த இரு நாட்களுக்கு முன்னர் மேலதிகமாக நியமிக்கப்பட்ட சில புதிய அமைச்சர்களுள் ஒருவராக கந்தசாமி எம்.பி.யையும் சேர்த்துக்கொள்ளாத காரணத்தினால், அப் பதவியைத் தனக்கு வழங்காத காரணத்தை முன்னிட்டுத் தான் தனது எம்.பி.பதவியினை இராஜினாமாச் செய்வதாக கந்தசாமி எம்.பி. அறிவித்ததோடு, இராஜினாமாக் கடிதத்தையும் நேற்றிரவு கையளித்தார்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தச் சிறிய ஓலைக் குடிசையின் ஒரு மூலைக்குள் உட்கார்ந்து இருவர் அழுதுகொண்டிருந்தார்கள். அவர்களைச் சுற்றி ஒரு கூட்டம் சோகமே உருவாக; அழுதுகொண்டிருப்பவர்களைத் தேற்றுவதற்குக்கூட முயற்சிக்காமல் நின்றுகொண்டிருந்தது. அவர்கள் இருவரும் வேறு யாருமல்ல. கந்தசாமி என்பவரை எம்.பி. ஆக்குவதற்காக ஊனமாகிப் போன நிர்மலும், ராஜனும்தான்.

"எங்களுடைய தேவைகளை நிறைவேற்ற; எங்களுக்கென்று ஒரு அரசியல் பிரதிநிதியைச் சொந்தமாக வைத்துக்கொள்ள நாங்கள் எடுத்த முயற்சிக்குக் கிடைத்த பரிசைப் பார்த்தீர்களா...? யாரோ ஒருவன் உயரவேண்டும் என்பதற்காக நாங்கள் எங்கள் எதிர்காலத்தையே பாழக்கிக் கொண்டதைப் பார்த்தீர்களா...? எங்களுக்கு அமைச்சர் வேண்டும் என்றா அவனைத் தேர்ந்தெடுத்தோம்...? இறுதியிலே அவனும், ஒரு சராசரி அரசியல்வாதி என்பவன் இப்படித்தான் இருப்பான்; அவன் மாறவே மாட்டான் என்ற சுயநலப் புத்தியைக் காட்டிவிட்டானே...! அவனுக்கு அமைச்சுப் பதவி வேண்டுமென்பதற்காக; அவனுக்காகப் போராடி வாழ்க்கையை இழந்து நொந்துவிட்ட எங்களைப் போன்றவர்களை மறந்துவிட்டானே.. இனி எங்கள் எதிர்காலம் பற்றி நாங்கள் போட்டு வைத்திருந்த திட்டத்தை எங்கே கொண்டு போய்க் கொட்டுவது...? இப்படிப்பட்ட வஞ்சகர்களை எப்படி நாம் மன்னிப்பது? மறப்பது? இனிமேலும் இவ்வாறான விடயங்களில் மிக்க கவனமாக இருங்கள். இனிமேலும் இதுபோன்ற அரசியல்வாதிகளை நம்பி ஏமாறாதீர்கள்... ஏமாறாதீர்கள்... ஏமாறாதீர்கள்..."

துக்கம் தாழாமல் அழுது புலம்பியவர்களைப் பார்த்து மேலும், மேலும் அனுதாபப்படத்தான் முடியுமே தவிர, அங்கு நின்றிருந்தவர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்...? ஏனெனில், அவர்களுமல்லவா... கந்தசாமியால் நம்பவைக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டவர்கள்?

---

அப்போது நான் உயர்தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அது திருமலை நகரத்தின் உயர்ந்த இடத்துப் பாடசாலை. அங்கு நல்ல கல்வியை மட்டுமல்ல நல்ல நட்பினையும் கற்றுக் கொண்டேன். நான் கிராமத்தில் இருந்து நகரத்திற்குப் படிக்கச் சென்ற காலத்தில் என்னைத் தனக்கு அறிமுகப்படுத்திய எனது முதல் நகரத்துச் சிநேகிதன் அவன்தான்.

அவனை இந்திரவதனன் என்றுதான் எல்லோரும் உச்சரிப்பார்கள். நான் மட்டும் 'இந்து' என்றே கட்டிக் கொண்டு எப்போதும் ஒட்டித் திரிவேன். நகரின் அத்தனை வீதியோர மரங்களின் கீழும் எங்கள் பாதப் பதிவுகளை இன்றும் காணலாம். 'இந்து' பெயருக்குள் மதமிருந்தாலும் மதத்திற்கும் அவனுக்கும் மைல் கணக்கில் இடைவெளி இருந்தது. ஆனால் மதம் பிடிக்காத நல்ல மனங்களை நேசித்தவன். நெஞ்சுக்குக் குறுக்கே கோடுகள் போட்டுக் கொஞ்சிக் கொண்டதும், மதீஸாக்களின் மதில்களுக்குள் சென்று மண்டியிட்டுக் கொண்டதும், பௌர்ணமி நிலவில் அல்லி மொட்டுக்களைக் கைகளால் உடைத்துப் பூசித்ததும் அவனுடைய நட்பிற்குப் பிறகுதான்.

குடும்ப உறவுகளிடம் கிடைக்காத அன்பை கூடித் திரிந்த நண்பர்களிடம் தேடியலைந்தவன். ஆனாலும், அந்த வயதுக்கே உரிய காதல் உணர்வில் மட்டும் கடைசி வரைக்கும் நம்பிக்கை வைக்க மறுத்தவன். இப்போதும் என்னிடம் "நீ எனக்குத் துரோகம் செய்து விட்டாய்!" என்றுதான் சொல்கிறான். அதை மட்டும்தான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவன் அப்படிச் சொல்வதற்கும் நான்தான் காரணமாக இருக்க வேண்டும்.

எங்கள் வகுப்பில் பெண்கள் மிகக் குறைவு. அங்கிருந்த பெண்களில் வீணாவும் ஒருத்தி. என்னோடும் அவனோடும் மட்டும்தான் அவளுக்கு அதிகம் பேச்சு. அதற்குள்ள அர்த்தம் என்னால் இப்போது சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் இந்து என்னை மட்டுமே விசுவாசிக்கிறான் என்று தெரியும். மீசையை மட்டும் ஆதாரமாக வைத்துக் கொண்டு... பெண் பிள்ளைகளின் பின்னால் அலையும் ஆண்கள் சிலரைப் பார்க்கும்

# இதற்கும் பேர் துரோகமா?



**சம்பூர் எம். வதனரூபன்**

போது அவனுடைய மனதிற்கும் அந்தப் பருவ ஆசை வந்திருக்க வேண்டும். இதை அவனுடைய பேச்சிலிருந்தே புரிந்து கொண்டேன்.

உண்மையில் அவன் நல்லவன். நடுத்தரக் குடும்பம். அவனையும் அவனுடைய குடும்பத்தவர்களின் எதிர்காலத்தையும் ஒன்றாகவே வளர்த்துக் கொண்டிருந்தனர் அவன் பெற்றோர். இதற்குள் அவன் தவறான வழியில் சென்றுவிட்டால் என்னை நம்பிப் பழகவிட்ட அவனுடைய பெற்றோர் முகத்தில் என்னால் எப்படி விழிக்க முடியும்? அதனால், அவனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எனக்கிருந்தது. 'புத்திமதி சொல்வது கெட்ட பழக்கம்' என்பது அந்த வயதில் உள்ள எல்லோருமே எண்ணிக் கொள்ளும் விசயம். அதனால்தான் அவனிடம் நான் இப்படிச் சொன்னேன்.

"டேய் இந்து! இவள் வீணா... எப்ப பார்த்தாலும் உன்னைப் பற்றித்தாண்டா... கதைக்கிறாள்... யாருக்கும் தெரியாம உன்னை அடிக்கடி நோட் பண்ணுறாளடா!" என்று அவள் எதைச்சையாகச் செய்யும் ஒவ்வொன்றையும் அவனுக்காகவே செய்ததாய்ப் புனைந்தேன். அவனும் அதில் ஊறிப் போனான்.

வீணா... எல்லாவற்றையுமே... அதிகமாக வைத்திருப்பவள். அவள் எங்களிடம் வைத்திருக்கும் அன்பு கலந்த மதிப்பிற்கு, அவள் வீட்டில் நடக்கும் சின்ன விசேசத்திற்கும் எங்களை மட்டும் அழைப்பதும் எவர் முன்னும் எப்போதும் எங்களுடன் சலனமில்லாமல் பேசுவதும் பழகுவதும் மட்டுமே போதுமான ஆதாரம். அவள் குடும்பத்தாரிடமும் எங்களைப் பற்றி நல்ல மதிப்பும் அபிப்பிராயமும் இருந்தது. இதனால் இந்து அவளிடம் எதையும் அவசரப்பட்டு கேட்கவோ வித்தியாசம் காட்டிப் பழகவோ தயங்கினான். இதை வைத்தே காலத்தைக் கடத்தினேன். எங்களுடைய பரீட்சையும் முடிந்தது. அவனுக்கும் நல்ல மாதிரியான முடிவுகள்தான் பரீட்சையில் கிடைத்தன.

இப்போது தனியார் வங்கி ஒன்றில் அவன் வேலை பார்க்கிறான். பாடசாலையுடன் எங்கள் நட்பு முடிந்து விடவில்லை. எங்கள் என்றதில் வீணாவும் அடங்குவாள். புதுவருடம், பிறந்த நாள்... ஏன் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அவளுடைய வீட்டிற்குச் சென்று வருவோம். அன்றும் புதுவருடம். அதில்தான் சிக்கல் வந்தது. இன்றைக்காவது அவன் அவளைக் காதலிப்பதைப் பிரகடனப்படுத்தி, அவளும் காதலிக்கிறாள்தானா? என்று அறிந்து சொல்ல வேண்டும் என்று அவனால் தொல்லையாக இருந்தது. நச்சரிப்புத் தாங்காமல் ஒப்புக் கொண்டேன். என் நல்ல நேரம் அன்று கடும் மழை பெய்ததால் எங்களால் அவளுடைய வீட்டிற்குச் செல்ல முடியவில்லை.

அடுத்த நாள் வீதியில் அவளிடம் மாட்டிக் கொண்டேன். தனது தந்தை வெளிநாட்டிலிருந்து வந்திருப்பதாகவும், இன்னும் சில மாதங்களில் படிப்பிற்காக அவளும் செல்லவிருப்பதாகவும், அந்த இன்ப அதிர்ச்சியை செல்லமாக கோபித்துக் கொண்டு கூறிய போது, உண்மையில் நான் அதிர்ந்து போனேன். அந்த நேரத்தில் எப்படி அதைப் பற்றிப் பேச முடியும். அப்படிப் பேசினால் அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாளோ... என நினைத்துத் தயங்கினேன். வீட்டிற்கு வரும்படி கூறினாள். சமாளித்துவிட்டு நகர்ந்தேன்.

அன்றிலிருந்து சில நாட்களாக இந்துவை நான் சந்திக்கவில்லை. அவனுக்கும் எப்படியோ அது விளங்கியிருக்க வேண்டும். மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டான். உரிமையான கோபம் என்றே நினைத்தேன். இப்போதெல்லாம் அவன் வீட்டார் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறார்கள். "தம்பீ! உன்ர சகவாசத்தாலதான் இண்டைக்கு இவன் நல்லாயிருக்கிறான்..." இது அவனுடைய பெற்றோர் எனக்குத் தரும் நற்சான்றிதழ். எனக்கு அவர்களின் நம்பிக்கையையோ வீணா குடும்பத்தாரின் நல்லபிப்பிராயத்தையோ... இழக்கத் துணிவில்லை. இப்போதெல்லாம் நாங்கள் வீணா வீட்டிற்குக் கூடப் போவதில்லை. வீணாவின் வீட்டார் எம்மைப் பற்றி அறிந்தவர்களிடம் எங்களை விசாரிப்பதாகவும் வீட்டுக்கு வரும்படி அழைத்ததாகவும் கூறுவார்கள். அண்மையிலும் யாரோ.. சொன்னார்கள் 'அவளுக்கும் கனடா மாப்பிள்ளைக்கும் கசாதாம்...' என்று. இது அவனுக்குத் தெரியாது. சொல்லவும் விரும்பவில்லை. அவன் அவளை இப்போதும் நேசிக்கிறானாம். ஒவ்வொரு புதுவருடத்தன்றும் என்னிடம் இந்து சொல்வான். "டேய்.. நீ என்னை ஏமாற்றி விட்டாய்... நீயும் எனக்குத் துரோகம் செய்து விட்டாய்!" என்று. வெளிப்படையாகச் சிரித்துக் கொண்டாலும் உள்ளுக்குள் வேதனைதான். இப்போது என்னிடமே நான் கேட்டுக் கொள்வதுண்டு. "அவனுக்கு நான் செய்தது நல்லதுதானே... இல்லையா!...?" அல்லது நான் செய்தது துரோகம்தானா?!.



என் அன்பான விவேக்!

நான் உங்கள் ரசிகை. எல்லோருமே சினிமா நடிகர் நடிகைக்குத்தான் ரசிகைகளாக இருப்பார்கள். நான் அப்படியில்லை. ஒரு க்ரைம் பிராஞ்ச் ஆபிஸருக்கு ரசிகை. உங்களுக்குத்தான் எவ்வளவு மூளை? எந்த கேஸானாலும் அலட்டிக் கொள்ளாமல் நீங்கள் துப்பறியும் அழகே அழகு. ஸ்காட்லாண்டில் பிறந்திருக்க வேண்டிய நீங்கள் தவறிப் போய் இந்தியாவில் அதுவும் தென் இந்தியாவில் அதுவும் தமிழ்நாட்டில்- பிறந்து விட்டீர்கள். உங்களைப் போன்ற....

அன்றைக்கு தபாலில் வந்த கடிதத்தை மும்முரமாய் படித்துக் கொண்டிருந்த விவேக்- தனக்குப் பின்பக்கமிருந்து ரூபலாவின் வளையல் சத்தம் கேட்டதும் திரும்பினான்.


"என்ன அவ்வளவு இண்ட்ரஸ்டிங்காப் படிச்சிட்டிருக்கீங்க?"

"ஒரு ரசிகையோட லெட்டர்."

"அதானே கேட்டேன். எங்கப்பா கிட்டேயிருந்து லெட்டர் வந்திருந்தா பிரிச்சுக் கூடப் பார்த்திருக்க மாட்டீங்களே?"

"உங்கப்பாவோட லெட்டரை பிரிச்சு வேறு பார்க்கணுமா? கடந்த ரெண்டு வருஷ காலமா உங்கப்பா எழுதின லெட்டர்களை படிச்சு படிச்சு எனக்கு அவர் வழக்கமா எழுதற அந்த அஞ்சு வரியும் பேரூர் கோயில் கல்வெட்டு மாதிரி மனசுல பதிஞ்சு போயிடுச்சு. அவர் என்ன எழுதுவார்ன்னு சொல்லட்டுமா?"

"சொல்லுங்க பார்க்கலாம்."



"சிரஞ்ஜீவி மாப்பிள்ளைக்கு உங்கள் மாமனார் எழுதிக் கொண்ட கடிதம். ஆசீர்வாதம் ஷேமம். உங்கள் ஷேமத்திற்கும் ரூபலா ஷேமத்திற்கும் அம்பாளை பிரார்த்திக்கிறேன். நீங்களும் ரூபலாவும் பெங்களூருக்கு வந்து ரொம்ப நாளாயிற்று... வந்தால் நானும் உங்கள் அத்தையும் சந்தோசமடைவோம். ரூபலாவுக்கு ரொம்பவும் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டேன். அவள் ஏதாவது வாயாடினால் பொறுத்துக் கொள்ளுங்கள்- இப்படிக்கு."

ரூபலா கன்னத்தில் கை வைத்து ஆச்சரியப்பட்டாள்.

"அட! எங்கப்பா எழுதற மாதிரியே சொல்றீங்களோ?"

"இந்த லட்சணத்துக்குத்தான் உங்கப்பா லெட்டரையே நான் பிரிச்சு பார்க்கிறதில்லை. அடுத்த தடவை உங்கப்பாவைப் பார்க்கும்போது நான் இப்படி சொல்லிடலாம்ன்னு இருக்கேன்."

"எப்படி?"

"பேசாமே அந்த லெட்டர்ல நூறு ஜெராக்ஸ் காப்பி எடுத்து வெச்சுகிட்டு வாரம் ஒரு காப்பியை போஸ்ட் பண்ண சொல்லலாம்ன்னு இருக்கேன்."

"சரி, யாரந்த ரசிகை?"

"நான் இன்னும் ப்ரம் அட்ரஸையே பார்க்கலை. லெட்டரை பார்த்ததுமே படிக்க ஆரம்பிச்சுட்டேன்."

"அந்த ரசிகை என்ன எழுதியிருக்கா?"

"ரூபலா அக்கா சௌக்கியமான்னு கேட்டிருக்கா?"

"என்னது? என்னை அக்கான்னு கூப்பிட்டிருக்காளா? முதலுக்கே மோசம் வந்துடும் போலிருக்கே. யாரவ?"- ரூபலா கோபமாய் கேட்டுக் கொண்டே விவேக்கின் கையிலிருந்த கடிதத்தைப் பறித்தாள். ஃப்ரம் அட்ரஸை பரபரவென்று பார்த்தாள்.

## அங்கம் 05

தேவதை,
மே/ பா, இந்திரன்,
இந்திரலோகம்,
எமகண்டம்(போஸ்ட்),
சொர்க்கம் (வழி),
உலகம்,
பின் கோட் நம்பர்- 000 000.

ரூபலா திட்டினாள். "எவளோ குறும்புக்காரி அதிலும் ஒரு பைத்தியக்காரி லெட்டர் போட்டிருக்கா. அதைப் போய் இவ்வளவு இண்ட்ரஸ்டிங்கா படிச்சிருக்கீங்களே. கிழிச்செறிங்க" ரூபலா அந்த லெட்டரை நான்கு துண்டுகளாக கிழித்துக் கொண்டிருக்கும் போதே-

உள்ளே டெலபோன் கூப்பிட்டது.

விவேக், நாலே எட்டில் டெலிபோனைத் தொட்டு ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"மிஸ்டர் விவேக்."

"எஸ்..."

"மும்பை க்ரைம் பிராஞ்சிலிருந்து

எழுதுவது

**ராஜேஷ்குமார்**

வர்மா பேசுகிறேன்."

"சொல்லுங்க ஸார்...என்ன விஷயம்?"

"விஷயம் ஹெவிகான்ஃபிடென்ஷியல், நீங்கள் அடுத்த ஃபிளைட்டிலேயே மும்பை புறப்பட்டு வர வேண்டியிருக்கிறது. நீங்கள் வருவது ரகசியமாக இருக்கட்டும்."

"உடனடியாய் புறப்பட வேண்டுமா?"

"ஆமாம்..."

" என் மனைவியையும் அழைத்துக் கொண்டு வரலாமா?"

"வரலாம். சாயந்தரம் ஆறு மணிக்கு உங்களுக்கு நேரடியாக மும்பை ஃபிளைட் இருக்கிறது. உங்கள் ஒரிஜினல் பெயர்களில் பயணம் செய்ய வேண்டாம். நீங்கள் மும்பை வருவது ரகசியமாய் இருக்க வேண்டும்.

"எஸ்...ஸார்..."

வர்மா ரிஸீவரை அணைக்க, விவேக்கும் யோசனையோடு ரிஸீவரை அணைத்து விட்டு திரும்பினான். எதிரே நின்றிருந்த ரூபலா கேட்டாள்:

"என்னங்க நாம எங்கே புறப்படறோம்?"

"மும்பை..."

"எதுக்கு?"

"விவரம் தெரியலை. ஆனாலும் கேஸ் என்னவாயிருக்கும்ன்னு யூகிச்சிட்டேன்."

"என்ன கேஸ்?"

"மும்பை கமிஷனரையும் அவரோட குடும்பத்தையும் தீர்த்துக்கட்ட ஒரு கும்பல் முயற்சி பண்ணினதா பேப்பர்ல நியூஸ் பார்த்தோமே?"

"ஆமா..."

"அந்த கேஸை டீல் பண்ணத்தான் கூப்பிடறாங்க போலிருக்கு..."

"நானும் வரணுமா?"

"ஆமா...கேஸ் டல்லடிக்கிற நேரத்தில நீதான் எனக்கு க்ளுகோஸ், விட்டமின், எல்லாமே..."

"அரை மணி நேரத்துக்கு முன்னாடி இந்தப் போன் வந்திருக்கக் கூடாதா?"

"ஏன் என்ன விஷயம்?"

"அரைமணி நேரத்துக்கு முன்னாடித்தான் மொட்டை மாடி பூராவும் துணியைப் பரப்பி வடாம் பிழிச்சிட்டு வந்தேன்."

"நீயும் உன்னோட வடாமும்! நாம மும்பையிலிருந்து திரும்பி வர்ற வரைக்கும் சென்னையில இருக்கிற எல்லா காக்கா- குருவிக்கும் நம்ம வீட்டு மொட்டை மாடிதான் டைனிங்டேபிள். நீ போய் ஜர்ணிக்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பண்ணு. நான் ஏர் டிக்கெட்டுக்கு ட்ரை பண்றேன்."

சொல்லிக் கொண்டே டெலிபோனை நோக்கிப் போனான் விவேக்.

கமிஷனர் விஷ்ணுவர்தன் டெலக்ஸ் பிரிவிலும், வயர்லெஸ் பிரிவிலும் சுறுசுறுப்பாய் இருந்தார். டெலிபிரிண்டர்கள் ஓயாமல் தடதடத்து- 'நாட் யெட் ட்ரேஸ்டு' என்னும் வாக்கியத்தை திரும்பத் திரும்பப் பேப்பர்களில் ஒற்றியெடுத்துக் கொண்டிருந்தது. நெற்றியிலும் வழுக்கையிலும் அரும்புகின்ற வியர்வையை- கர்ச்சீப்பால் அழித்துக் கொண்டே- மைக்ரோ போனில் இந்தியிலும் மராட்டியிலும் கரகரத்துக் கொண்டிருந்தார்கள்.

க்ரைம் பிராஞ்ச் பிஜிலென்ஸ் பிரிவு மூத்த அதிகாரியான வர்மா, பைக்கில் வந்து இறங்கி- அடுத்த நிமிஷத்தின் ஆரம்பத்தில்- கமிஷனரின் முன்பு போய் சல்யூட்டோடு நின்றார்.

"எஸ்..."

"மிஸ்டர் விவேக்கை போன்ல கான்டாக்ட் பண்ணினேன் ஸார்."

"குட்....தகவல் கொடுத்துட்டீங்களா?"

"கொடுத்துட்டேன் ஸா...ர்"

"என்ன சொன்னார்...."

"ஆறு மணி ஃபிளைட்ல புறப்பட்டு வர்றதா சொல்லியிருக்கார்."

"இது ஹெவி கான்ஃபிடென்ஷியல்ன்னு சொன்னீங்களா?"

"சொல்லியிருக்கேன் ஸார். அவரையும் அவரோட மனைவியையும் வேறு பேர்ல டிக்கெட் எடுத்து ஜர்ணி பண்ணச் சொல்லியிருக்கேன்."

"குட்! மிஸ்டர் வர்மா, டிபார்ட்மெண்ட்ல நீங்க யாரையும் நம்பாதீங்க.... விவேக்கை ஏர்போட்டிலிருந்து கூட்டிக்கிட்டு வர்ற பொறுப்பை நீங்களே ஏத்துக்குங்க. அவரை ஹோட்டல் ஒபராய் ஷெர்டன்ல தங்க வெச்சுட்டு என்னை போன்ல கான்டாக்ட் பண்ணுங்க."

"எஸ்....ஸார்..."

"அப்புறம் உங்ககிட்டே இன்னொரு தகவல் சேகரிக்கச் சொல்லியிருந்தேன்."

"செவர்லே கார்ஸ் பத்தின விவரம்?"

"அதேதான்."

"ஆர்.டி.ஓ.வை கான்டாக்ட் பண்ணியதில் மும்பை சிடியில் மட்டும் ஆயிரத்து நூற்றி அறுபது செவர்லே கார்கள் இருப்பதாகத் தகவல். இதில் பாதி எண்ணிக்கை அரசாங்கத்துக்குச் சொந்தமானது. மிஸ்டர்ஸ் வெளிநாட்டு தூதரகங்களுக்குச் சொந்தமான கார்கள்."

கமிஷனர் விஷ்ணுவர்தன் தாடையை தேய்த்துக் கொண்டே சொன்னார்.

"செவர்லே கார் யார்கிட்டே இருந்தாலும் சரி... அவங்களைப் பத்தின முழு விவரம் எனக்கு வேணும். மிஸ்டர் விவேக் இங்கே வந்தாலும் இந்த விவரங்களைத்தான் கேட்பார்."

"எஸ்....ஸார்..." வர்மா மறுபடியும் சல்யூட் ஒன்றை பதித்துவிட்டு வெளியே நிறுத்தப்பட்டிருந்த தன் பைக்கை நோக்கி நகர- கமிஷனர் திரும்பி தன்னுடைய அறையை நோக்கி நடந்தார்.

(குறி தொடரும்)

# ஆறுமனமே ஆறு!

## சந்தேகக் கோடு சந்தோசக் கேடு-02

அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த மகேஸ்வரன் தனது சட்டையின் மேல் இரண்டு பொத்தான்களைக் கழற்றிவிட்டுக் காற்றாடியைப் பார்த்தார். மகேஸ்வரனுக்கு உடம்பு முழுவதும் வியர்த்தது. காற்றாடி வேகமாகச் சுற்றியும் மகேஸ்வரனுக்கு வியர்த்துக்கொண்டேயிருந்தது. கடுமையாக யோசிக்கின்றார் என்பது தெரிந்தது. தலையைக் கையிலே தாங்கியவாறு தரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்



தார். "மகேஸ்வரன்! என் முகத்தைப் பார்த்துக் கதையுங்கள்" என்றேன். நிமிர்ந்த மகேஸ்வரனின் கண்கள் கலங்கியிருந்தன. நான் ஒரு உண்மையைக் கூறினேன். "40-50 வயதுக் காலம் மனித வாழ்க்கையில் முக்கியமானது. திருமணமான பெண்களும் ஆண்களும் இவ் வயதில் ஒருவரை ஒருவர் சந்தேகப்படுவது இயல்பானது. மயிர்கள் நரைக்கத் தொடங்கும். வாலைப் பருவத்திலிருந்த தெம்பு குறையும். குழந்தைகள் வளர்ந்து வீட்டதால் குடும்ப உறவின் இடைவெளி அதிகமாகும். இவை மனங்களைக் குழப்புவதால் ஒருவரை ஒருவர் சந்தேகப்படுவார்கள். இது ஒரு சபலமே."

அமைதியாக இருந்த மகேஸ்வரன் "எனக்கு இப்போது என் வீட்டுக்குப் போக வேண்டும் போலிருக்கிறது. மனைவியையும் குழந்தைகளையும் பாக்க வேண்டும் போலிருக்கிறது" என்றார். "நாளைக்கு மனைவியையும் குழந்தைகளையும் அழைத்து வாருங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். மகேஸ்வரன் விடைபெற்றார்.

அடுத்த நாள் மகேஸ்வரனும் மனைவியும் குழந்தைகளும் வந்திருந்தனர். அழகாகவும், அடக்கமாகவும், குடும்பப் பாங்குடனும் காணப்பட்ட மகேஸ்வரனின் மனைவி சந்தோசமாகக் காணப்பட்டாள். சற்று வெட்கப்பட்டவளாகவும் காணப்பட்டாள். முதலில் மகேஸ்வரனை மட்டும் என் அறையினுள் அழைத்துக் கதைத்தேன். நேற்று இருந்ததிலும் பார்க்கச் சந்தோசமாக இருந்தார். தான் அவசரப்பட்டு மனைவியை அடித்துவிட்டதாக ஏற்றுக் கொண்டார். "சரி மகேஸ்வரன்! நேற்று நீங்கள் வீட்டுக்குச் சென்று மனைவியிடம் என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டேன். "நான் வீட்டு வாசலில் சென்றவுடன் என்னைக் கட்டிப்பிடித்து அழத் தொடங்கிவிட்டாள். பிள்ளைகளும் அழத் தொடங்கிவிட்டார்கள். என்னால் தாங்க முடியவில்லை. நானும் அழுதுவிட்டேன். என் மனைவியிடம் மன்னிப்புக் கேட்டேன். பின்பு வீடு திருவிழாக் கோலமாகிவிட்டது. இந்த மூன்று நாள் பிரிவில் அவள் நன்றாக இளைத்துவிட்டாள்."

"சரி மகேஸ்வரன்! சந்தோசம். உங்கள் மனைவியின் பெயரைச் சொல்லுங்கள்." "மகேஸ்வரி" என்றார். "அடேயப்பா! பெயரிலும் என்ன பொருத்தம். மகேஸ்வரன்! உங்கள் மனைவியிடம் நான் கொஞ்சம் தனியாகப் பேச வேண்டும். உங்கள் விருப்பம் எப்படி?" என்று கேட்டேன். "தாராளமாகக் கதையுங்கள். நான் அனுப்பி வைக்கிறேன்" என்று சொல்லி எழுந்து சென்று மனைவியைக் கூட்டி வந்தார்.

"மகேஸ்வரி! ஐயா உன்னுடன் தனியாகக் கதைக்க வேண்டுமாம். கதைத்துவிட்டு வா வெளியே குழந்தைகளுடன் இருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார். "மகேஸ்வரி! இப்போது சந்தோசமாக இருக்கிறீர்களா?" என்று கேட்டேன். "ஓம்" என்று தலையாட்டினாள்.

"அந்த ரவி என்ற பொடியன் யார்?" என்று கேட்டேன். "அவன் வவுனியா. வயது 17. அவன் பெற்றோருடன் எங்கள் பக்கத்து வீட்டில்தான் இருக்கிறான். என்னுடைய கணவன் மீன் எடுப்பதற்காக இரவு 10 மணிக்கெல்லாம் திண்டுக்கல் மாக்கட் சென்று விடுவார். குழந்தைகளுடன் நான் தனியே இருப்பதால் ரவி என் வீட்டில் இரவில் உதவிக்காக வந்து படுப்பான். எனது கணவர்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தார். கடைசியாகப் பார்த்தால் ரவியையும் என்னையும் சேர்த்து முகாமிலுள்ள சிலர் கதை கட்டிவிட்டார்கள். இவரும் நம்பிக்கொண்டு என்னை அடித்துவிட்டார். நல்லவேளை உங்கள் முயற்சியால் மீண்டும் எங்கள் குடும்பத்தில் சந்தோசம் கிடைத்து விட்டது" என்று முடித்தாள்.

"மகேஸ்வரி! பல முகாம்களில் இப்படியான பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ரவி போன்ற இளம் வயதுப் பொடியங்கள் பாலியல் தேடல்கள், பாலியல் சேட்டைகள், பாலியல் கதைகளைச் சேர்ந்து கதைப்பது போன்ற வயதுக்குள்ள நடவடிக்கைகளில் கூடிய நாட்டம் செலுத்துவார்கள். இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நம் நெருங்கிய உறவினர்களைத் தவிர

**எஸ்.பி.லெம்பட் வங்காலை**

வேறு பொடியங்களை அதுவும் பாலியல் வயதுள்ள பொடியங்களை உதவிக்குத் தங்க வைப்பது முகாம் வாழ்க்கையைப் பொறுத்தவரை ஆபத்தானது. நடக்காத ஒன்றை நடந்த தாகக் கூறும் இவ் வயது அதைப் பெருமையாகக் கூடக் கருதும். நான் வெளியில் விசாரணை செய்த வகையில் ரவியை அவனுடன் சேர்ந்து திரியும் பொடியங்கள் பகிடிவதை செய்துள்ளார்கள் என்பதும், நீ மகேஸ்வரியைத் தொட்டுப் பார்த்தாயா? படுக்கும் போது காலைத் தூக்கிப் போட்டாயா? என்றும், பால் குடித்தாயா? என்றும் கேட்டிருக்கிறார்கள். இவன் தப்பிக்க முடியாமல் ஏதாவது சொல்லியிருக்கலாம். இதுதான் முகாமில் வதந்தியாகப் பரவியுள்ளது. இவை அனைத்தையும் ஒரு கெட்ட கனவாக நினைத்து மறந்துவிடுங்கள்" என்று முடித்தேன். மகேஸ்வரி பெருமூச்சு விட்டாள். "சரி மகேஸ்வரி! எல்லாம் நன்மைக்குத்தான். உங்கள் சந்தோசமான வாழ்க்கைக்கு என் வாழ்த்துக்கள்." பின் மகேஸ்வரனையும் குழந்தைகளையும் என் அறைக்கு அழைத்தேன். குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினேன். மகேஸ்வரனும், மகேஸ்வரியும் சந்தோசமாக விடை பெற்றுச் சென்றனர்.

தொடர்ந்து வரும்...

# பார்த்த ஞாபகம் இல்லையோ...? 22



இப் படத்தைப் பாருங்கள். இவ்விருவரும் யார் என்பதை ஊகிப்பது சற்றுச் சிரமமாக இருக்கலாம். ஏராளமான இரசிகர்களை மகிழ்வித்த - ஈ.வி.சரோஜாவும், எம்.ஜி.ஆரும்! 'என் தங்கை' என்ற படம் 1952-இல் வெளிவந்தது. அண்ணன், தங்கை பாசத்தை அடிப்படையாகக் கொண்ட கதை. விழியிழந்த தங்கையாக ஈ.வி.சரோஜா-அண்ணனாக எம்.ஜி.ஆர். முதலில் இது நாடகமாக மேடையேறியபோது அதில் அண்ணனாக நடித்தவர் சிவாஜி கனேசன்; படத்திலோ எம்.ஜி..ஆர். சோகரசம் மிகுந்த படம் 'என் தங்கை'. ஆறு மரணங்களைப் பொறுத்துச் சகித்தும் தன் தங்கைக்காக வாழ்கிறான் அண்ணன். அண்ணனுக்குப் பாரமாக வாழக்கூடாது எனக் கருதித் தங்கை தற்கொலை செய்துகொள்கிறாள். அவளது பிணத்தைச் சுமந்தபடி அண்ணன் கடலுக்குள் இறங்கி விடுகிறான். இதில் இருவருமே பாத்திரங்களோடு பாத்திரங்களாக மாறி முழு ஈடுபாட்டுடன் நடித்தனர். ஈ.வி. சரோஜா நடனம் ஆடுவதில் சிறந்து விளங்கினார். எம்.ஜி.ஆர். நடித்த மதுரைவீரனில் அவர் "வாங்க மச்சான் வாங்க" என்று பாடி நடித்த காட்சி நினைவில் நிற்கக் கூடியது. ஸ்ரீதரின் 'அமரதீபம்', 'கொடுத்து வைத்தவன்' போன்ற பல்வேறு படங்களிலும் நடித்து ஓய்வுபெற்ற ஒரு நடிகையாக வாழ்கிறார்.



இது திரைப்படத்தில் வந்த ஒரு காட்சியல்ல. ஒரு திரைப்படத்துக்கு ஒரு பாடல் பதிவு செய்யப்பட்டபோது எடுத்த படம். பிரபல இசையமைப்பாளர் கே.வி. மகாதேவன் பாடல் சொல்லிக் கொடுக்கிறார், "அடிமைப் பெண்" படத்திற்காக பாடுபவர் வேறுயாருமல்ல, இன்றைய தமிழக முதலமைச்சர் அன்றைய நடிகை ஜெயலலிதா!



இவர் ராஜசுலோசனா. தமிழ்த் திரையுலகில் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றவர். தமிழ் சினிமாத்துறையை நான்கு கட்டங்களாக ஒரு பேச்சுக்கு, வகுத்துக் கொண்டால் மூன்றாவது கட்டத்தின் முதற் கூறைச் சேர்ந்தவர். நறுக்கெனப் பேசி வில்லியாக மிகத் தத்ரூபமாக நடித்துப் புகழ் பெற்றவர். ஏ.பி. நாகராஜனின் 'மாங்கல்யம்', 'நல்ல தங்கை' போன்ற பல படங்களிலும் நடித்த ராஜசுலோசனா மூத்த நடிகர்களான எம்.ஜி. ஆர்., சிவாஜி கனேசன் ஆகியோருடன் நடித்த பெருமைக்குரியவர். 'நல்லவன் வாழ்வான்', 'குலேபகாவலி', 'அரசிளங்குமரி' போன்ற படங்களில் எம்.ஜி.ஆரோடும், ரங்கோன் ராதாவில் சிவாஜி கனேசனுடனும் 'ஆசை' என்ற படத்தில் ஜெமினி கனேசன், பத்மினியுடனும் 'வாழ்வில் ஒரு நாள்' என்ற படத்தில் நடிகர் ஸ்ரீராமின் காதலியாகவும் நடித்து, தனது பெயரை நிலை நிறுத்திக் கொண்டவர் ராஜசுலோசனா.



இவர் மூத்த நடிகர் ஒருவரின் அண்ணன். எம்.ஜி. சக்கரபாணி. இவரது தம்பியே எம்.ஜி.ஆர். இவர் வில்லன் நடிப்புக்குப் பெயர் பெற்றவர். 'என் தங்கை', 'அரச கட்டளை', 'ராணி சம்யுக்தா' போன்ற படங்களில் நடித்த சக்கரபாணி ராஜா ராணி படங்களில், தனது கம்பீரத் தோற்றம் காரணமாக, மிகவும் சிறப்பாகத் தோன்றி அனாயாசமாக நடித்து பாராட்டைப் பெற்றவர். எம்.என். நம்பியார், பி.எஸ். வீரப்பா, எஸ்.ஏ. அசோகன் போன்றோர் எம்.ஜி.சக்கரபாணி வழிவந்த வில்லன்களாவர்.

**சென்ற இதழில் வி.வி. சடகோபனின் படமும் பி.எஸ். ஸ்ரீநிவாசராவின் படமும் இடம் மாறி பிரசுரிக்கப்பட்டுவிட்டன. என்பதை வாசகர்கள் குறித்துக்கொள்ள வேண்டுகிறோம்.**

வாசகர்களுக்கு:
இந்தப் பகுதியில் பிரசுரிப்பதற்கு படங்கள் எவையும் இருப்பின் அவை குறித்த விபரங்களுடன் அனுப்பிவைத்தால் அவை ஏற்கனவே பிரசுரிக்கப்படாமல் இருந்தால், பிரசுரிக்கப்படும்.
'காற்றுவாக்கில்' த.பெ.இல. 1772, கொழும்பு.

# காற்றுவாக்கில்...

### தமிழ்ச் சேவை

கூட்டுத்தாபனங்கள், நியம சபைகள், மற்றும் மாகாண நிர்வாக சேவை உட்பட அசராங்க சேவைக்குப் புதியவர்கள் நியமிக்கப்படக் கூடாது என்று திறைசேரி தடை விதித்துள்ளது. இன்றைய சூழ்நிலையில் இது வரவேற்கப்படவேண்டிய ஒரு தீர்மானம் என்பதை எவரும் ஒப்புக் கொள்வர். என்றாலும் இதற்கு விதிவிலக்காக கணிக்கப்பட வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணத்துக்கு ஒன்று - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில், முக்கியமாகத் தமிழ் ஒலிபரப்புப் பகுதியை எடுத்துக் கொண்டால், புதிய ஆட்சேர்ப்பு பல்வேறு காரணங்களுக்காக கிரமமாக நடந்ததில்லை. தமிழ் இளைஞர்களின் போராட்டம் ஆரம்பிக்கப் பட்டபின், பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி ஆட்சேர்ப்பு அவ்வப்போது தடைசெய்யப்பட்டது. 1986-மே மாதத்தில் தமிழ் உத்தியோகத்தர்கள் யாவரும் "அவர்களின் பாதுகாப்புக் கருதி" கட்டாய லீவில் அனுப்பப்பட்டார்கள் என்பது தமிழ் ஒலிபரப்புத் துறையில் கறைபடிந்த ஓர் அத்தியாயம். பின்னர் ஜுலை மாதத்தில் அவர்கள் திரும்ப வேலைக்கு அழைக்கப்பட்டார்கள் என்பது வேறு விஷயம். அத்துடன், 1983-இன் பின் பல சிறந்த ஒலிபரப்பாளர்கள் தமது உத்தியோகத்தைக் கைவிட்டு, விரும்பியோ விரும்பாமலோ, புலம் பெயர்ந்து சென்று விட்டனர். இத்தகைய காரணங்களினால் தமிழ் சேவையில் பாரிய இடைவெளி ஒன்று ஏற்பட்டது. 1994-ம் ஆண்டின் பின் நிலைமையில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டிருந்தாலும் பூரண திருப்தி ஏற்படக் கூடியநிலையில் கருமங்கள் நடந்ததில்லை. இத்தகைய செயற்பாடுகளின் தாக்கத்தினை இப்பொழுது உணரக் கூடியதாக உள்ளது. ஏறத்தாள 150 ஊழியர்கள் வரை இருந்த தமிழ்ச் சேவையில் விரல் விட்டு எண்ணக் கூடிய எண்ணிக்கையினரே இன்று பணி புரிகின்றனர். கூட்டுத்தாபனம் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கவேண்டும் என்று கூறி நட்டஈடு வழங்கி பல திறமைசாலிகளை வயது வருமுன் ஓய்வு பெற வைத்து விட்டனர். அதுமட்டுமல்ல 55-வயதுக்கு மேல் சேவை நீடிப்பு இல்லை என்ற நிலையில் அனுபவசாலிகள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இதனால் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழ்ச் சேவையே. இன்று தமிழ்ச் சேவைக்கென ஒரு பணிப்பாளரே இல்லை. ஏன் அப்பதவிக்கு அடுத்த நிலையில் உள்ள இயல் இசை நாடக கட்டுப்பாட்டாளர்கள் கூட இல்லை. வெறும் சேவை மூப்பு அடிப்படையில் சேவையில் உள்ளவர்களைக் கொண்டு இப்பதவிகளை நிரப்புவது ஒரு தரமான சேவையை நடத்த உதவப் போவதில்லை என்றே கருதப்படுகிறது. அப்படிச் செய்யவும் கடந்த காலத்தில் ஆட்சேர்ப்பு இல்லாத காரணத்தால் சரியான தெரிவைச் செய்யக் கூடியவாறு போதிய எண்ணிக்கையினர் இல்லை. இதே காரணத்தால் தகுதியுள்ள புதியவர்களையாவது வெளியிலிருந்து கொண்டுவர முடியுமா?அதற்கும் தடை. ஆக, இந்த அபாயத்தை உணர்ந்து செயலில் இறங்க எத்தனை பேர் இருக்கிறார்கள்? அரசியல்வாதிகளைத் தான் சொல்கிறேன்!

### மரண அறிவித்தல்

இலங்கை வானொலியின் மரண அறிவித்தலுக்குரிய தகவல்களை பிரதான செய்தியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமா? அப்படியானால் பாராளுமன்றத்தில் கவிதை கூறும் ஒரு குறிப்பிட்ட முக்கிய அரசியல் பிரமுகரைப் பிடித்தால் சரிவரும் என்கிறார்கள் அங்குள்ள ஊழியர்கள் சிலர். "மரணித்தவரின் மகன் அரசில் ஒரு முக்கியமான பதவி வகிப்பவர்தான். ஆனால் அவரது தாயார் நன்கு தெரிந்த ஒரு முக்கியஸ்தர் அல்லவே... பிரதான செய்தி அறிக்கையில் இடம்பெற. அதனால் அப்படிச் செய்ய....." என்று அந்த செய்தியாளர் குறிப்பிட்ட போது, அந்த அரசியல் பிரமுகருக்கு வந்ததே கோபம். "அந்த ஊழியரை வெளியேற்றிவிடுங்கள்" என்றாராம். அதிகார மமதையைக் காண்பிக்க போயும் போயும் ஒரு சாதாரண ஊழியர்தானா கிடைத்தார்?

### அமைச்சருக்குத் தேவை ஒரு வானொலி

தனியார் வானொலி நிறுவனம் ஒன்றைக் கொள்வனவு செய்ய அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் முயன்று தோல்வி கண்டிருப்பதாகக் கேள்வி. தற்போதைய ஊடகங்கள் தமக்கு போதிய இடமளிக்காத காரணத்தினாலேயே அந்த அமைச்சர் தனக்கென ஒரு வானொலியாவது இருக்க வேண்டும் என்ற அங்கலாய்ப்பிலேயே ஆங்கில அகர வரிசையிலான அந்த வானொலி நிறுவனத்தை அணுகினாராம். இது சென்ற அரசாங்கத்தினருக்கு கிட்டியதாக அப்பொழுது கருதப்பட்ட ஒரு வானொலியாகும்.

### தென்றல் வந்து வீசாதோ!

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன 'தென்றல்' அடுத்த மாதம் தொடக்கம் இரவு பதினொரு மணிவரை வீசப் போகிறதாம். இப்படி பல முறைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டும் இதுவரை நடைபெறவில்லை. இம் முறையேனும் சொன்னபடி நடந்தால் நல்லதுதான். ஆயினும் இதை வேறொரு கண்ணோட்டத்திலும்


**காற்றாடி**

பார்க்க வேண்டி உள்ளது. இரவு 11.15 வரை இடம் பெற்று வந்த தமிழ்த் தேசிய சேவையை 10.30 வரை குறைத்துவிட்டு இரவு 10 மணி வரை நடைபெற்ற தமிழ் வர்த்தக சேவையை 11 மணிவரை நீடித்து ஒலிபரப்ப எண்ணியிருப்பதற்கு உள் நோக்கம் எதுவும் இருக்கலாமா? தமிழ் மக்களின் மொழி, பாரம்பரிய கலை, கலாசார நிகழ்ச்சிகளை அள்ளி வழங்கி 'கலைக் கோயில்' எனப் பெருமை பெற்ற காலம் போய், அந்த நிகழ்ச்சிகளுக்குப் பழக்கப்பட்ட காதுகளுக்கு 'பெப்பே' காட்டுவது தமிழ்ச் சமூகத்தின் கலாசார சீரழிவை நோக்கியதாக அமைகிறதென்றே கொள்ள வேண்டியுள்ளது. இதன் தாற்பரியத்தை உணர்ந்து செயற்பட வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட சகலரையும் சார்ந்ததாகும். ●


எங்கள் நாட்டைக் கட்டியெழுப்பிய பலம்

லங்கா சிமெந்து



லங்கா சிமெண்ட் லிமிட்டட்.
இல. 130, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02.
தொலைபேசி: 01-541358, 01-447746, 01-342063 தொ. நகல்: 447541 ஈ-மேல்: lclcemen@sltnet.lk
தொழிற்சாலை: கீரிமலை வீதி, காங்கேசன்துறை.
Sales Hotlines: 077 712277, 077 712288, 077 712299

## ஸ்போர்ட்ஸ்

# புதிய வீரர்களுடன் இலங்கை அணி தென்னாபிரிக்கா பயணம்!



தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும் தென்னாபிரிக்கா அணிக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நவம்பர் 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

2வது டெஸ்ட் போட்டி 15 ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை நடைபெறும்.

இந்தப் போட்டித் தொடரின் போது 5 ஒரு நாள் போட்டிகள் நடைபெறவுள்ளன. அவை முறையே நவம்பர் 27, 29, டிசம்பர் 1, 4, 6 ஆகிய திகதிகளில் நடைபெறுகின்றன.

இதில் 3 இரவு பகல் போட்டிகளும் அடங்கும்.

உலகின் மிகச் சிறந்த கிரிக்கெட் அணிகளில் ஒன்றான தென்னாபிரிக்காவுடன் இலங்கை அணி மோதும் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக அமையுமென விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அணியின் தேர்வு தொடர்பாகக் கடந்த நாட்களில் கடும் சர்ச்சைகள் ஏற்பட்டதுடன் கிரிக்கெட் தேர்வுக் குழுவுக்கும் அணியின் தலைவர் சனத் ஜெயசூரியாவுக்குமிடையில் கருத்து முரண்பாடுகள் நிலவின.

17 பேர் கொண்ட இலங்கை அணியில் புதிய வீரர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் விபரம் வருமாறு: சனத் ஜெயசூரியா, மாவன் அத்தப்பத்து, குமார்சங்கக்கார, மகெல ஜெயவர்த்தன, ஹசான் திலகரத்ன, ரசல் ஆனோல்ட், ஜெகான் முபாறக், முத்தையா முரளிதரன், ஹசந்த பெர்னாண்டோ, சமிந்த வாஸ், தில்ஹாற பெர்னான்டோ, சுஜீவ டி சில்வா, தரங்க லக்ஷித, திலீன துஷார, சமிள ஹமகே, பிரசாந் ஜெயவர்த்தன, ருஷிர பெரேரா, ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

தென்னாபிரிக்கா ஏ அணியுடனான போட்டி 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

## இந்திய அணிக்கு வெற்றி!

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் முதலிரண்டு போட்டிகளிலும் அபாரமான வெற்றிகளை ஈட்டி இந்திய அணி போட்டித் தொடரை வென்றுள்ளது.

# இலக்கிய நயம் தருவது முழடில்யன்

## விரிந்து நீரில் அலைந்த கருங்குழல்

"ஹா...எவ்வளவு அழகானது உன்னுடைய ஊர்!" என்று வியப்பை அடக்கமாட்டாமல் கூவினாள் திவ்யா.

"ஆமாம். நீ வந்த பிறகு அது மிகைப்பட்டிருக்கிறது"என்றான் அந்த ஒற்றையடிப் பாதையில் அவள் பின்னால் வந்து கொண்டிருந்த மாதவன்.

அவன் சொல்லியதைக் காதில் வாங்காதவளாக, பிரமாண்டமாய் நிமிர்ந்து நின்ற மலையையும், தூய வெண்ணிறப் பாலாக அங்கே வழிந்து கொண்டிருந்த அருவியையும், அது கீழே குதித்துக் கற்பாறைகளின் வெடிப்புகளிடையே வளைந்தோடும் அழகையும், அந்தத் தன்மையை உண்டு அருகெல்லாம் சிரித்துக் கூத்தாடி நின்ற மலர்களையும் விழிகள் விரியப் பார்த்தபடி நடந்தாள் திவ்யா. கைகளிரண்டாலும் தன் கன்னங்களை ஏந்திப் பிடித்தபடி நெளிந்தோடிய ஆற்றின் பளிங்குத் தூய்மையை இரசித்துப் பரவசத்தில் சிலிர்த்தவள், "இறங்கி நீராடலாமா?" என்று கெஞ்சுவது போல் கேட்டாள்.

"மாற்றுடைகள் கொண்டு வந்திருக்கிறாயா?"

"இதோ என் பைக்குள் இருக்கின்றன."

"அப்படியானால் சரி" என்று சொல்லிவிட்டு அருகிலிருந்த பாறையில் ஏறி அமர்ந்து கொண்டான் மாதவன்.

"நீ வரவில்லையா?"

"இல்லை"

அவள் பையை அவனருகே வைத்துவிட்டு, பாய்ந்து சென்று நீரில் குதித்தாள். இவன் "கவனம்" என்று உரத்துச் சொன்னது அவளுக்குக் கேட்காத அளவுக்கு நீரினுள்ளே மறைந்து அவனது சில நிமிட நேரப் பதைப்புக்குப் பின், குதித்த இடத்திற்குச் சற்றுத் தள்ளித் தலையை நிமிர்த்தினாள் திவ்யா.

அடுத்த சில நிமிடங்களுக்கு, ஒரு தேர்ந்த நீச்சல்காரி என்று அவள் நிரூபித்த அழகை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான் மாதவன்.

நீரில் நனைந்துவிட்ட வெண்ணிறச் சேலை, நீரினுள் மறைந்திருந்த இடங்களைத் தவிர மற்ற இடங்களில் அவளுடலோடு ஒட்டி, அவளுடலை வெண்பளிங்கினால் செய்த தேவதைச் சிலையெனப் பிரமை தோன்ற வைத்தது.

அவள் இடையளவுக்கு மட்டுமே ஆறு ஓடியது.

நீரில் மல்லாந்து மிதந்து கிடந்த அவளது முன்னெழில்கள் உடையோடு ஒட்டிப் பளபளத்துத் தெரிந்தன. உயிர்களின் இந்த நீண்ட பரிணாம வளர்ச்சியில், அனைத்து விலங்கினங்களிலும், மனிதப் பெண்ணின் மார்பகங்கள் மட்டும் எப்படி இத்தனை அழகாக உருப் பெற்றது? இவ்வளவு அற்புத அழகோடு படைக்கப்பட்டிருப்பது மானுட இனத்திற்கேயுரிய உன்னதப் பெருமையல்லவா...! என்றவாறாக மாதவன் சிந்தனையோடியது.

இவன் பார்வையைக் கண்டதும், சட்டென நீருக்குள் தாழ்ந்து கொண்ட திவ்யா முகத்தை மட்டும் வெளியே வைத்துக் கொண்டு ஏனைய அங்கங்களை நீருக்குள் மறைத்துக் கொண்டாள். விரிந்து நீரில் அலைந்த அவள் கருங்குழலைத் தனது கையொன்றால் அலசி எடுத்துக் கழுத்துப்புறமாகச் சுற்றி முன்புறமாகப் போட்டுக் கொண்டு எழுந்தாள். கரிய அலைகளென அடர்ந்திருந்த கூந்தல் அவள் மார்புகளை முழுமையாகவே மறைத்திருந்தன. அப்போதும் சில இழைகள் பிரிய நேரிட்டதில் அந்தத் திரட்சியின் வெண்மை இடையிடையே தெரிந்து அவனை நிலை தடுமாற வைத்தது.

இப்போது அவள் தன் முன்னெழில்களை மறைக்கும் முயற்சியில் நீரின் மீது குப்புறப் படுத்து



நீந்த ஆரம்பித்தாள்.

அவள் திண்ணிய பின்னெழில்கள் நீர்த்தாமரைகளைப் போல் எழுந்து காட்சியளித்தன. அவற்றுக்கு ஆதரவு தந்த நுண்ணிய இடையை அவள் வளைத்து வளைத்து நீராடவே அந்த வளைப்பின் விளைவாகப் பலவாறு அசைந்த அவள் முதுகுப்புறமும் இடைக்குக் கீழ் காணப்பட்ட லாவண்யமும் பருவத்தால் செழித்த காலின் மேற் பகுதிகளும், கொலுசணிந்த கணுக்கால்களும்... இயற்கையின் அற்புத சிருஷ்டியொன்று ஆற்றில் இறங்கிவிட்ட பிரமையை ஏற்படுத்தின.

அருவியும் அழகியும் பல நெளிவுகளோடும் சுழிவுகளோடும் காணப்பட்டாலும், மயக்கும் ஆற்றல் அவளது வளைவுகளுக்கே அதிகம் என்று மாதவன் நினைத்தான்.

அவன் எண்ண அலைகளைத் தடை செய்வது போன்று திவ்யா நீராடி முடித்துக் கரையேறினாள்.

ஈரம் சொட்டச் சொட்ட மோகனச் சிலை எழுந்து வருவது போல ஒயிலாக அசைந்து வந்த அவளைப் பார்த்துக் கண்களும் மனமும் நடுங்கின மாதவனுக்கு.

நேர்ப் பார்வையை அநாகரிகம் என்று மனம் சொன்னாலும், அதுவே அந்த மெல்லிய ஆடைகளுக்கும், ஈரத்தில் நனைந்து அங்கங்களோடு இழைந்துவிட்ட தன்மைக்கும் நன்றி கூறிக்கொண்டும் மகிழ்ந்தது.

பளிங்கும் கனவும் குழைத்துச் செய்யப்பட்டிருந்தது போல அசைந்த முன்னெழில்களையும், வீணையின் குடங்களெனப் பிரமிப்பூட்டிய பின்னழகுகளையும் கண்டு சொல்லொணாத் தவிப்புக்குள்ளானான் மாதவன்.

கடைக்கண் வீச்சில் இவன் அவஸ்தைகளைக் கண்டு நடந்தவளின் உதடுகளில், அவளையே உருக்கி ஒரு தேன் சொட்டாக வைத்தது போல புன்னகை!

அவள் மை விழிகள் அவன் இதயத்திற்குள்ளிருந்து எட்டிப் பார்ப்பது போல உணர்ந்தான். அவனைக் கடந்து மறைகையில் அவள் செவ்விய உதடுகளில் சிரிப்பு ஒன்று படர்ந்து கிடந்ததைப் பார்த்தான்.

ஆடை மாற்றுவதற்காக அவள் புதர் மறைவுக்குச் செல்கிறாள் என்பது அவனை மேலும் அவஸ்தையில் நெளிய வைத்தது.

அவள் ஈர ஆடையை அவிழ்த்த போது ஏற்பட்ட சரசரவென்ற சத்தமும், அது முடிவில் 'சத்சத்' என்று மண்ணில் விழுந்தபோது ஏற்பட்ட ஒலியும் மாதவனைப் பெரும் சங்கடத்திற்குள்ளாக்கியது. மூச்சை இழுத்துப் பிடித்தபடி பாறையில் இருந்தான். புதரின் மறைவில் அவளை மூடியிருந்த அந்த மெல்லிய ஆடையும் அவள் காலடியில் விழுந்தபின், உள்ளேயிருக்கும் மோகனரூபம் எப்படியிருக்கும் என்பதைப் புறக் கண்ணால் பார்க்காவிட்டாலும் அகக் கண்ணால் பார்த்த மாதவன், அதற்கு மேலும் அமர்ந்திருக்க மாட்டாமல் பாறையை விட்டு எழுந்தான்.

அவள் தலையைத் துவட்டி உதறிய போது ஏற்பட்ட ஒலியும், குழலிலிருந்த வாசனைத் தைலத்தின் சுகந்தமும் அவனை வேறு உலகத்திற்கு இட்டுச் சென்றன.

தனக்கு எதிரே இருந்த செடிகளுக்கு அப்பால் ஆடையெதுவுமின்றி ஓர் அழகி நிற்கிறாள் என்பது அவனைச் சித்திரவதைக்குள்ளாக்கியதென்றால், இன்னும் சில நொடிகளில் அவள் புதிய சேலை ஒன்றைச் சுற்றிக் கொண்டு எதிரே வந்து நிற்கப் போகிறாள் என்பது, எதற்கும் அசையாத அவனுடலையும் சிறிது நடுங்க வைத்தது.

நீண்ட தோள்களையுடைய ஆனால் தன் ஒரு கைப் பிடிக்குள் அடங்கிவிடும் அவளது சிறிய உருவை நினைத்தான். தண்ணீரைப் போலவே தண்மையும் குளுமையும் கொண்ட அவளுடலின் மெல்லிய தன்மை, நெருப்பைப் போன்ற தன் வலிமையை எல்லாம் அழித்து வெற்றி கொண்டுவிட்ட விந்தையை வியந்தான்.

**மால்வரை இழி தரும்**
**தூவெள் அருவி**
**கல்முகைத் ததும்பும்**
**பன்மலர்ச் சாரல்**
**சிறுகுடிக் குறவன்**
**பெரும் தோள் குறுமகள்**
**நீர் ஓரன்ன சாயல்**
**தீ ஓரன்ன என்**
**உரன் அவித்தன்றே.**

(குறுந்தொகை: 95)

## சிந்தியா பதில்கள்

★ **அடுத்தவரைத் துன்புறுத்தி வேடிக்கை பார்ப்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

சி.கீதா, ஈச்சிலம்பற்று-04.

*அவர்கள் மனிதர்கள்தான் என்றால், மற்ற எல்லோரும்தான் வெட்கப்பட்டுக் கொள்ள வேண்டும்- தங்களை மனிதர்களாகச் சொல்லிக் கொள்ள.*

★ **இலங்கையின் எதிர்காலம் ரணிலின் கையிலா? சந்திரிகாவின் கையிலா? பிரபாகரனின் கையிலா?**

- ஆர். சஜீவன், அநுராதபுரம்.

*நீங்கள் இப்படிக் கைவிரித்து விட்டால், காப்பாற்ற யார் கையாலும் முடியாது.*

★ **நடிகர்களின் காவேரிப் போராட்டத்திற்கு கமலும் சிம்ரனும் ஒரே காரிலேயே வந்தார்களாமே?**

ஜே.முகுந்தகுமார், நெளுக்குளம்.

*அடடா, மண்ணைக் குளிர வைக்க காவிரியில் தண்ணி வந்தால் என்ன, வராமல் போனால் என்ன, மனங் கிளுகிளுக்க இப்படிச் செய்தி வந்தது போதாதா!*

★ **இந்தக் காலக் காதல்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-கருப்பையா ஷர்மிளா, கெல்சி தோட்டம்.

*எல்லாக் காலத்திலும் போல கல்யாணம் என்று வரும்போதே சுற்றியிருக்கும் உலகம் கண்ணில் தெரிய வர, திகைப்படைந்து கொண்டிருக்கிறார்கள்.*

★ **உண்மையில் அப்துல் வஜாட்டைக் கடத்தியவர்கள் யார் சிந்தியா?**

-க.கமால்தீன், ஏறாவூர்-3.

*இப்படியான கடத்தல்கள், கொலைகளைச் செய்பவர்கள் யார் என்று அறிவதற்குப் பத்திரிகைகளை நம்பிப் பயனில்லை. இதற்கு நான் ஒரு வழி வைத்திருக்கிறேன். இன்றைக்கு, அரசாங்கமும் புலிகளும் அல்லாத வேறு யார் செய்தாலும் அவர்களைக் கண்டு பிடித்து மக்கள் முன் அம்பலப்படுத்தி விடக் கூடிய வல்லமையுடனேயே அந்த இரு தரப்பும் இருக்கிறது. அப்படிச் செய்யாமல் "சமாதானத்தை விரும்பாதவர்களின் வேலை" என்று சொல்வதோடு இந்தப் பிரச்சனையை அவர்கள் முடித்துவிட்டார்களானால், அதைப் புரிந்து கொண்டு நானும் பேசாமலிருந்து விடுகிறேன். உங்களைப் போல் திரும்பத் திரும்ப அதைப் பேசி சமாதான விரோதியாகிவிட எனக்கு விருப்பமில்லை.*

★ **இயக்குனரும் நடிகருமான அருண் பாண்டியனின் 'தேவன்' வெற்றிப் படத்தைத் தொடர்ந்து அவரது அடுத்த படம் என்ன?**

- களனியன், பலாங்கொடை.

*பாடகர் ஹரீஸ் ராகவேந்திரா கதாநாயகனாக நடிக்கும் 'விகடன்' படத்தைத் தயாரித்து இயக்கி வருகிறார். மிக அகன்ற மார்பு அளவையுடையவர் என்ற புகழை விட, அதிக புகழைப் பெற ஒரு சில திரைப்படங்கள் அதிகம் உதவும் என்று தெரிந்திருக்கிறார்.*



பூமிகா

★ **'வேண்டாம் ஆபத்து, அவஸ்தை' என்று சொன்னாலும் கேட்காத இந்த மனசை என்ன செய்வது சிந்தியா?**

-க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று 07.

*எல்லா மனங்களுக்குமுள்ள பொதுவான சில இயல்புகளை மாற்றுவது சரியான கஷ்டம்தான். லண்டன் நகரத்தின் ஒரு சிறு கடைக்காரர் பெரும் பரபரப்பை ஒருமுறை ஏற்படுத்தினார்.*

*அவருடைய கடையின் முன்புற ஷோக்கேஸை மேலிருந்து கீழ்வரை முழுவதுமாக ஒரு கறுப்புத் துணியால் மூடிவிட்டார். அந்தத் துணியின் நடுவில் ஒரு சிறு துவாரத்தை விட்டு, அதன் கீழே பெரிதாகப் பின்வருமாறு எழுதி வைத்தார்.*

*"கண்டிப்பாக யாரும் இந்தத் துவாரத்தினூடாக உள்ளே பார்க்கக் கூடாது!"*

*அவ்வளவுதான். அந்த வீதியின் போக்குவரத்தே ஸ்தம்பிக்குமளவிற்குச் சனம் கூடிவிட்டது. எல்லோரும் அந்தத் துவாரத்தினூடாகப் பார்க்க முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்.*

*இத்தனைக்கும் அந்த ஷோக்கேஸினுள் தொங்கவிடப்பட்டிருந்தவை விலை குறைந்த சில ஆடைகள்தான்!*

*மனித மனங்களைப் புரிந்து கொண்ட அந்தக் கடைக்காரர் விளம்பரத்தில் ஜெயித்தார்.*

★ **பாடகர் எஸ்.பி.பியின் பேட்டி பார்த்தீர்களா?**

-வ.மங்கள கௌரி, கொழும்பு-13.

*தலை கனத்தவர்களிடம் இருப்பது தற்பெருமை என்றால், உடம்பு கனத்தவர்களிடம் இருப்பது தன்னடக்கம் போலும்! அடடா, தலை வீங்காமல் தன்னடக்கம் வீங்கிய மனிதர்!*

*தமிழ் உச்சரிப்புப் பற்றியெல்லாம் சொன்னபோது புல்லரித்தது உண்மை.*

★ **நடிகர் சூர்யாவின் விலாசத்தையும், போன் நம்பரையும், அவர் குடும்பத்தைப் பற்றியும் விபரம் தயவு செய்து தர முடியுமா? பல தடவை கேட்டும் ஏன் பதில் இல்லை?**

-எஸ். ப்ரியா, ஸ.்.பாத், குவைத்.

*இல.7, கிருஷ்ணாராவ் தெரு, சென்னை 600 017. தொலைபேசி: 4340899. தந்தை நடிகர் சிவகுமார். சூர்யாவுக்கு ஒரு தங்கையுமிருக்கிறார்.*

*எல்லாக் கேள்விகளுக்கும் உடனுக்குடன் பதில் தர முடியாமைக்கு இட வசதியின்மைதான் காரணம். (யாழ்ப்பாணம் எஸ். அவனிபாஜனனுக்கும் இதுவே பதில்.)*

★ **என் ஆசை மச்சாள் பூமிகாவின் விலாசத்தைத் தருவீர்களா சிந்தியா?**

வி.தினேஷ். கோளாவில் 03.

*தொலைந்த உறவினர்களைத் தேட, நீங்கள் பொலிஸ் நிலையம் சென்று புகார் செய்ய வேண்டும்.*

★ **வணக்கம் சிந்தியா, நம்மிடையே உள்ள வளர்ந்த கலைஞர்கள் ஏன் இளையவர்களை வளர விடுவதில்லை?**

குமாரன் பிரசாத்குமார், பண்டாரவளை.

*ஏனில்லை? தங்களைவிட மகா மட்டமானவர்களையும்; தங்கள் புகழை ஒருபோதும் மிஞ்சமாட்டார்கள் என்று உறுதியாகத் தெரிந்தவர்களையும் தங்களுக்குக் கீழேயே உயர உயர வளர்வதற்கு உதவி வருகிறார்களே!*

# மன்னாதி மன்னன்

127

இராஜகுமாரன்

## வித்தகனாக மாறிய மூடன்

மாமன்னர் விக்கிரமாதித்தனுடைய ஆட்சிக் காலத்தில், அம் மன்னர் வீற்றிருந்து நீதி நெறி முறைகள் தவறாது ஆட்சி புரிந்து வந்த காலத்தில் அவரால் பயன்படுத்தப்பட்ட அரியாசனத்தைக் கண்டு பிடித்துத் தனது அரண்மனைக்குப் போஜ மன்னர் கொண்டு வந்து சேர்த்தார்.

அந்த அரியாசனத்தில் தானும் அமர்ந்து அரச பரிபாலனம் செய்ய வேண்டுமென்ற ஆசையில் அவர் எடுத்துக் கொண்ட முயற்சி கடந்த இருபத்து நான்கு நாட்களில் எதுவித பலனும் அளிக்கவில்லை.

அரியாசனத்தில் முப்பத்திரண்டு படிகள் இருந்தன அவை ஒவ்வொன்றிலும் அந்தந்தப் படிக்குக் காவலாக ஒவ்வொரு பதுமை இருந்தது. போஜ மன்னர் அரியாசனத்தின் படிக்கட்டுகளில் ஏற முயலும் போதெல்லாம் அப் படிக்கட்டுகளில் இருந்த பதுமைகள், விக்கிரமாதித்தனின் வீரதீர பராக்கிரமங்களைப் பற்றிக் கதைகளைக் கூறி வந்தன.

இவ்வாறு கடந்த 24 நாட்களும் பதுமைகள் கூறிய கதைகளைக் கேட்டுத் தன்னுடைய முயற்சியில் போஜ மன்னர் பின்வாங்கி வந்தார். இருபத்தைந்தாம் நாள் காலையில் தன்னுடைய காலைக்கடன்களை முடித்துவிட்டு அரியாசனத்தில் இருபத்து நான்கு படிகளையும் ஏறிக் கடந்து இருபத்தைந்தாம் படிக்கட்டில் ஏறினார்.

அந்தப் படிக் கட்டில் காவலாக நின்ற மோகனகாந்தவல்லிப் பதுமை மன்னருடைய வேகத்தைத் தடுத்து நிறுத்தியது. கைகொட்டிச் சிரித்தது. "போஜ மன்னரே எனது சகோதரிகள் இத்தனை நாட்களும் மாமன்னர் விக்கிரமாதித்த பூபதியின் பராக்கிரமங்களை எடுத்துக் கூறும் கதைகளைச் சொல்லக் கேட்டீர். அப்படி இருந்தும் இன்றும் நீர் அரியாசனத்தில் ஏறி அமரும் நோக்குடன் மீண்டும் வந்துள்ளீர். இன்றும் உமக்கு அந்த மாமன்னரின் சிறப்பியல்புகளை விளக்கும் கதை ஒன்றினைக் கூற இருக்கிறேன், அதனையும் கேட்டுப்பாரும்" என்று கூறியது. போஜ மன்னரும் கதை கேட்க ஆயத்தமானார்.

விசய நகரத்தில் பிரபலமான ஒரு வேதியரின் மகனான நந்தகோபன் வாழ்ந்து வந்தான். அவனுடைய தந்தை எவ்வளவோ சொல்லியும் அவன் கல்வி கற்கவோ, தன் குலத்திற்கேற்ப சாஸ்திரங்களைக் கற்கவோ நாட்டம் கொள்ளவில்லை. வீணாகப் பொழுதைக் கழித்தான். ஒருநாள் அவனுடைய தந்தை கோபம் கொண்டு அவனைத் திட்டினார் "வேத சாஸ்திரங்களை முறைப்படி கற்காமல் திரியும் நீ என்னுடன் இருக்கலாகாது, என் கண்ணில் படாமல் எங்காவது போய்த் தொலைந்து விடு" என்று கடும் கோபத்தில் பேசினார். அன்றே நந்தகோபன் வீட்டைவிட்டு வெளியேறினான்.

பல இடங்களையும் சுற்றி விட்டு விந்திய நகரம் போய்ச் சேர்ந்தான். அங்கிருந்த ஆலயமொன்றில் ஒரு மூலையில் களைத்துப் போய் படுத்துக் கிடந்த அவனை சாஸ்திர சூஸ்திரர் என்ற ஒரு வித்துவான் எழுப்பினார். தன்னுடன் அழைத்துச் சென்று உணவளித்து அவருடனேயே தங்கி இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அவரிடம் வேத சாஸ்திரங்களைக் கற்பதற்காகப் பல இளைஞர்கள் தினசரி வருவார்கள். அவர்களுடனேயே அமர்ந்து படிக்கும்படி சாஸ்திரசூஸ்திரர் கேட்டுக் கொண்டார்.

அவருடைய சொல்லிற்கு மதிப்பளித்து நந்தகோபன் வேத சாஸ்திரங்களைக் கற்றுக் கொண்டான். மிகச் சிறந்த வித்தகனாக அவன் மாறினான்.

வித்துவானும் நந்தகோபனைத் தமது சீடனாக ஏற்றுக் கொண்டார்.

குருவின் உத்தரவுப்படி நந்தகோபன் தேச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டான். திருக்காளாத்தி நகரை வந்தடைந்து ஈசனை வழிபட்டான். அங்கு ஓர் அழகிய இளம் பெண் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருப்பதைக் கண்டான். அவள் அழகில் மயங்கினான்.

அவளைப் பற்றி அங்கிருந்தவர்களிடம் விசாரித்தான். அவள் அந்த நகரத்திலுள்ள தாசி நவமோகினி என்று கூறினர். அவனும் அவளை நோக்கிப் புன்னகை புரிந்தான். அவளை அடைய வேண்டுமென விரும்பினான்.

ஆனால் அவளை அணுக வேண்டாமென்று அங்கிருந்தோர் அவனை எச்சரித்தனர்.

அவளை ஒரு சூழ்ச்சிக்காரி என்றும் அவள் மீது மையல் கொள்வோரைத் தன் இல்லத்திற்கு அழைத்து அவளுடன் வசிக்கும் ஓர் அரக்கனுக்கு இரையாக்கி விடுவாள். இவ்வாறு நூற்றுக் கணக்கான இளைஞர்கள் அவளால் மடிந்து விட்டனர் என்று எச்சரித்தனர். இதனால் தன்னுடைய எண்ணத்தைக் கைவிட்டு விட்டுத்திருக்காளத்தியில் இருந்து புறப்பட்டு அவனுடைய தேச சஞ்சாரத்தைத் தொடங்கினான்.

விசய நகரம் சென்று தனது இல்லத்தை அடைந்தான். முழு மூடனாக வீட்டை விட்டு வெளியேறிய தன் மகன் பெரும் வேத வித்தகனாகத் திரும்பி வந்ததைக் கண்டு நந்த கோபனுடைய தந்தை பெரும் மகிழ்சியுடன் வரவேற்றார்.

(மன்னன் வருவான்...)

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

என்ன, எங்க வாய் பாத்துக் கொண்டிருக்கிறீங்கள்? உங்களத்தான் கேக்கிறன். புதினப் பேப்பர வாசிச்சுப் போட்டு, ஜனாதிபதிய ரணில் கவிட்டாரா, இல்ல ஜனாதிபதி ரணில மண்கவ்வ வைச்சிட்டாரா, பீரிஸ், யு.என்.பி.க்கு யுக்தி சொல்லிக் குடுக்கிறதா வெளிக்கிட்டு, மொக்குப் பட்டம் கட்டிப் போட்டாரா, எண்டெல்லாம் இந்தச் சுப்பிரீம் கோர்ட் தீர்ப்பை வைச்சு மண்டையப் பிளந்து கொண்டிருப்பீங்களெண்டது எனக்குத் தெரியும்.

ஏனெண்டால் நானும் அப்பிடிப் பிளந்து பிளந்து, இப்ப என்ர மண்டையில பிளக்க இடமில்லாமல் முன் வீட்டுக்காரற்ர மண்டையப் பதம் பாத்திட்டுத்தான் திண்ணையில வந்து குந்தினனான்.

குந்தினப் பிறகு குசினிக்க இருந்து மனிசிக்காறி போட்ட சத்தத்திலதான் எனக்கும் இம்மை வெளிச்சுது.

என்னடாவெண்டால், நாங்கள் இங்கால அரசியல், கிரிக்கெட்டெண்டு மெய்மறந்திருக்க, அங்கால விலைகளெல்லாம் உச்சக் கொப்பில ஏறி நிண்டு பெப்பே காட்டுது. பெற்றோல், டீசல் விலை சொல்லிக் கொள்ளாமல் கூட, அதச்சாட்டி போக்கு வரத்துச் செலவு கூடிட்டுதெண்டுகொண்டு சாமாங்களெல்லாம் விலை கூட வெளிக்கிட்டுது. காஸ் ம் விலை கூடுது. அதோட கதை முடியுமெண்டு பாத்தால் ரெலிபோன் கிலிபோனெல்லாம் இன்னொரு வழத்தால கூடுது.

முந்தித்தான் ஏதோ யுத்தத்தாலதான் விலையேற்றமெண்டு காரணம் சொன்னாங்கள். இப்ப இந்தா யுத்தம் நிண்டுட்டுது, சமாதானம் வந்திட்டுதெண்டிறாங்கள், ஆனால் ஏறின விலை ஏறிக்கொண்டே போகுதேயொழிய இறங்கின பாடாக் காணேல்லை.

இப்பிடி அரசாங்கம் விலையக் கூட்டினால் நாங்கள் பொதுமக்கள் எண்ட வகையில அதுக்கு என்ன மாற்று நடவடிக்கைகளை எடுக்கலாமெண்டு கொஞ்சம் மூளையப் போட்டுக் குடைஞ்சு பாத்திட்டு கசிஞ்ச ஐடியாக்கள இங்க தாறன், பிளீஸ், திங்க் இட் ஓவர்.

காஸ் விலை கூடினால் வலு சிம்பிள், எல்லாரும் விறகுக்கு மாற வேண்டியதுதான். நானும் ஒரு கட்டு விறகத் தூக்கிக்கொண்டு "பாத்தாப் பசுமரம், படுத்துவிட்டா நெடுமரம், சேர்த்தா விறகுக்காகுமா, அடி தங்கமே, தீயிலிட்டா கரியும் மிஞ்சுமா" எண்டு பாடிக்கொண்டே ஒரு பிஸ்னஸில இறங்கலாம்.

கொழும்பில எங்கால விறகெண்டு கேக்கிறீங்களா, இருக்கவே இருக்குது றெயில்வே சிலிப்பர் கட்டை! கிட்டடியிலகூட கோட்டே றெயில்வே ஸ்டோரில கோடிக்கணக்கான காசுக்கு வாங்கிப்போட்டு வருஷக்கணக்காக் கிடந்து உக்கிற சிலிப்பர் கட்டைகள குவியல் குவியலாக் காட்டினாங்களே, அத நாளுக்கொண்டா உருவி, நாலு துண்டாப் பிளந்து வித்தாலே போதும்.

பெற்றோல், டீசல் பிரச்சினைக்கு, மாட்டு வண்டி, குதிரை வண்டி, கழுதை வண்டி, இன்னும் நாய் வண்டி, நரி வண்டியெண்டு ஓட விடுறதுதான் ஒரே வழி. அதத்தான் எங்கட மண்ணெண்ணை மகேஸ்வரன் இனிமேல் எண்ணையில்லாமல் ஓடுற காலம் வருமெண்டத முன்கூட்டியே காட்டுறமாதிரி போன அரசாங்க காலத்திலயே விலையேற்றத்துக் கெதிரா மாட்டு வண்டியில பாராளுமன்றம் போனவர்.

இந்த அரசாங்கத்தில, ஏன் போகேல்லையெண்டு கேக்காதேங்கோ, அவர் யானையையும் புலியையும் ஒரே வண்டிலில கட்டி ஓடலாமெண்டு தெண்டிக்கிறார்.

ரெலிபோன் விலை கூடினால் புராதன காலம்போல புறா விடு தூது, அன்னம் விடு தூதெண்டு துடங்க வேண்டியதுதான்.

எல்லாம்சரி, இப்பிடி அரசாங்கமே விலையக் கூட்டிக்கொண்டு போறதுக்கு நாங்கள் என்ன பதிலடி குடுக்கலாமெண்டு யாராவது யோசிச்சிருக்கிறீங்களா?

விலையக் கூட்டினால், கள்ளக் கரண்ட் எடுக்கிறது, டிக்கெட் எடுக்காமல் திருட்டுப் பயணம் செய்யிறது, முடிஞ்சவரை அலுவலகங்களிலயே ஓசி ஃபோனில பேசி முடிக்கிறது எண்டெல்லாம் கொஞ்ச ஐடியாக்கள் தரலாம். ஆனால் இதெல்லாம் உங்களால ஒழுங்காச் செய்து முடிக்க ஏலுமெண்டு நம்ப ஏலாது. பிறகு, டிக்கட் செக்கரிட்டயும், மின்சார சபையிலயும் பிடிபட்டு, தெண்டம் கட்டிப்போட்டு நிப்பீங்கள். அது முதலுக்கு மோசமா முடிஞ்சு போகும்.

மக்களெண்டிருக்கிறவையிட்ட இருக்கிற ஒரேயொரு ஆயுதம் என்னவெண்டு உங்களுக்குத் தெரியும். வாக்கு வாக்கெண்டு வாக்குறுதி வழங்கியே உங்களிட்டயிருந்து வாங்கிக் குவிச்சுக் கொண்டு இந்த அரசியல்வாதிகளெல்லாம் பாராளுமன்றத்தில சீற்று சீற்றாப் பிடிக்கிற அதே வாக்குரிமைதான் ஒரேயொரு துருப்பு. ஆனால் அதையும் இப்ப யாரும் பொருட்டா மதிக்கிறதில்லை. பாதி வாக்க, காசுக்கு வாங்கிடுறாங்கள். மீதி, செத்தவங்களிட்டயும், வெளிநாடு போனவங்களிட்டயுமிருந்தே வாரிச் சுருட்டிக் கொள்ளுறாங்கள்.

எங்களுக்கு மேல விலைகளைச் சுமத்திற அரசாங்கத்தப் பழி தீர்க்கிறதெண்டால் எங்களுக்குத் தெரிஞ்ச, சோலியில்லாமல் செய்யக்கூடிய ஒரே காரியம் சனத்தொகையப் பெருக்கிறதுதான். ஆண்டாண்டு காலமா ஆசிய நாடெல்லாத்திலயும் நாங்கள் தொடர்ச்சியாச் செய்து வாற மிகப் பெரிய உற்பத்தி இதுதானே! நீ உன்ர இஷ்டத்துக்கு விலையக் கூட்டு; நாங்கள் எங்கட இஷ்டத்துக்கு சனத் தொகையக் கூட்டுறமெண்டுகொண்டு இருக்க வேண்டியதுதான். வேற என்னத்தச் செய்யலாம் சொல்லுங்கோ...?

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

27.10.2002 தொடங்கி 02.11.2002வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

துலாம் – சூரியன், வெள்ளி, புதன், விருட்சிகம் – கேது, இடபம் – இராகு.

மிதுனம் – சனி, கர்க்கடகம் – வியாழன், கன்னி–செவ்வாய்.

சந்திரன் மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் சஞ்சரிப்பார்

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விடயங்களில் கூடிய அவதானம் தேவை. பொருள் விரயம் ஏற்படும். குடும்பத்தில் சிறிது பிரச்சனை காட்டும். உத்தியோகரீதியாக ஏற்பட்டிருந்த சிக்கல்கள் மறையும். மாணவர்களுக்குக் கல்வி சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 7.

**இடபம்**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல: 5.

**மிதுனம்**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) தொழில் நிலையில் மறைமுக எதிர்ப்புண்டு. செலவு மிகுதியுடன் கருமங்கள் நிறைவேறும். உத்தியோகத்தர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மாணவர்கள் கல்வியில் கூடிய அக்கறை எடுப்பது நன்று. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 4.

**கர்க்கடகம்**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) எதிர்பார்த்த கருமங்கள் நிறைவேறும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் தோன்றும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தர்கள் மனக் கவலை அடைவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 3.

**சிங்கம்**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) மனக்குறை நீங்கும். தொழில் நிலையில் உயர்வுண்டாகும். பெரியோர் உதவியுண்டு. உத்தியோகத்தர்கள் எதிலும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: வெள்ளி.
அதிஸ்ட இல.: 6.

**கன்னி**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழிலில் மறைமுக எதிர்ப்புண்டாகும். வீண் மனஸ்தாபங்களை விலக்கிக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் மேலதிகாரிகளினால் தொல்லையுண்டாகும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 2.

**துலாம்**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்) தொழில் நிலையில் உயர்ச்சியும், பணவரவும் உண்டாகும். பெரியோர்களின் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பாரா மாற்றம் சிலருக்கு ஏற்படும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் கவனமுடன் நடந்து கொள்ளவும்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

**விருட்சிகம்**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) முயற்சி பலிதம். காரியானுகூலம். கௌரவம். பொருள் வரவுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்குச் கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 4.

**தனு**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) செய்தொழில் நன்மையும், காரியானுகூலமும் உண்டாகும். வெளியிடப் பயணங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளவும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் மந்த நிலையுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 3.

**மகரம்**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) தொழில் நிலையில் முன்னேற்றம். கௌரவம், பொருள் வரவுண்டு. உத்தியோக நிலையில் சிலருக்குப் பதவி உயர்வுண்டாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய ஊக்கமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: திங்கள்.
அதிஸ்ட இல.: 5.

**கும்பம்**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் கஷ்டம் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பொருள் வரவு சுமாராக அமையும். உத்தியோகத்தில் இருந்து வந்த கஷ்டங்கள் சிலருக்கு மறையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஸ்ட நாள்: புதன்.
அதிஸ்ட இல.: 7.

**மீனம்**
(பூரட்டாதி முன்முக்கால், உத்திரட்டாதி, ரேவதி) தொழில் விடயங்களில் முன் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. பணக் கஷ்டமும், தூரப் பிரயாணமும் உண்டு. உத்தியோகத்தர்கள் திட்டமிட்டுக் கருமமாற்றுவது சிறப்பைத் தரும். மாணவர்களுக்குக் கல்வியில் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் பெறுவர்.
அதிஸ்ட நாள்: செவ்வாய்.
அதிஸ்ட இல.: 1.

ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
2326557



இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு விமானத்தில் சென்று கொண்டிருந்த சமயம் அவரது விமானத்தைப் பாகிஸ்தானில் தரையிறக்க விடாமல் அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி நவாஸ் ஷரீப் சதி செய்தார் எனக் கூறி அவரைக் கைது செய்து இரத்தம் சிந்தாத இராணுவப் புரட்சி ஒன்றின் மூலம் பாகிஸ்தானின் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஜெனரல் பர்வேஷ் முஷாரப்பிற்குக் கடந்த ஒரு வருடம் மோசமான சோதனைக் காலமாக அமைந்திருந்தது.

அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்கனது வண்ண நகைகள் மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
43631



செப்டெம்பர் 11ம் திகதி அமெரிக்கத் தாக்குதலின் பின்னர் ஆப்கானிஸ்தானைத் தாக்க அமெரிக்கா பாகிஸ்தானைத் தளமாகப் பயன்படுத்தியபோது அந்த நாட்டில் உள்ள இஸ்லாமிய அடிப்படைவாதிகள் முஷாரப்பிற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள்.

மறுபுறம் காஷ்மீர் பிரச்சனை தொடர்பில் இந்தியாவின் அழுத்தமும் அதிகரித்தது. ஆப்கானில் பொது மக்கள் கொல்லப்படும்போது முஷாரப்பிற்கு எதிரான கருத்து பாகிஸ்தானில் வலுப்பெறத் துவங்கியது.

அப்படியிருந்தும் அமெரிக்காவின் ஆதரவு இருந்ததால் முஷாரப் தாக்குப்பிடித்தார். ஆப்கானில் அமெரிக்கப் படையினரால் கைது செய்யப்பட்ட அல்-கைதா உறுப்பினர்களும் தலிபான் போராளிகளும் கியூபாவிற்குச் சமீபமாக உள்ள குவான்டனாமோ இராணுவத் தளத்தில் சிறை வைக்கப்பட்டனர். அங்கு இந்தக் கைதிகள் மோசமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகச் செய்திகள் வெளியானதை அடுத்து அமெரிக்காவுக்கு ஆதரவளித்துக்கொண்டிருக்கும் முஷாரப்பின் நிலை உள்நாட்டில் பெரும் நெருக்கடிக்குள்ளானது. பாகிஸ்தான் ஜெனரல் முஷாரப்பின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறதா எனச் சில இந்தியச் செய்தி நிறுவனங்கள் கேள்வி எழுப்பும் அளவுக்கு ஒரு நிலையில் அவர் ஸ்திரமற்றுக் காணப்பட்டார். ஆனால் ஒரு ஆட்சியாளருக்குரிய திடமான ஆளுமையும் யதார்த்தமான சிந்தனையும் முஷாரப் தன்னை மீண்டும் உறுதிசெய்துகொள்ள வழி வகுத்தது.

## ஏமாற்றுவித்தை

கடந்த வாரம் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. அது ஒரு ஜனநாயகக் கேலிக்கூத்தாக அமையப் பெற்றபோதும் சர்வதேச சமூகம் அந்தத் தேர்தலை அங்கீகரித்திருக்கிறது. இப்போது ஜனநாயகத்தின் பேரில் ஜெனரல் முஷாரப் பாகிஸ்தான் ஜனாதிபதியாக இன்னும் பல வருடங்கள் ஆட்சி செய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார். மேலே உள்ள படத்தில் ஜனாதிபதி முஷாரப்பையும், குவான்டனாமோ படைத்தளத்தில் அல்-கைதா போராளி ஒருவரை அமெரிக்கப் படையினர் இழுத்துச் செல்வதை இரண்டாவது படத்திலும் காண்கிறீர்கள்.




## ஆனந்தம்

ஹெடோமி சோகா என்ற ஜப்பானிய பெண்மணியும் அவரது சகோதரியான டொமிகோ கனேகோ ஆகிய இருவரும் டோக்கியோ விமான நிலையத்தில் உணர்ச்சி பூர்வமாகச் சந்தித்துக் கொள்ளும் காட்சிதான் இது. இவர்கள் சுமார் கால் நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர் சந்திக்கிறார்கள்.

25 ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பானின் எல்லைப்புறப் பாடசாலை ஒன்றில் கற்பித்துக் கொண்டிருந்த ஹெடோமி சோகா உட்பட 13 ஆசிரியர்களை வடகொரியா கடத்திக்கொண்டு சென்றுவிட்டது. அந்த நாட்டில் தனது உளவுப் பிரிவுகளுக்கு ஜப்பானிய மொழியைக் கற்பிப்பதற்காகவே இவர்கள் கடத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். 25 ஆண்டுகளில் இந்த 13 பேருள் பலர் இறந்துவிட்டனர். மீதமிருந்த 5 பேர் கடந்த வாரம் விடுவிக்கப்பட்டனர்.

இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் வடகொரியாவினால் கடத்தப்பட்ட பலர் இன்னும் அந்த நாட்டில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். 45 ஆண்டுகளுக்கு முன்னர் கடத்தப்பட்ட ஜப்பானியர்கள் கூட வடகொரியாவில் பல்வேறு பணிகளில் பலவந்தமாக அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



மயூரி ஜெகன்மோகன்
25 10 2002

பல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் மீரான் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகன்மோகன் - ஷாமினா தம்பதிகளின் செல்வப் புதல்வி மயூரி தனது முதலாவது பிறந்தநாளை 25.10.2002 வெள்ளிக்கிழமை அன்று தமது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, பூட்டன், பூட்டி, அப்பப்பா, அப்பம்மா, ரோசப்பா, ரோசம்மா மற்றும் பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார் அனைவரும் வல்லை முத்துமாரியம்மன் அருளோடு சகல கலைகளும் கற்றுச் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

விஜயராதா, வெள்ளவத்தை.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி நர்மிதா கண்ணன் 16.10.2002

கண்ணன் - சௌரி தம்பதிகளின் செல்வப் புதல்வி நர்மிதா தனது முதலாவது பிறந்தநாளை 16.10.2002 புதன்கிழமை அன்று லண்டனில் உள்ள வீட்டில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். [illegible]

தகவல்
திருமதி. செல்வநாயகம் - அன்னம்மா
திருகோணமலை



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஒக். 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.